# LAND REFORMS

| | | |
|---|---|---|
| 9th book | Unit-2 | இந்தியா மற்றும் தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு |
| | Unit-5 | இடம்பெயர்தல் |
| 10TH vol -1 | Unit-2 | உலகமயமாதல் மற்றும் வர்த்தகம் |
| 10TH vol -2 | Unit-3 | உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து |
| 11th Economics | Unit- 9 | இந்தியாவின் மேம்பாட்டு அனுபவங்கள் |
| | Unit-10 | ஊரக பொருளாதாரம் |
| 12th Economics | Unit-3 | வேலைவாய்ப்பு மற்றும் வருமான கோட்பாடுகள் |
| | Unit-10 | சுற்றுச்சூழல் பொருளியல் |

## அலகு– 2

## இந்தியாமற்றும் தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு

**அறிமுகம்:**

உணவு, உடை, இருப்பிடம் ஆகியவை ஒவ்வொரு மனிதருக்கும் அடிப்படைத் தேவைகள் என்பதை நீங்கள் அறிவீர்கள். தற்போதைய உலகில் அந்தப் பட்டியலில் வேலைவாய்ப்பு என்ற ஒற்றையும் சேர்க்கப்பட வேண்டியது முக்கியம். இவ்வுலகில் வாழ்வதற்காக வருவாய் ஈட்ட நம் அனைவருக்கும் வேலை அவசியம். பொருளியல் செயல்பாடுகளில் மேல்நிலையில் அலுவலர்களாகவும் மற்றும் கீழ்நிலையில் தொழிலாளர்களாகவும் பங்கு பெறுவோர் ஊழியர் எனப்படுவர். இந்த ஊழியர்களைப் பணியமர்த்தி, அவர்களின் பணிக்கு ஏற்ப ஊதியம் தருவோரை, பணியமர்த்துவோர் என்று குறிப்பிடப்படுவர்.


உழைப்பாளர் குழு என்பது நாட்டு மக்களில் வேலையில் இருப்போரும், கூடவே வேலை செய்யும் திறன் பெற்ற நபர்களும் ஆவர். உழைப்பாளர் குழுவைத் கணக்கிடுவதில் 15 முதல் 60 வயது வரையிலும் உள்ளவர்களை நாம் எடுத்துக் கொள்கிறோம். 15 வயதுக்குக் குறைந்தவர்கள் குழந்தைகளாகக் கருதப்படுகின்றனர். 60 வயதைக் கடந்தவர்கள், உற்பத்தி சார்ந்த வேலையை மேற்கொள்வதற்கு உடல் ரீதியாகத் தகுதியானவர்கள் அல்ல என்பதால்

அவர்கள் உடல் உழைப்பைச் செய்ய முடியாது என விலக்கப்படுகின்றனர். மக்கள் தொகையில் பெரும்பகுதிகுழந்தைகளும் வயது முதிர்ந்தவர்களும் இருந்தால், உழைப்பாளர் குழுவின் எண்ணிக்கைக் குறைவாக இருக்கும். இதனால் நாட்டு முன்னேற்றம் மெதுவாகநடைபெறும். மேலும்,குறைந்த உழைப்பாளர்கள் குழுவானது, உழைப்பாளர் அல்லாத பெரிய குழுக்களுக்குச் சிறிய தேசிய உற்பத்தியிலிருந்து உணவளித்துப் பராமரிக்க வேண்டியிருக்கும்.

**இந்தியாவில் வேலை வாய்ப்பு அமைப்பு:**

இந்தியாவில் வேலைவாய்ப்பின் தன்மையானது பலபரிமாணங்கைளக் கொண்டது. சிலருக்கு ஆண்டு முழுவதும் வேலை கிடைக்கும். ஒரு சிலருக்கு ஓராண்டில் சில மாதங்களுக்கே வேலை கிடைக்கும்.

முதன்மைத் துறை அல்லது விவசாயத் துறை, இரண்டாம் துறை அல்லது தொழில் துறை, மூன்றாம் துறைசார்புத் துறை அல்லது சேவைத் துறை எனப் பொருளியல் வருவாய் ஈட்டும் துறைகள் மூன்றாகவகைப்படுத்தப்பட்டுள்ளது.




பொருளியல் அமைப்பின் வெவ்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கையை வேலைவாய்ப்பு அமைப்பு குறிக்கிறது. வேலைப் வாய்ப்பு முறைகள் நாட்டுக்கு நாடுமாறுகின்ற போதிலும் இந்தியா போன்றவளரும் நாடுகளில் உழைப்பாளர் குழ பெரும்பகுதி முதன்மைத் தொழிலிலும் சிறிய குழுக்கள் இரண்டாம், மூன்றாம் நிலைத் தொழில்களிலும் ஈடுபட்டிருப்பதைக் காணலாம். நன்கு வளர்ந்தநாடுகளில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள உழைப்பாளர் குழுவின் பங்கு சிறியதாகவும், தொழில் மற்றும் சேவை துறைகளில் ஈடுபட்டிருக்கும் உழைப்பாளர் குழுவின் பங்கு பெரிதாகவும் இருக்கும்.

இந்திய வளர்ச்சிக் கொள்கையின் ஒரு முக்கியமான கூறாக வேலைவாய்ப்பு எப்போதுமே இடம் பெற்றுள்ளது.


1972 – 73 ஆம் ஆண்டுகளில் தொடங்கி கடந்த நான்கு பாத்தாண்டுகளில் வேலைவாய்ப்பு வளர்ச்சி, சராசரியாக 2% அளவுக்கு உயர்ந்துள்ளது.

இடைக்கால வரலாற்றுக் காலத்தில் இந்தியாவின் டெல்லிசுல்தான் பெரோஸ் ஷா துக்ளக், வேலை வாய்ப்பின்மைச் சிக்கலைத் தீர்ப்பதற்காக “வேலைவாய்ப்பு அலுவலகத்தை” அமைத்தார்.

## வேலைவாய்ப்பின் வகைகள்:
## ஒழுங்கமைக்கப்பட்ட துறைகள்:

பதிவு செய்யப்பட்டதும், அரசாங்க விதிகளையும் ஒழுங்கு முறைகளையும் பின்பற்றுவதும், ஊழியர்களையும் ஊழியர் சங்கங்களையும் கொண்டுள்ள துறை ஒழுங்கமைக்கப்பட்டத் துறை எனப்படும். இந்தியாவில் வங்கிகள், ரயில்வே, காப்பீடு, உற்பத்தித் உற்பத்தி தொழிற்சாலைகள், மத்திய மற்றும் மாநிலஅரசு ஊழியர்களைக் கொண்டு செயல்படும் துறைகள் ஒழுங்கமைக்கப்பட்டத் துறைகள் என கூறலாம். இந்தத் துறைகள், சட்டத்திலுள்ள குறிப்பிட்டவிதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளின் படிசெயல்படுகிறது. இந்த ஊழியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு உண்டு என்பதோடு அமைப்புரீதியாக ஒழுங்கமைக்கப்படாத துறையில் இருப்பவரைக் காட்டிலும் அதிக ஊதியம் பெறுகின்றனர்.

ஒழுங்கமைக்கப்பட்ட துறையில் நல்லஊதியம், நிர்ணயிக்கப்பட்ட வேலை நேரம்,ஊதியத்துடன் கூடியவிடுமுறை, மருத்துவ உதவித்தொகை மற்றும் காப்பீடு போன்றவை வழங்கப்படும்.





ஆதாரம் : NSSO

## ஒழுங்கமைக்கப்படாத துறைகள்:

அமைப்புரீதியாக ஒழுங்கமைக்கப்படாததுறைகள் என்பதுவீட்டுஉபயோகப் பொருள்கள், சிறு மற்றும் குடிசைத் தொழில்கள் போன்றவற்றைக் கூறலாம். இதற்கு விதிகளும் ஒழுங்குமுறைகளும் இருந்தாலும் அவை பின்பற்றப்படுவதில்லை. இவற்றில் வேலை செய்வோருக்குக் குறைந்த கூலி கொடுக்கப்படுவதோடு பல நேரங்களில் தொடர்ச்சியாக வேலையும் இருக்காது. பெரும்பாலும் அவர்களுக்குக் ஊதியத்துடன் விடுப்பு, விடுமுறைநாட்கள், மருத்துவ விடுப்பு போன்றவை இருக்காது. வேலை உத்தரவாதம் கிடையாது. வேலையில்லாத போது அவர்கள் தொழில் கூடங்களிலிருந்து வெளியேறுமாறு கேட்டுக் கொள்ளப்படுவார்கள். தெருக்களில் விற்பனை செய்வோர், பழுதுகள் சரி பார்ப்போர், சிறிய அளவிலானதொழில் செய்வதில் ஈடுபட்டுள்ள ஏராளமான எண்ணிக்கையிலான மக்களை இந்தத் துறை உள்ளடக்கியுள்ளது.

அமைப்புரீதியாக ஒழுங்கமைக்கப்படாத துறையில் வேலைவாய்ப்பு வரையறைகள் நிலையானதாக, ஒழுங்கு படுத்தப்பட்டதாக இல்லை. தொழிலாளர்களுக்குச் சிறப்பு ஆதாயங்களோ வேலை நிரந்தரமோ கிடையாது. இந்த நிறுவனங்கள் அரசாங்கத்தில் பதிவுபெற்றவை அல்ல.

**பொதுமக்கள் துறையும் தனியார் துறையும்:**
சொத்துகளின் உரிமையாளரையும், சேவைகள் அளிப்பதற்குப் பொறுப்பானவரையும், அடிப்படையாகக் கொண்டு, பொருளாதார நடவடிக்கைகளின் அடிப்படையில் பொதுத்துறை மற்றும் தனியார் துறை என வகைப்படுத்தப்பட்டுள்ளன.




**பொதுத்துறை மற்றும் தனியார் துறைக்கான வேறுபாடுகள்:**

| வ.எண் | பொதுத் துறை | தனியார் துறை |
|---|---|---|
| 1. | சேவை நோக்கம் கொண்டது | இலாப நோக்கம் கொண்டது |
| 2. | சொத்துக்கள் அரசாங்கத்துக்குச் சொந்தம் | சொத்துக்கள் தனிநபர்களுக்குச் சொந்தம் |
| 3. | ஊதியம் அரசாங்கத்தால் வழங்கப்படுகின்றது. | ஊதியம் உரிமையாளரால் வழங்கப்படுகின்றன |

**எடுத்துக்காட்டுகள்:**
**பொதுத்துறை நிறுவனங்கள்:**
- நெய்வேலி பழுப்புநிலக்கரி நிறுவனம்
- இந்திய உருக்கு ஆணையம்
- பாரத தொலைபேசி நிறுவனம்

**தனியார் துறை நிறுவனங்கள்:**
- டிவிஎஸ் மோட்டார் நிறுவனம்
- அசோக் லேலண்ட்
- டாடா இரும்புமற்றும் எ∴கு தொழிற்சாலை

## தற்போதைய வேலைவாய்ப்பு போக்கு:

சமீப ஆண்டுகளில் வேலைவாய்ப்பு அமைப்பில் ஒருமாறுதல் எற்பட்டுள்ளதோடு இது பணியமர்த்துவோர்,அவர்களின் ஊழியர்களிடையே அதிகநெகிழ்ச்சியோடு பணிபுரியும் முறையை வளர்த்தெடுக்க உதவியது. தற்கால வேலைவாய்ப்பு போக்குகளாவன.

1. அதிகரித்து வரும் சுய-வேலை வாய்ப்பு
2. நிறுவனங்கள் ஒரு சில நிரந்தர ஊழியர்களையே பயன்படுத்துல் மற்றும் குறுகிய கால ஒப்பந்தப் பணிகளைத் தருவதும் ஆகும்.
3. பகுதி நேர வேலை வாய்ப்பில் ஒரு வளர்ச்சி இருந்து வருகிறது. மக்களின் வாழ்க்கை முறையே இதற்குக் காரணமாக இருக்கலாம்.

## தமிழகத்தில் வேலைவாய்ப்புப் போக்குகள்:

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒரு கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டுள்ள போதிலும் தமிழகத்தில் விவசாயமே அதிகம் பேருக்கு வேலையளித்துக் கொண்டிருக்கிறது இதற்குக் காரணம், விவசாயமல்லாத துறைகள், உழைப்பாளர்கள் குழு தொழில்களை மாற்றி கொள்வதற்குப் போதுமான அளவுவேலைவாய்ப்பை உருவாக்கவில்லை. தமிழ் நாட்டின் வேலைவாய்ப்பு வளர்ச்சியின் பெரும்பகுதி, குறைந்த வருமானங்களை அளிக்கின்ற அமைப்புரீதியாக ஒழுங்கமைக்கப்படாத முறை சாரா துறைகளின் பங்களிப்பாகவே உள்ளது.

**இருவேல்பட்டுவில் வேலைவாய்ப்பு: ஒரு கள ஆய்வு:**


வேலை வாய்ப்பு நிலவரங்களில் ஏற்படும் மாற்றத்தைத் தேசிய அல்லது மாநில அளவில் மட்டும் தான் புரிந்துகொள்ள முடியும் என்றில்லை, கிராமத்தை ஆய்வு செய்வதிலிருந்தும் புரிந்து கொள்ளலாம். இரு வேல் பட்டு என்பது தமிழ்நாட்டில், விழுப்புரம் மாவட்டத்திலுள்ள ஒரு கிராமமாகும். இந்தக் கிராமம் 100 ஆண்டுகளுக்கும் அதிகமாக அறிஞர்கள் பலராலும் ஆய்வு செய்யப்பட்டு வந்துள்ளது. இந்தகிராமம் ஸ்லேட்டர் கிராமம் என்றும் கூறப்படும், ஏனெனில், சென்னைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றி வந்த கில்பர்ட் ஸ்லேட்டர் என்பவர் முதன் முதலில் தனது மாணவர்களுடன் கள ஆய்வு செய்வதற்காக இந்தகிராமத்திற்கு 1916 ஆம் ஆண்டு சென்றார். காலப் போக்கில் பல ஆய்வாளர்கள் கிராமத்தவர்களின் வேலை குறித்து கணக்காய்வு செய்து, கிராமத்திலுள்ள ஒவ்வொருவர் குறித்தும் மேலும் பலவிவரங்களைச் சேகரித்துள்ளனர்.

இந்தக் கிராம வளர்ச்சியின் காரணம் கிராம மக்களிடையே ஆரம்ப சுகாதாரநலம், பள்ளிகள் அமைத்தது, பொது விநியோக அமைப்பு ஆகியவற்றின் மீது சமூகப் பாதுகாப்பு விழிப்புணர்வை அரசாங்கம் அவர்களுக்கு ஏற்படுத்தியது காரணமாகும். இந்தக் கிராமம் பல மாறுதல்களுக்கு உட்பட்டுள்ள போதிலம் இன்னமும் அவர்களின் வேலை வாய்ப்புக்கு முக்கியமாக விவசாயத்தையே சார்ந்துள்ளது. பின்வரும் அட்டவணையைப் பாருங்கள். 1981 ஆம் ஆண்டில் 100 குடும்பங்களில் 24 குடும்பங்கள் விவசாய மல்லாத வேலைகளில் ஈடுபட்டிருந்ததைக் காணலாம். 2008 ஆம் ஆண்டில் விவசாயமல்லாத வேலைகளில் இருந்த குடும்பங்களின் எண்ணிக்கை 41 ஆக உயர்ந்துள்ளது. 1981 – 2008 காலத்தில் விவசாயத்தில் - விவசாயக் கூலிகளாகவும்,

பயிரிடுவோராகவும் - ஈடுபட்டிருந்த குடும்பங்களின் விகிதம் குறைந்துள்ளது. எனவே விவசாயம் அல்லாத தொழிலில் ஈடுபடுபவர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை காணலாம்.

**இருவேல˙பட்டுவில் இருந்த குடும்பங்களின் வேலைவிவரங்கள் (சதவீதத்தில்)**

| தொழில் | குடும்பங்கள் % | |
|---|---|---|
| | 1981 | 2008 |
| பயிரிடுவோர் | 42 | 33 |
| விவசாயக் கூலிகள் | 32 | 26 |
| விவசாயமல்லாத தொழிலாளர்கள் | 24 | 41 |
| மொத்த குடும்பங்கள் | 100 | 100 |



# அலகு– 5

# இடம்பெயர்தல்

**அறிமுகம்:**

**இடம்பெயர்தலின் கருத்துப் படிவம்:**

கிராமம் அல்லது நகரம் என அனைத்து விதமான குடியிருப்புப் பகுதிகளிலும் பிறப்பு, இறப்பு மற்றும் இடம் பெயர்தலின் காரணமாகமக்கள் தொகையில் மாற்றம் ஏற்படுகின்றது. மக்கள்தொகை மாற்றத்தின் இம்மூன்று கூறுகளில் பிறப்பும் இறப்பும் கணக்கிடக்கூடிய வகையில் அமைந்துள்ளவை. அதே சமயத்தில் இடம் பெயர்தல் என்பது கணக்கிடுத மற்றும் இடம் பெயர்தலின் காரணமாக மக்கள் தொகையில் மாற்றம் ஏற்படுகின்றது. மக்கள்தொகை மாற்றத்தின் இம்மூன்று கூறுகளில் பிறப்பும் இறப்பும் கணக்கிடக் கூடிய வகையில் அமைந்துள்ளவை. அதே சமயத்தில் இடம் பெயர்தல் என்பது கணக்கிடுதல் மற்றும் வரையறைப் படுத்துவதில் அதிகளவிலான சிக்கல்களை உருவாக்குகிறது. பெரும்பாலும் அவைரும் அதிகமான நேரங்களில் ஓர் இடம் விட்டு இன்னொரு இடம் நகர்ந்து கொண்டே இருப்பதால் இடம் பெயர்தலுக்கான நகர்வு எது என்பதை வரையறுப்பது சுலபமான காரியமாக இருப்பதில்லை.

இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பில் இடம்பெயர்வு இரண்டு அடிப்படைகளில் கணக்கிடப்படுகிறது.

1. பிறப்பிடம் அடிப்படையில் - கணக்கெடுப்பின் போது இருக்கும் இடமும் பிறந்த இடமும் வேறுபட்டிருந்தால் வாழ்நாள் இடப்பெயர்வு என்று அழைக்கப்படுகிறது.
2. வாழிடம் அடிப்படையில் - கணக்கெடுப்பின்போது இருக்கும் இடமும் கடைசியாக வாழ்ந்த இடமும் வேறுபட்டிருந்தால் வாழிட அடிப்படையிலான இடப்பெயர்வு என அழைக்கப்படுகிறது.

**இந்தியா மற்றும் தமிழ்நாட்டில் உள்ள இடப்பெயர்தலின் பரவல்:**

2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி இந்தியாவின் மொத்தமக்கள் தொகையான 121 கோடி மக்களினல் 45 கோடிமக்கள் வாழ்தலின் அடிப்படையில் இடம் பெயர்ந்தவராகக் கணக்கிடப்பட்டுள்ளது. அதேபோல் 2011 கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மொத்த 7.2 கோடி மக்களில் 3.13 கோடி மக்கள் இடம் பெயர்ந்தவர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது நாட்டின் இடம் பெயர்வு 37% இருந்த சமயத்தில், தமிழ்நாட்டின் இடம்பெயர்வு உச்சமாக 43%திகழ்ந்தது.

பொதுவாக இடப்பெயர்வு நகரப் பகுதிகளோடு மட்டுமே தொடர்பு படுத்தப்படுகிறது. ஆனால், இந்தியாவிலும் தமிழகத்திலும் இடப்பெயர்வின் பரவல் நகர்ப்புறங்களில் இருந்தைவிடகிராமப்புறங்களில் மிகஅதிகமாகக் காணப்படுகிறது. 2011-ல் இந்தியாவில் கிராமப்புறமக்கள் 37% இடம் பெயர்ந்தவர்களாகக் கணக்கிடப்படும் அதேசமயத்தில், நகர்ப்புற இந்தியாவில் இடம் பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை27%உள்ளது. தமிழகத்தில் 41%

கிராமப்புறங்களில் இடம் பெயர்ந்தவர்களாகவும்,35%நகர்ப்புறங்களில் இடம் பெயர்ந்தவர்களாகவும், 35% நகரப்புறங்களில் இடம் பெயர்ந்தவர்களாகவும் 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் தெரியவருகிறது. அதாவது நகர்ப்புறங்களை விட மக்களின் நகர்வு கிராமப்புறங்களில் அதிகமாகக் காணப்படுகிறது.

மேலும் இடப்பெயர்வு பெரும்பாலும் பெண்களை விட ஆண்களோடு மட்டுமே தொடர்பு படுத்தப்படுகிறது. ஆனால் தரவுகளை வைத்து ஆராயும் போதுமிக அதிக சதவிகித இடப்பெயர்வு ஆண்களைவிட பெண்களில் மட்டுமே காணப்படுகிறது. 2011 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்தவர்களின் ஒட்டுமொத்தக் கணக்கில் 53%பெண்கள் இடம்பெயர்ந்தவர்களாகவும், ஆண்களில் 23% இடம் பெயர்ந்தவர்களாகவும் இருக்கின்றனர். இதே காலகட்டத்தில் தமிழகத்திலும் இம்மாதிரியான ஒரு சூழ்நிலையே காணப்படுகிறது. பாதிக்கும் மேற்பட்ட, அதாவது 52%பெண்கள் இடம் பெயர்ந்தவர்கள் என்றும் ஆண்களில் 35%பேர் இடம் பெயர்ந்தவர்கள் என்றும் காணக்கிடைக்கிறது.

பெண்களில் அதிக அளவிலான இடப்பெயர்வு காணப்படுவதுஏன்? இந்தியாவில் 70% பேர் தமிழ்நாட்டில் 51%பேர் அவர்களது இடப்பெயர்விற்கான காரணமாகத் திருமணத்தை குறிப்பிடுகின்றனர் பெண்கள். திருமணத்தை குறிப்பிடுகின்றனர் பெண்கள் இந்தியாவிலும் தமிழகத்திலும் திருமணமும் திருமணம் சார்ந்த இடப்பெயர்வும் பெண்களின் அதிக அளவிலான இடப்பெயர்வுக்கு முக்கிய காரணமாக விளங்குகிறது. வேலையம் வேலை வாய்ப்பும் ஆண்களுக்கு இடையில் இடப்பெயர்விற்கான உந்துசக்தியாக விளங்குகிறது. 2011 ல் இந்தியாவில், ஆண்களில் 28%பேர் தமிழகத்தில் 26%பேர் இடப்பெயர்வுகான முக்கிய காரணமாக வேலையைக் குறிப்பிடுகின்றனர்.

மொத்தத்தில் 2011 கணக்கெடுப்பின் படி தமிழ்நாட்டில் ஐந்து பேரில் இருவர் இடம் பெயர்ந்தராக உள்ளனர். கிராமப்புறப் பகுதிகளிலும் பெண்களுக்கு மத்தியிலும் இடப்பெயர்வு மிக அதிக அளவில் காணப்படுகிறத. தமிழ்நாடு இடம பெயர்தலுக்கான ஒரு வரலாற்றை உடையது. வியாபாரம், வணிகம், வேலை வாய்ப்பு மற்றும் பல்வேறு காரணங்களுக்காகத் தமிழர்கள் பல நாடுகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். காலனியாதிக்கத்தின் போது தொழிலாளர்கள் வேலை தேடியும், வருமானத்திற்காகவும் பிறகாலனி நாடுகளை நோக்கி இடம் பெயர்ந்துள்ளனர். அண்மைக் காலங்களில் தமிழகத்திலிருந்து வளைகுடாநாடுகள், ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு மிக அதிக அளவில் தொழிலாளர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். 2015 ஆம் ஆண்டு தமிழகத்தில் இடம்பெயர்தலின் அளவு,தன்மைமற்றும் முறைகள் ஆகியவற்றைப் புரிந்துகொள்ள தன்னார்வலர்கள் மேற்கொண்ட ஆய்வு கீழ்க்கண்ட விவரங்களை நமக்குத் தெரியப்படுத்துகிறது.

- தமிழ்நாட்டின் மொத்த இடப்பெயர்வாளர்களில் 65ூ பேர் தமிழ்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கும், 35ூ பேர் நம் நாட்டிற்குள்ளும் இடம் பெயர்ந்துள்ளனர்.

- சென்னை மாவட்டம், அதிக எண்ணிக்கையிலான வெளி குடியேற்றப் பதிவில் முன்னிலை வகிக்கின்றது. சென்னையைத் தொடர்ந்து கோயம்புத்தூர், இராமநாதபுரம் மற்றும் திருச்சி மாவட்டங்கள் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன.

- கடலூர், கரூர், திருவண்ணமாலை, வேலூர், நாமக்கல், சேலம். திண்டுக்கல், கிருஷ்ணகிரி, நீலகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்கள் மிகக்குறைந்த அளவிலான வெளி–குடியேற்ற எண்ணிக்கையைப் பதிவு செய்துள்ளன.

இவ்வாய்வு தமிழகத்தில் இடம் பெயர்ந்தவர்களின் சேருமிடம் மற்றும் பாலினப் பிரிவுகுறித்தும் பல தகவல்களை நமக்குத் தருகின்றது.

- வெளிநாடுகளில் குடியேறுபவர்களின் 20% சிங்கப்பூரைத் தேர்வு செய்துள்ளனர். 18% ஐக்கிய அரபு எமிரேட்டிலும்,16% சவுத அரேபியா, 13% பேர் ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கும் இடம் பெயர்ந்து குடியேற உள்ளனர். மலேசியா, குவைத், ஓமன், கத்தார், ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து ஆகியவை இடம்பெயர் வாளர்கள் சேரும் நாடுகளாக 2015 ஆம் ஆண்டு ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச குடியேறுபவர்களில் 15% பெண்களாகவும், 85% ஆண்களாகவும் உள்ளனர்.

2015 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்து குடியேறு பவர்களின் கல்வித்தகுதி குறித்தகேள்விக்கு 7% கல்வியறிவு அற்றவர்கள் என்றும், 30% பத்தாம் வகுப்பு முடித்தவர்கள் என்றும், பன்னிரண்டாம் வகுப்பு வரை முடித்தவர்கள் 10%என்றும் தொழில் பயிற்சிபெற்றவர்கள் 15%என்றும் பட்டப்படிப்புபடித்தவர்கள் 11%என்றும் தொழில்கல்வி முடித்தவர்கள் 12%என்றும் முதுகலைபட்டதாரிகள் 11%உள்ளனர் என்றும் இவ்வாய்வு தெளிவுபடுத்துகிறது.


இவ்வளவு இடம்பெயர்ந்தவர்கள் மேற்கொள்ளும் வேலையின் தன்மைகுறித்தும் வெளிப்படுத்துகிறது. மிகவும் திறமைவாய்ந்தவேலைகளிலும்,சாதாரணமாகச் செய்யக்கூடிய வேலைகளிலும், நடுத்தரமான வேலைகளிலும் இவர்கள் ஈடுபடுகின்றனர்.

**இடம்பெயர்தலுக்கான காரணிகள்:**

ஒரு சமுதாயத்தில் ஏற்படும் இடப்பெயர்வின் தன்மை மற்றும் அதன் அளவினை, அச்சமுதாயம், அடைந்த வளர்ச்சியின் போக்கைக் கொண்டே தீர்மானிக்கப்படுகிறது. பொருளாதாரத்தில் விவசாயம் மற்றும் தொழில்துறைகளால் ஏற்பட்டிருக்கக கூடியவளர்ச்சியின் வீதங்கள் மற்றும் அதன் அளவுகோலைக் கொண்டே இடப்பெயர்வின் வடிவங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன.

இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் விவசாயம் மற்றும் தொழில் துறையில் கடந்த ஆண்டுகளில் வளர்ச்ச ஏற்பட்டு இருந்த போதிலும் இவ்வளர்ச்சியானது சொத்து மற்றும் வருமானப் பகிர்வில் உள்ளஏற்றதாழ்வுகளைச் சமன் செய்யும் விதமாக அமையவில்லை. மேலும் ஏழ்மைஎன்பதுதொடர் சிக்கலாகத் திகழ்ந்துவருகிறது.

## இந்தியா – இடம்பெயர்தலுக்கான காரணங்கள்




உலகிலேயே மெக்ஸிகோ–அமெரிக்கஐக்கியநாடு இடையேயான இடப்பெயர்வு பாதையே 2010 ஆம் ஆண்டின் மிகப் பெரிய இடப்பெயர்வுப் பாதையாகும். உலகிலேயே நீண்ட தூரம் இடம் பெயரும் பறவை'ஆர்டிக் டெர்ன்' (Artic tern) பறவையாகும்.

வளர்ச்சிப் போக்கானது, வளர்ச்ச ிமண்டலங்களால் நிலம் சார்ந்த சமத்துவமின்மையை உருவாக்கியுள்ளது இந்தியா போன்றவளர்ச்சியடையும் பொருளாதார சமூகத்தில் காணப்படும் இடப்பெயர்வுகளைவளர்ச்சிப் போக்குகளால் உருவாகியுள்ள பொருளாதார, சமூகமற்றும் இடம் சார்ந்த ஏற்றத்தாழ்வுகள் தீர்மானிக்கின்றன.

எனவே இடப்பெயர்வு நகர்வு பல்வேறு வகைப்பட்ட உள் நகர்வுகளைக் கொண்டதாக அமைகிறது. உதாரணமாக கிராம புறநகர்ப்புற இடப்பெயர்வு நகர்வை நாம் எடுத்துக்கொண்டால், அதற்குள் கிராமப்புற ஏழை,பணக்காரர் ஆகியோருக்கு அவரவருக்கான காரணங்கள், உந்துசக்தி, இடப்பெயர்வு முறை மற்றும் இடப்பெயர்வினால் ஏற்படக்கூடியவிளைவுகள் ஆகிய உள்ளோட்டங்களைக் கொண்டதாக உள்ளது. ஏழைமக்கள் கிராமப்புறங்களில் நிலவிவரும் தங்களது துயரநிலையிலிருந்து தங்கள் வாழ்வாதாரத்ஜை த மீட்டுக்கொள்ளும் உத்தியாக இடப்பெயர்வை மேற்கொள்கின்றனர். அதேசமயம் சற்று வசதிவாய்ப்புகள் உடையமக்கள் தங்களதுதுயரநிலையில் இருந்து மீள்வதற்காகவோ அல்லது வாழ்வாதார உத்தியாகவோ பயன்படுத்தாமல், தங்கள் வாழ்நிலையை மேம்படுத்துவதற்காக இடம் பெயர்தலை மேற்கொள்கின்றனர்.

நிலப்பரப்பு சார்ந்து நோக்கும் போது, நகர்ப்புறமானாலும் கிராமப்புறமானாலும் வளர்ச்சி அடைந்த நிலப்பகுதிகளில் குவியும் தன்மை உடையவர்கள் இடம் பெயர்ந்தவர்கள்.

இடம்பெயர்தலின் வடிவம் சிக்கலானபலதரப்பட்டநகர்வுகளைஉள்ளடக்கியதாகும்.

- கிராமப்புறத்தில் இருந்துகிராமத்திற்கு,கிராமப்புறத்திலிருந்துபுகர்ப்புறம் நோக்கி, நகர் புறத்திலிருந்துகிராமம் நோக்கி, நகர் புறத்திலிருந்து கிராமம் நோக்கி, நகர் புறத்திலிருந்துநகரம் நோக்கிய இடப்பெயர்வுகள்.

- குறுகிய, நடுத்தரமான மற்றும் நீண்ட தூர இடப்பெயர்தல் நகர்வுகள்

- நீண்டகால நிரந்தர இடப்பெயர்வுமற்றும் குறுகிய காலசுழற்சி முறையிலான நகர்வுகள்.

ஒவ்வொரு இடப்பெயர்வுநகர்வும் வெவ்வேறு வகையான வகுப்புசார்ந்த குடியேறுபவர்களை கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு இடப்பெயர்தலும் அவற்றிற்கான சொந்த காரணங்களைக் கொண்டவை. இடப்பெயர்தலின் அளவு மற்றும் தன்மை ஆகியவை கீழ்க்கண்டவற்றைச் சார்ந்துள்ளன.

- இடப்பெயர்தல் துவங்கும் இடத்தில் மக்கள் அனு பவிக்கும் அழுத்தம் மற்றும் விருப்பங்கள்
- இடப்பெயர்தல் துவங்குமிடத்தில் மக்களின் நகர்வு மீது திணிக்கப்படும் கட்டுபாடுகள்
- சேருமிடத்தில் கிடைக்கக் கூடியவாய்ப்புகள் மற்றும் அவை குறித்த தகவல்கள்
- குடியேற்றச் செலவு

**இடம்பெயர்வுகொள்கைகள்:**

இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகளில் இடம்பெயர்தல் சார்ந்த பிரச்சனைகளை எதிர்கொள்வதற்கான கொள்கைகளை உருவாக்கும் அடிப்படைகள்.

○ இடம்பெயர்தலின் அளவை குறைப்பதற்கான வழிகள்: அதிக அளவிலான இடப்பெயர்தல் கிராமப்புறத்தில் காணப்படும் வறுமை மற்றும் பாதுகாப்பற்ற தன்மையினைப் பிரதிபலிக்கிறது. எனவே கிராமப்புறங்களின் மீது தனிக்கவனம் இருத்தல் வேண்டும். ஏழ்மை மற்றும் பாதுகாப்பற்ற தன்மையை குறைக்கும் விதமான கிராம வளர்ச்சித் திட்டங்கள் அதிக அளவிலான இடம் பெயர்தலை குறைப்பதற்கு உதவியாக அமையும்.

○ இடம் பெயர்ந்து நகர்தலைத் திசை திருப்புதல்: பெருநகரங்கள் நோக்கி குவியும் இடம் பெயர்தலைத் திசை மாற்றி அமைத்திடும் கொள்கைகள் விரும்பத்தக்க கொள்கை முடிவுகள் ஆகும். நிலப்பரப்புச் சார்ந்தகுடி பெயர்தலால் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளை குறைப்பதற்கு, நகர்புறங்களை பரவலாக்கும் வடிவமைப்புகள் பொருத்தமான உத்திகளாக அமைகின்றன.

## 10th பொருளாதாரம்
## தொகுதி I
## அலகு –2
## உலகமயமாதல் மற்றும் வர்த்தகம்

**அறிமுகம்:**


நவீன நாட்களில் அரசியல்வாதிகள், பொருளியல் வல்லுநர்கள் மற்றும் தொழிலதிபர்களிடையே அதிகமாக பேசக்கூடிய கருத்துக்களாக தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் (LPG) இருக்கின்றன. இந்த மூன்று வெளிப்பாடுகளும் புதிய பொருளாதார கொள்கையின் தூண்களாக ஆதரவு தெரிவித்து நமது அரசாங்கம் 1991 லிருந்து இவற்றை அமைத்து நடைமுறைப்படுத்தியது.

**உலகமயமாக்கல்:**

உலகமயமாக்கல் என்பது பண்டங்கள் மற்றும் பணிகள், தொழில்நுட்பம், மூலதனம், உழைப்பு அல்லது மனித மூலதனம் ஆகியவற்றின் தடையில்லா ஓட்டத்தில், எந்த தடையும் ஏற்படாமல் உலகின் பல்வேறு பொருளாதாரங்களை ஒருங்கிணைப்பதற்கான செயல்முறையாகும். உலகமயமாக்கலின் கீழ் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான சர்வதேச சந்தைகள் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

**உலகமயமாக்கலின் வரலாறு:**

உலகமயமாக்கல் என்ற சொல் பேராசிரியர் தியோடோர் லெவிட் என்பவர் மூலமாக அறிமுகப்படுத்தப்பட்டது. உலகமயமாக்கல் வரலாற்று பின்னணியில் மூன்று நிலைகளில் விவாதிக்கப்பட்டது.




**தொன்மையான உலகமயமாக்கல்:**

சுமர் மற்றும் சிந்து வெளி நாகரிகத்தின் இடையேயான வர்த்தக உறவுகள் உலகமயமாக்கல் என்ற ஒரு வடிவத்தை மூன்றாம் நூற்றாண்டுகளில் உருவாக்கியது. என்று ஆண்ட்ரே குந்தர் ∴பிராங்க்வாதிட்டார். உலகமயமாக்கப்பட்ட பொருளாதாரம் மற்றும் கலாச்சாரத்தின் ஆரம்ப வடிவத்தை தொன்மையான உலகமயமாக்கல் என்று கிரேக்க (Hellenistic Period) காலத்தின் போது அழைக்கப்பட்டது. வணிக ரீதியாக நகர்ப்புற மையங்கள் கிரேக்க கலாச்சாரத்தின் மையத்தில் ஆர்வமாக சுற்றி வந்தன. இது இந்தியாவிலிருந்து ஸ்பெயினுக்கு பரந்து விரிந்து அலெக்ஸாண்டிரியா. ஏதென்ஸ் மற்றும் அந்தியோக்கி போன்ற நகரங்களில் அதன் மையத்தில் இருந்தது. ரோம் பேரரசுக்கும், பார்த்தியன் பேரரசுக்கும் மற்றும் ஹன் வம்சத்துக்கும் இடையேயான வர்த்தக தொடர்பில் உலகமயாக்கலின் ஆரம்ப வடிவம் இந்த பேரரசுகளுக்கு இடையேயனா வணிக உறவுகளால் பட்டு சாலையின் (Silk Route) வர்ச்சியை ஊக்கப்படுத்தியது.

இஸ்லாமிய பொற்காலம் கூடு உலகமயமாக்கலில் ஒரு முக்கிய ஆரம்பகட்டமாக இருந்து வந்தது. மங்கோலிய பேரரசின் வருகை, மத்திய கிழக்கு மற்றும் சீனாவின் வர்த்தக மையங்களுக்கு உறுதியற்றதாக இருந்தாலும் பட்டு சாலை வழியாக பயணிக்க வசதியாக இருந்தது. இந்த நவீனத்திற்கு முந்தைய கால கட்டத்தில் நடந்த உலக பரிமாற்றத்தை சில நேரங்களில் தொன்மையான உலகமாயமாக்கல் என்றழைக்கப்படுகிறது.

**இடைப்பட்ட உலகமயமாக்கல்:**

உலகமயமாக்கலின் அடுத்த கட்டம் இடைப்பட்ட உலகமயமாக்கல் ஆகும். 16 மற்றும் 17 ம் நூற்றாண்டுகளில், ஐரோப்பிய பேரரசுகளின் எழுச்சியால் முதலில் போர்ச்சுகீசியர்கள், ஸ்பானிஷ் பேரரசுகள்,டச்சுக்காரர்கள் மற்றும் பிரிட்டிஷ் பேரரசுகளின் கடல் வழி வாணிபம் மேற்கொண்டனர். உலகமயமாக்கல், 17ம் நூற்றாண்டில், பிரிட்டிஷ் கிழக்கிந்திய நிறுவனம் (1600) தனியார் வணிக நிறுவனம் போன்று உருவாக்கப்பட்டு முதல் பன்னாட்டு நிறுவனம் என அழைக்கப்பட்டது. மேலும், முதல் டச்சு கிழக்கு இந்திய நிறுவனம் (1602) உருவாக்கப்பட்டு வாணிபம் நடைபெற்றது. 16ம் நூற்றாண்டில் போர்ச்சுகீசியர்கள் ஆப்பிரிக்காவிலிருந்து ஆசியா மற்றும் பிரேசில் வரை வர்த்தக நிறுவனங்களை (தொழிற்சாலைகள்) நிறுவ ஆரம்பித்தனர்.

**நவீன மயமாக்கல்:**

19ம் நூற்றாண்டில் உலமயமாக்கலின் வருகை நவீன வடிவத்தை நெருங்கியது. 19 மற்றும் 20 ம் நூற்றாண்டுகளுக்கு இடையே நடைபெற்ற உலகமயமாக்கல் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளை கொண்டிருந்தன. அவை, இந்த நூற்றாண்டுகளில் நடைபெற்ற உலகளாவிய வர்த்தக பொருளாதாரத்தில் மூலதனம் மற்றும் முதலீடு செய்யப்பட்டது. மற்றொன்று, 20 ம் நூற்றாண்டில் வணிக உற்பத்தியில் அதிக பங்கினை பெற்றிருந்ததுடன், சேவைகள் வர்த்தகம் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் உற்பத்தி வணிகத்தில் எழுச்சியுற்றிருந்ததாகும்.

சுங்கவரி, வாணிபம் குறித்த பொது உடன்பாடு (GATT) மற்றும் உலக வர்த்தக அமைப்பு (WTO) போன்ற பன்னாட்டு வர்த்தக ஒப்பநதங்களும் கையெழுத்திடப்பட்டுள்ளன. 1890 லிருந்து முதல் உலகப்போர் வரை நிலையற்ற

வர்த்தகம் ஒரு பிரச்சனையாக இருந்தது. ஆனால் போருக்கு பிந்தைய காலத்தில் பெரும்பாலும் பொருளாதார விரிவாக்கத்தால் நிலைப்பு தன்மைக்கு வழிவகுத்தது.

**வரலாற்றுப் பார்வையில் தென் இந்தியாவில் வர்த்தகம் மற்றும் வணிகர்கள்:**

வர்த்தகம் நடவடிக்கைகளை ஒழுங்கமைக்கவும், விரிவுபடுத்தவும் வணிகர்கள் தென்னிந்திய வர்த்தகக் குழுக்களை உருவாக்கினர்கள். இந்திய கலாச்சாரத்தை மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் வழிகளாக வர்த்தகக் குழுக்கள் இருந்தன. தென்னிந்தியாவில் வர்த்தகம் சோழர்கள் ஆதிக்கத்திலிருந்து பின்பு அது பல்லவர்கள் ஆதிக்கத்திற்கு மாறியது.

**ஆரம்பகால வர்த்தகர்கள்:**

1053 AD (CE) யில் கலிங்க வர்த்தகர்கள் (நவீன ஒரிசா) சிவப்பு வண்ண கல் அலங்கார பொருட்களை வர்த்தகத்திற்கு கொண்டு வந்தனர். மேலும், ஆரம்ப நாட்களில் பருத்தி ஜவுளியை தென்கிழக்கு ஆசியாவிற்கும் கொண்டு வந்து வர்த்தகம் செய்தனர். மத்திய காலத்தில் தெற்கு இந்தியாவில் வர்த்தகர்களாக கத்ரிகாஸ், நாகராஸ், மும்முரிதந்தாஸ், அய்யாவோலி 500, செட்டிஸ், பிருடாஸ், கோவாரஸ் போன்ற பல வர்த்தக குழுவினர் செயல்பட்டனர். தொகராஸ், கோவாரஸ் போன்ற சில வர்த்தக குழுவினர் ஆலய வளாகத்தில் மட்டுமே சந்தித்து வர்த்தகத்தை மேற்கொண்டனர்.

**தென் இந்தியாவில் ஐரோப்பிய வணிகர்கள்:**

இந்த காலத்தில் இந்தியாவிற்கு பல்வேறு ஐரோப்பிய நிறுவனங்கள் வருவதற்கு வர்த்தக நடவடிக்கைகள் காரணமாக இருந்தது. வாஸ்கோடா காமாவால் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்கு நன்னம்பிக்கை முனை வழியாக புதிய கடல் பாதை கண்டுபிடிக்கப்பட்டது. அது நாகரீக உலகத்தின் மீது பல விளைவுகளை ஏற்படுத்தியது. இந்தியாவின் கடலோர மற்றும் கடல் வர்த்தகம் ஐரோப்பியர்களால் முற்றுரிமை பெற்றிருந்தது.

**போர்ச்சுகீசியர்கள்:**

வாஸ்கோ-டா-காமாவின் தலைமையின் கீழ் போர்ச்சுகீசியர்கள் மே 17, 1498 ல் கோலிக் கோட்டில் வாணிபத்திற்காக வந்தனர். வாஸ்கோ-டா-காமாவால் போர்ச்சுக்கல்லுக்கு கொண்டு வந்த பொருட்களின் லாபமானது, இந்தியா முழுவதும் பயணம் செய்த செலவைவிட60 மடங்காகும்.

1500 AD (CD) ல் பெட்ரோ ஆல்வாரேஸ் கபரல் இந்தியாவிற்கு வருகைப் புரிந்தார். மேலும் 1502ல், வாஸ்கோ – டா-காமாவின் இரண்டாவது பயணத்தினால் இந்தியாவில் காலிகட், கொச்சின் மற்றும் கண்ணனூர் ஆகிய இடங்களில் வர்த்தக நிறுவனங்கள் நிறுவுவதற்கு வழிவகுத்தது. ஆரம்பத்தில் இந்தியாவில் போர்ச்சுகீசியர்களின் தலைநகரமாக கொச்சின் இருந்தது.

**தென்னிந்தியாவில் டச்சுக்காரர்கள்:**

1596 ல் இருந்து டச்சுக்காரர்கள் பல பயணங்கள் மேற்கொண்டு, டச்சு கிழக்கு இந்திய நிறுவனத்தை 1602 ல் உருவாக்கினர். அட்மிரல் வான் டெர் ஹகேன் என்பவரால் டச்சு நிறுவனம் மசூலிப்பட்டினம், பெத்தபோலி (நிஜாம்பட்டினம்)

தேவனாம்பட்டினம் ஆகிய இடங்களில் நிறுவப்பட்டது. 1610 ம் ஆண்டில் சந்திரகிரி ராஜாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி புலிகாட்டில் மற்றொரு தொழிற்சாலையை நிறுவினர். இண்டிகோ, சால்ட்பேட்டர் மற்றும் வங்க கச்சா பட்டு போன்ற இதர பொருட்கள் டச்சுக்காரர்களால் ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்தியாவில் டச்சுக்காரர்களின் தலைமையிடமாக புலிகாட் இருந்தது. 1659 ல் போர்ச்சுகீசியர்களிடமிருந்து தஞ்சாவூர் கடற்கரையில் இருந்த நாகப்பட்டினத்தை கைப்பற்றியது.

**பிரிட்டிஷ் நிறுவனம் (இங்கிலாந்து):**

டிசம்பர் 31, 1600 அன்று, கிழக்கு இந்திய கம்பெனிக்கு நிறுவனம் துவங்குவதற்கு எலிசபெத் ராணியால் பட்டயம் வழங்கப்பட்டது. தென் கிழக்கு கடற்கரையில், ஆங்கிலேயர்கள் 1611 ல் மசூலிப்பட்டினத்திலும், 1626 ல் புலிக்காட் அருகிலும் நிறுவினார்கள். கோல்கொண்டாவின் சுல்தான், ஆங்கிலேயர்களுக்கு ''கோல்டன் ஃபயர்மேன்'' என்ற பட்டத்தை வழங்கி, 1632 ல் அவர்களை தங்கள் 'ராஜ்ய துறைமுகங்களில்'' இலவசமாக வர்த்தகம் செய்யவும் அனுமதி வழங்கினார். 1639 ம் ஆண்டில் ஆங்கிலேயர்களால் சென்னையில் ஒரு வலுவான நிறுவனம் கட்டப்பட்டது. பின்பு அது செயின்ட் ஜார்ஜ் கோட்டை என அழைக்கப்பட்டது. கோரமண்டல கடற்கரையிலுள்ள மசூலிப்பட்டினம் விரைவில் ஆங்கில குடியேற்றத்தின் தலைமையகமாக மாறியது.

**டேனிஷ்காரர்கள்:**

டேனிஷ்காரர்கள், 1616 ம் ஆண்டில் இந்தியாவிற்கு வருகை புரிந்து டேனிஷ் கிழக்கு இந்திய நிறுவனம் ஒன்றை உருவாக்கினர். 1620 ம் ஆண்டில் டேனிஸ், இந்தியாவில் டேனிஷ் குடியேற்றங்களால் டிராங்குபாரை (தமிழ்நாடு) தலைமையிடமாக நிறுவியது. ஆனால், அவர்கள் இந்தியாவில் தங்களை வலுப்படுத்த தவறியதால், 1845 ல் அனைத்து குடியேற்றங்களையும் ஆங்கிலேயர்களால் கட்டாயப்படுத்தப்பட்டு அவர்களுக்குகே விற்றுச் சென்றனர்.

**பிரரெஞ்சுகாரர்கள்:**

இந்தியாவில் பிரெஞ்சுகாரர்கள், 1668 ம் ஆண்டில் கோல்கொண்டாவின் சுல்தானிடம் அனுமதி பெற்று, முதல் பிரெஞ்சு தொழிற்சாலையை நிறுவினர். 1693 ம் ஆண்டு டச்சுகாரர்கள் பாண்டிச்சேரியை கைப்பற்றி மீண்டும் பிரெஞ்சுகாரர்களிடமே ஒப்படைத்தனர். 1701 ல் பாண்டிச்சேரி பிரெஞ்சின் தலைமையிடமாக மாறியது. 1742 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரசியல் நோக்கங்களைத் தொடர்ந்து கிழக்கு மாகாணங்களில் குடியேற்றங்கள் வணிக ஆதாயத்திற்கான விருப்பத்தை மறைக்கத் தொடங்கியது.

சமீபத்தில் இந்திய அரசு, தென்னிந்தியாவில் சிறப்பு பொருளாதார மண்டலங்களை (SEZ) குறிப்பாக தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா மற்றும் கேரளாவில் ஏற்படுத்தியது. ஏற்றுமதியை அதிகரிக்கும் நோக்கில் நாங்குனேரி SEZ, எண்ணூர் SEZ, கோயம்புத்தூர் SEZ என தமிழ்நாட்டில் சில SEZ கள் ஆரம்பிக்கப்பட்டது.

**இந்தியாவில் உலகமயமாக்கல்:**

இந்தியாவில் 1980 – 81 க்கு பிறகு 1990 – 91 களில் நடைபெற்ற வளைகுடா போரின் காரணமாக எண்ணெய் விலை அதிகரிப்பு மற்றும் மேற்கு ஆசியாவில் போர்க்குணம் ஆகியவற்றின் காரணமாக கடுமையான அயல்நாட்டு வாணிபச் செலுத்து சமநிலையின் சிக்கல்கள் குறிப்பிடத்தக்கது.

புதிய அரசு ஜுன் 1991 ல் பொறுப்பு ஏற்றவுடன் இந்திய அயல்நாட்டு செலுத்து சமநிலையில் முன் எப்போதும இல்லாத நெருக்கடியை சந்தித்தது. மத்திய, மாநில அரசுகளின் நிதி கிட்டத்தட்ட ஒரு நிதியில்லா நிலைமையை அடைந்தது என்றும் கூறலாம்.

சில சர்வதேச நிறுவனங்களால் இந்தியாவின் கடன் மதிப்பீடு குறைந்ததுடன், இங்கிருந்து அதிகமான மூதனமும் வெளியே சென்றது.

இந்தியா சர்வதேச சந்தையில் தனது கடன் தரும் தகுதியை இழந்ததால், இங்கிலாந்து வங்கியில் (Bank of England) 40 டன் தங்கத்தை அடமானம் வைத்தது. இந்த சூழ்நிலையில், 1991 – 92 ல் அரசாங்கம் ஜுலை 1991ல் தனது வரவு செலவுத் திட்டத்தை தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் (LPG) ஆகியவற்றின் தொடர்ச்சியான கொள்கை மாற்றங்களுடன் வழங்கியது. இந்த கொள்கைகள் இந்தியாவில் 1994 ம் ஆண்டில் "டங்கல் வரைவை" கையெழுத்திட்ட போது பலப்படுத்தப்பட்டது.

**உலகமயமாக்கல் சார்ந்த சீர்திருத்தங்கள்:**

**(இந்தியாவில் புதிய பொருளாதாரக் கொள்கை):**

1. சில தொழிற்சாலைகளை தவிர, தொழில் உரிமம் பெறுவதை நீக்கியது.
2. பொதுத்துறை நிறுவனத்திற்காக ஒதுக்கப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டது.
3. இந்தியாவின் பொருட்களின் ஏற்றுமதி பரிமாற்றத்தில் நிலையான பணத்தின் மாற்று வீதத்தை சரி செய்தது.
4. வெளிநாட்டு தனியார் துறை நடப்பு கணக்கில் இறக்குமதி வரியை குறைப்பதன் மூலம் வர்த்தகத்தில் ரூபாய் மாற்றத்தை உருவாக்கியது.
5. அயல்நாட்டு செலவாணி ஒழுங்குமுறை பொருத்தமாக திருத்தப்பட்டது.
6. இந்திய ரிசர்வ் வங்கியால் வழங்கப்பட்ட சட்ட ரீதியான நீர்மை விகிதம் (SLR) அதிகரிக்கப்பட்டது.

**பன்னாட்டு நிறுவனம்: (MNC):**

நாட்டில் பண்டங்களையும் அல்லது பணிகளையும் உற்பத்தி செய்யும் அல்லது கட்டுப்படுத்தும் ஒரு பெருநிறுவனமாகும். பன்னாட்டு நிறுவனங்களை (Multi National company) சர்வதேச நிறுவனங்கள் (Trans National Corporation) அல்லது பன்னாட்டு அமைப்பு (Multi National Enterprise) எனவும் கூறலாம்.

## MNC யின் பரிமாண வளர்ச்சி:

கிழக்கு இந்திய நிறுவனம், இந்தியாவை ஒரு வர்த்தக நிறுவனமாகக் கொண்டு வந்தது. அதன் பிறகு அரசியல் ரீதியாக நாடெங்கிலும் பரவலாக ஆதிக்கம் செலுத்தியது. 1920 களில் பன்னாட்டு நிறுவனங்கள் முதலில் பிரித்தெடுக்கப்பட்ட தொழில்களில் அல்லது தொழில் நடத்தும் நாடுகளின் மூலப்பொருட்களை கட்டுப்படுத்தி மெதுவாக இந்தியாவினுள் நுழைந்தன. 1950 களுக்கு பிறகு உற்பத்தி மற்றும் பணிகள் துறைகளிலும் ஈடுபட்டது. தற்போது, இந்தியாவில் நான்கு பெரிய ஏற்றுமதி நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஜெர்மனி போன்ற நாடுகளுக்கு சொந்தமான பன்னாட்டு நிறுவனங்கள் பெரும்பான்மையாக உள்ளது. இவற்றில் மிகப்பெரியது அமெரிக்காவாகும்.

இந்தியாவிலுள்ள 15 பெரிய பன்னாட்டு நிறுவனங்களில் 11 அமெரிக்காவை சேர்ந்ததாகும். 1971 ஆம் ஆண்டில் அமெரிக்க நிறுவனங்கள் மொத்த உலக பங்குகளில், வெளிநாட்டு நேரடி முதலீட்டில் (FDI) 52 சதவீதத்தைக் கொண்டிருந்தன. மேலும், இங்கிலாந்து 14 சதவீதம், பிரான்ஸ் 5.0 சதவீதம் ஜெர்மனி 4.4 சதவீதம் மற்றும் ஜப்பான் 2.7 சதவீதம் பங்கினையும் கொண்டிருந்தன. 1969 ம் ஆண்டு அமெரிக்க பன்னாட்டு நிறுவனங்கள் மட்டும் தோராயமாக 140 பில்லியன் டாலர் மதிப்புள்ள பண்டங்களை உற்பத்தி செய்தது.

ஆசிய நாடுகளில் 34 சதவிகிதமும் மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் 22 சதவிகிதமும் கணிசமான வருமானம் பெறப்படுவதை அமெரிக்க பன்னாட்டு நிறுவனங்கள் உணர்ந்தது. பின்னர் அவை புரவல் நாடுகளின் பெரும் அதிகாரங்களைப் பெற்றனர். நிறுவனங்கள் உணர்ந்தது. பின்னர் அவை புரவல நாடுகளின் பெரும் அதிகாரங்களைப் பெற்றனர். இது சர்வதேச எல்லைகளுக்குள் சுதந்திரமான நிதி ஓட்டத்தை சீராக்கியது. அவர்கள் இந்த நாடுகளின் சிறந்த அறிவாளிகளை (ஆற்றல் மிகுந்தவர்கள்) பெற்றுக்கொண்டு நியாயமற்ற நடைமுறைகளை மேற்கொண்டனர். அவர்களின் பெரிய ஆதாரங்களைப் பயன்படுத்தி பன்னாட்டு நிறுவனங்கள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் முதலீடு செய்யவும், புதிய தயாரிப்புகளை உருவாக்கவும், தொழில்நுட்ப முன்னேற்றங்களை சுரண்டிக்கொள்ளவும் மற்றும் புதிய செயல்முறையை கண்டறியவும் செய்தனர்.

### இந்தியாவில் பன்னாட்டு நிறுவனங்களின் வளர்ச்சி:

இந்திய தொழில்துறையில் பன்னாட்டு நிறுவனம் ஒரு பொதுவான வடிவத்துடன், இந்திய தொழிலதிபர்களின் ஒத்துழைப்புடன் நுழைந்தது. 1980 களில் தாராளமயமாக்களின் போக்குகள் வெளிநாட்டு ஒத்துழைப்புக்கு கணிசமான பங்கினை அளித்தன. 1948 – 1988 ம் ஆண்டிற்கு இடையில் 40 ஆண்டுகளில் கையெழுத்தான 12,760 மொத்த வெளிநாட்டு ஒத்துழைப்பு ஒப்பந்தங்களில் இருந்து இது தெளிவாகிறது. சூலை – ஆகஸ்ட் 1991ல் அறிவிக்கப்பட்ட தாராளமயமாக்கப்பட்ட வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கையினால் (FIP) வெளிநாட்டு ஒத்துழைப்புகள் அதிகரித்து வெளிநாட்டு நேரடி முதலீடும் (FDI) அதிகரித்துள்ளது.

**MNC யின் வளர்ச்சிக்கான காரணங்கள்:**
**சந்தை நிலப்பரப்பின் விரிவாக்கம்:**

பெரிய அளவிலான நிறுவனங்கிளன் விரிவாக்கங்கள் விரிவடைந்து வருவதால், அந்த நிறுவனம் உள்ள நாட்டின் புவியியல் எல்லைகளுக்கு அப்பாற்பட்ட செயல்பாடுகளை மேலும் விரிவாக்குகிறது.

**2018 ல் இந்தியாவின் மிகப் பெரிய பன்னாட்டு நிறுவனங்கள்**

1. சோனி கார்ப்பரேசன்
2. ஹவுலக் பேக்கார்டு (HP)
3. டாட்டா குழுமம்
4. மைக்ரோ சாப்ட் கார்ப்பரேசன்
5. ஐ.பி.எம்.
6. நெட்டில்
7. பிராக்டர் & கேம்பில்
8. சிட்டி குழுமம்
9. பெப்சி நிறுவனம்
10. கோகோ – கோலா நிறுவனம்

**அந்நிய செலாவணி கட்டுப்பாட்டுச்சட்டம் 1974 (Foreign Exchange Regulation Act)**

இது 1973 ம் ஆண்டில் வெளியிடப்பட்டு, ஜனவரி 1, 1974 அன்று நடைமுறைக்கு வந்தது. இந்த சட்டம் இந்தியாவில் பன்னாட்டு நிறுவனங்களின் செயல்பாட்டை நேரடியாக குறிப்பிடுகிறது.

**அந்நிய செலாவணி மேலாண்மைச் சட்டம் 1999 (Foreign Exchange Management Act)**

இது பாராளுமன்றத்தால் 1999ல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 'கட்டுப்பாட்டுக்கு'' மாறாக 'நிர்வாகத்தை''FEMA வின் கீழ் வலியுறுத்தியது.

**சந்தைப்படுத்தும் மேன்மை:**

ஒரு பான்னாட்டு நிறுவனம், தேசிய நிறுவனங்களின் மீது சந்தைப்படுத்தும் மேன்மையைக் கொண்டுள்ளது. இது சந்தை மதிப்பினைப் பெற்று, அதன் தயரிப்புகளை விற்பனை செய்வதில் குறைவான சிரமங்களை எதிர் கொள்கிறது. மேலும் பயனுள்ள விளம்பர மற்றும் விற்பனை ஊக்குவிப்பு தொழில் நுட்பங்களை ஏற்றுக் கொள்கிறது.

**நிதி மேன்மை:**

இதில் நிதி வளங்களும், உயர்நிதி பயன்பாடுகளும் உள்ளன. அதனால், வெளிப்புற மூலதன சந்தைகளை எளிதில் அணுகமுடியும் மற்றும் அதன் சர்வதேச புகழ் காரணமாக வளங்களை அதிகரிக்கவும் முடியும்.

**தொழில்நுட்ப மேன்மை:**

பின்தங்கிய நாடுகளில் பன்னாட்டு நிறுவனங்கள் பங்கேற்க, ஊக்கமளித்ததற்கான முக்கிய காரணம் தேசிய தொழிற்துறைகளுடன் ஒப்பிடுகையில் இந்த நிறுவனங்கள் தொழில் வளர்ச்சியில் தொழில்நுட்ப மேம்பாட்டுடன் காணப்படுவதேயாகும்.

**வெளிநாட்டிலுள்ள இந்தியாவின் பன்னாட்டு நிறுவன்ங்கள்:**

| வ.எண் | நிறுவனம் | தலைமையகம் | தொழிலின் வகை | நிறுவனம் இயங்கும் நாடுகள் |
|---|---|---|---|---|
| 1. | ஹரோ மோட்டோகார்ப் | புதுடில்லி | ஆட்டோமோபைல் | கொலம்பியா, பங்களாதேஷ், ஆப்பிரிக்கா |
| 2. | பஜாஜ் | பூனா | ஆட்டோமோபைல் | ஐக்கிய அரபு நாடுகள், பங்களாதேஷ் |
| 3. | டி.வி.எஸ் (TVS) | சென்னை | ஆட்டோமோபைல் | பிரேசில், சிலி, கொலம்பியா, மெக்ஸிகோ, பெரு |
| 4. | பாரத ஸ்டேட் வங்கி | மும்பாய் | வங்கி | ஆஸ்திரேலியா, பங்காளதேஷ்,பெல்ஜியம் |
| 5. | பாரத் ஏர்டெல் | புதுடில்லி | தகவல் தொடர்பு | தென் ஆசியா, ஆப்பிரிக்கா |
| 6. | மைக்ரோ மேக்ஸ் இன்டர்மேட்டிக்ஸ் | கூர்கான் | மின்னணு பொருட்கள் | நேபால், ஸ்ரீலங்கா, பங்களாதேஷ் |
| 7. | பாரத ஸ்டேட் வங்கி | ஆனந்த (குஜராத்) | உணவுப் பொருள் | ஐக்கிய நாடுகள், தாய்லாந்து, மலேசியா, ஹாங்காங், ஜப்பான் |
| 8. | ஓ.என்.ஜி.சி (ONGC) | புதுடெல்லி | எரிவாயு | பிரேசில், கொலம்பியா,ஈரான் |
| 9. | Dr. ரெட்டி மருத்துவ ஆய்வகம் | ஹைதராபாத் | மருத்து பொருட்கள் | பிரேசில். மெக்ஸிகோ, ஜமாலிகா |
| 10. | இன்போசிஸ் | பெங்களூரு | மென்பொருள் | அமரிக்கா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா |

**பண்டங்களின் கண்டுபிடிப்புகள்:**

பன்னாட்டு நிறுவனங்கள், புதிய தயாரிப்புகள் மற்றும் ஏற்கனவே உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை உயர்ந்த வடிவமைப்புகளாக உருவாக்குவதற்கான பணியில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுடன் ஈடுபட்டுள்ளன.

## MNC யின் நன்மைகள்:

1. பன்னாட்டு நிறுவனங்கள் குறைந்த விலையில் பொருட்களை தரமாகவும் மற்றும் பரிவர்த்தனை செலவு இல்லாமலும் உற்பத்தி செய்கிறது.

2. பன்னாட்டு நிறுவனங்கள் விலைகளை குறைப்பதால் உலகளாவிய நுகர்வோரின் வாங்கும் சக்தி அதிகரிக்கிறது.

3. பன்னாட்டு நிறுவனங்கள் வரி மாறுபாட்டை பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

4. பன்னாட்டு நிறுவனங்கள் உள்ளூர் பொருளாதாரத்தில் வேலைவாய்ப்பினை ஊக்குவிக்கிறது.

## பன்னாட்டு நிறுவனங்களின் தீமைகள்:

1. பன்னாட்டு நிறுவனங்கள் முற்றுரிமையை (சில தயாரிப்புகளுக்கு) வளர்ப்பதற்கான ஒரு வழியாகும்.

2. பன்னாட்டு நிறுவனங்களினால் சுற்றுசூழலில் தீங்கினை உருவாக்க வாய்ப்புள்ளது.

3. ஒரு புரவலன் நாட்டின் பொருளாதாரத்தில் பன்னாட்டு நிறுவனத்தின் அறிமுகும் சிறிய உள்ளூர் வணிக வீழ்ச்சிக்கு வழிவகுக்கும்.

4. பன்னாட்டு நிறுவனங்கள் ஒழுக்க நெறிமுறைகளை மீறுவதோடு, தார்மீக சட்டங்களை அவர்கள் குற்றம் சாட்டி, மூலதனத்துடன் தங்கள் வணிக செயல்பாட்டினை திருப்பிக் கொள்வதற்கும் முனைவர்.

## நியாயமான வர்த்தக நடைமுறைகள் மற்றும் உலக வர்த்தக அமைப்பு (WTO):

நியாயமான வர்த்தகமானது, சிறிய விவசாயிகளை உலகளாவிய சந்தை இடத்தில் ஒரு சுறுசுறுப்பான பகுதியாக வைத்திருப்பதோடு நுகர்வோருக்கு அதிகாரம் அளிக்கவும், கொள்முதல் செய்யவும், அவர்களின் மதிப்பை ஆதிரிக்கவும் நோக்கமாகக் கொள்ளும் ஒரு வழி முறையாகும். நியாயமான வர்த்தகம் என்பது விவசாய பொருட்கள் மற்றும் முன்கூட்டியே வடிவமைக்கப்பட்ட கைவினைப் பொருட்களின் உற்பத்தியாளரும் மற்றும் வாங்குவோரும் தானாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பல பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் குறிக்கோள்களை முன்னெடுப்பதற்காக வடிவமைக்கப்பட்ட வணிக நடைமுறைகளேயாகும். அவைகள்,

- சிறிய அளவிலான விவசாயிகள், பண்ணை தொழிலாளர்கள் மற்றும் கைவினைஞர்களின் வருமானத்தை உயர்த்துவது மற்றும் உறுதிப்படுத்துதல்.

- பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனையுடன் தொடர்புடைய பொருளாதால லாபங்கள், வாய்ப்புகள் மற்றும் இடர்பாடுகளை சமமாக விநியோகித்தல்.

- உற்பத்தியாளர் குழுக்களின் நிறுவன மற்றும் வர்த்தக திறன்களை அதிகரித்தல்.

- தொழிலாளர் உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் தொழிலாளர்கள் சரியான முறையில் ஒருங்கிணைக்க ஏற்பாடு செய்தல்.

- பாதுகாப்பான மற்றும் நிலையான விவசாய முறைகள் மற்றும் பணி நிலைமைகளை ஊக்குவித்தல்

நியாயமான வணிகம் என்பது விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுக்கு சிறந்த விலை, சிறந்த வேலைவாய்ப்பளித்தல் மற்றும் வர்த்தகம் தொடர்பான நியாயமான விதிமுறைகளை அளிப்பதாகும். இவற்றின் ஆதரவு, வளர்ந்து வரும் விவசாயிகள் மற்றும் தொழிலாளி வர்கத்தின் வாழ்விற்கும் மற்றும் அவர்கள் எதிர்காலத்தையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் மையமாகக் கொண்டிருக்கும்.

**நியாயமான வணிக நடைமுறைகளின் பயனாளிகள்:**
**நுகர்வோர்:**

நுகர்வோர், நியாயமான வர்த்தக அமைப்பை ஆதரித்தும் மற்றும் சர்வதேச வர்த்தக விதிகளின் பரந்த சீர்திருத்தத்தை ஒப்பிட்டும், அவர்கள் சிறந்த தயாரிப்புகளை வளர்ந்து வரும் வரம்பிலிருந்து தேர்வு செய்யலாம். நியாயமான வர்த்தக பெயரிட்ட தயாரிப்புகளை நுகர்வோர் வாங்குவதன் மூலம், தங்கள் வாழ்க்கையை மேம்படுத்த போராடும் தயாரிப்பாளர்களுக்கு ஆதரவு தெரிவிக்கலாம்.

**வர்த்தகர் / நிறுவனர்கள்:**

2002 ஆம் ஆண்டு முதல், இது வர்த்தகத்தில் மிகவும் பரவலாக அங்கீகரிக்கப்பட்டு சமூக மற்றும் முன்னேறிய அடையாளமாக மாறியுள்ளது. நியாயமான வர்த்தக நிறுவனங்கள் தங்கள் வர்த்தகத்திற்கு நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு நம்பகமான வழியை வழங்குகிறது.

**உற்பத்தியாளர்கள்:**

நிலையான விலையில் நிலையான உற்பத்தி செலவுகளை கட்டுப்படுத்தலாம். சந்தை அணுகுதல் என்பது சந்தையில் இருந்து வெளியேற்றப்பட்ட உற்பத்தியாளர்களிடம் வர்த்தகம் செய்ய வாங்குபவர்கள் உதவுதலாகும். பங்குதாரர், (உற்பத்தியாளர்கள் தங்கள் எதிர்கால முடிவுகளில் ஈடுபடுதல்) விவசாயிகள் மற்றம் தொழிலாளர்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்து.

**நியாயமான வர்த்தக அமைப்பின் கோட்பாடுகள்:**

- பொருளாதார ரீதியில் பின்தங்கிய உற்பத்தியாளர்களுக்கான வாய்ப்புகளை உருவாக்குதல்.

- வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வு

- நியாயமான வர்த்தக / நடைமுறைகள் மற்றும் நியாயமான விலையில் கொடுப்பது.

- குழந்தை தொழிலாளர் மற்றும் கட்டாயத் தொழிலாளர் இல்லை என்பதை உறுதிப்படுத்துகிறது.
- பாகுபாடு அல்லாத, பாலின சமபங்கு மற்றும் சங்க சுதந்திரம் ஆகியவற்றுக்கு அர்ப்பணித்தல்.
- திறனை வளர்த்தல் மற்றும் நியாயமான அமைப்பினை மேம்படுத்துதல்.
- சுற்று சூழலுக்கு மதிப்பளித்தல்

காப்பி, டீ. கோகோ, தேன் மற்றும் வாழைப்பழம் போன்றவை நியாயமான வர்த்தக உணவுப் பொருட்களாகும். கைவினைப்பொருட்கள், ஜவுளி மற்றும் பூக்கள் போன்றவை உணவு அல்லாத பொருட்களாகும்.

## GATT (காட்) (General Agreement of Trade and Tariff): சுங்கவரி, வாணிபம் குறித்த பொது உடன்பாடு:

1947 இல் 23 நாடுகள் காட் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. காட்டின் நிறுவன உறுப்பினர்களில் இந்தியாவும் ஒன்றாக இருந்தது. ஏழாவது சுற்றில் 99 நாடுகள் பங்கேற்றது. 1986 ஆம் ஆண்டின் எட்டாவது சுற்றில் (உருகுவே சுற்று) 117 நாடுகள் பங்கேற்றன. காட்டின் இயக்குநர் ஜெனரல் ஆர்தர் டங்கல் கொண்டு வந்த இறுதி சட்ட / ஒப்பந்த வரைவு "டங்கடல் வரைவு" என்று அழைக்கப்பட்டது. டங்கல் வரைவிற்கு ஏப்ரல் 15, 1994 அன்று இறுதியாக, சட்டம் / ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது. காட்டின் முக்கிய நோக்கம், அர்த்தமுள்ள விதிமுறைகளை பின்பற்றி பலவிதமான கட்டணங்களையும், ஒதுக்கீடுகளையும், மானியங்களையும் குறைப்பதன் மூலம் சர்வதேச வர்த்தகத்தை அதிகரித்தல் ஆகும்.

**காட்டின் (GATT) சுற்றுகள்**

- I வது ஜெனிவா (சுவிசர்லாந்து) – 1947
- II வது அன்னிசி (பிரான்ஸ்) – 1949
- III வது டார்க்குவே (இங்கிலாந்து) – 1950 – 51
- IV,V மற்றும் VI ஜெனிவா (சுவிசர்லாந்து) –1956, 1960 – 61, 1964 – 67
- VII வது டோக்கியோ (ஜப்பான்) – 1973 – 79
- 1986 – 1994 ல் VIII வது மற்றும் இறுதிச் சுற்று பன்டாடெல் எஸ் டீ (உருகுவே). இதை "உருகுவே சுற்று" என அழைத்தனர்.

## உலக வர்த்தக அமைப்பு (WTO):

1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் உலக வர்த்தக அமைப்பை (ருவுழு) அமைப்பதற்கு காட் உறுப்பு நாடுகள் உருகுவே சுற்றின் இறுதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இந்த அமைப்பை அமல்படுத்திட உடன்படிக்கையை ஏற்று 104 உறுப்பினர்களால் கையெழுத்திடப்பட்டது. WTO உடன்படிக்கை ஜனவரி 1, 1995 முதல் நடைமுறைக்கு வந்தது. (தற்போது உலக வர்த்தக அமைப்பில் 164 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளனர்)

**உலக வர்த்தக அமைப்பு World Trade Organisation):**
தலைமையகம் : ஜெனிவா, சுவிசர்லாந்து
நோக்கம்: வணிகத்தினை கட்டுப்படுத்தல், அயல்நாட்டு வாணிபம்
WTO உறுப்பினர்கள் : தலைமை இயக்குநர், துணை தலைமை இயக்குநர் - 4 மற்றும் 80 உறுப்பு நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 600 அலுவலக ஊழியர்கள்.

**WTO ஐந்து வகையான மானியங்களை குறிப்பிடுகிறது.**

1. பண மானியங்கள் அளித்தல்
2. விதி விலக்குகள், கடன்கள் அல்லது இடைநிறுத்தல் போன்ற வரி சலுகைகள் அளித்தல்
3. கடன் உத்தரவாதங்கள் போன்ற அபாயத்தை ஊகித்தல்
4. அரசு கொள்முதல் கொள்கைகள் சுதந்திர சந்தை விலையை விட அதிகமாக செலுத்துதல்.
5. பங்கு கொள்முதல் சந்தை பங்குகளை விட ஒரு நிறுவனத்தின் பங்கு விலை அதிகமாக இருத்தல்.
   இவை அனைத்தும் மானியங்கள் எனக் கருதப்படுகின்றன, ஏனென்றால் அவை வணிகம் செய்வதற்கான செலவினை குறைக்கின்றன.

**WTO வின் குறிக்கோள்கள்:**

- அயல் நாட்டு வாணிபத்திற்கான விதிகள் அமைத்தல் மற்றும் செயல்படுத்தல்.
- வர்த்தக தாராளமயமாக்கலுடனான பேச்சு வார்த்தை மற்றும் கண்காணிப்பதற்கான ஒரு மன்றத்தை வழங்குதல்.
- வர்த்தக தகராறுகளைக் கையாளுதல்.
- நிலையான முன்னேற்றம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய இரண்டையும் ஒன்றிணைத்து அறிமுகம் செய்தல்.
- உலக வர்த்தகத்தில் வளர்ந்துவரும் நாடுகளின் ஒரு சிறந்த வளர்ச்சிக்கு பாதுகாப்பாக இருத்தல்.
- முடிவெடுக்கும் செயல்களின் வெளிப்படைத் தன்மையை அதிகரித்தல்.
- முழு வேலை வாய்ப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் பயனுள்ள தேவையை அதிகரித்தல்.

## அறிவுசார் சொத்துரிமை தொடர்பான வர்த்தக உரிமைகள் (TRIPs - Trade Ralated aspectes of Intellectual property Rights):

அறிவுசார் பண்டங்களின் உரிமைகள் என்பது "ஒரு வணிக மதிப்புடன் கூடிய தகவல்" என வரையறுக்கலாம். TRIPs ன் கீழ், பண்டங்கள் அல்லது செயல்முறைகள், அனைத்து துறைகளின் தொழில் நுட்பங்களில், எந்தவொரு கண்டுபிடிப்புக்கும் காப்புரிமை வழங்குகிறது. TRIPs ஒப்பந்தத்தில் ஏழு பகுதிகள் அறிவார்ந்த சொத்து உரிமைகளை உள்ளடக்கியுள்ளது. அதாவது, நகல் உரிமைகள், வர்த்தக சந்தை, வர்த்தக ரகசியங்கள், தொழில் வடிவமைப்பு, புவியியல் முகவர்களின் ஒருங்கிணைந்த சுற்றுகள் மற்றும் காப்புரிமைகள் போன்றவைகள் ஆகும்.

## வர்த்தக தொடர்புடைய முதலீட்டு நடவடிக்கைகள் (TRIMs – Trade Related Investment Measures):

உள்நாட்டு தொழில்களின் வளர்ச்சிக்காக தேவையான வசதிகளை வழங்குவதற்கு அந்நாட்டில் செய்யப்படும் வெளிநாட்டு முதலீட்டிற்கு சில நிபந்தனைகள் அலலது கட்டுபாடுகளை அரசு விதிக்கும் என்பதையே TRIMS குறிக்கறிது என உருகுவே சுற்று உடன்படிக்கை கூறுகிறது.

**உலகமயமாக்கலின் தாக்கமும் மற்றும் சவால்களும்:**
**நேர்மறைத் தாக்கம்:**

- ஒரு சிறந்த பொருளாதாரம், மூலதன சந்தையின் விரைவான வளர்ச்சியை அறிமுகப்படுத்துகிறது.
- வாழ்க்கைத்தரம் அதிகரித்துள்ளது.
- உலகமயமாக்கல் வேகமாக வர்த்தகத்தை அதிகரித்து, அதனால் அதிக மக்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிக்கப்படுகிறது.
- புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் புதிய அறிவியல் ஆராய்ச்சி முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டது.
- உலகமயமாக்கல் ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும்.
- இது பண்டங்களின் ஓட்டத்தை தாராளமாக அதிகரிக்கவும், வெளிநாட்டு நேரடி முதலீடுகளை (FDI) அதிகரிக்கவும் உதவுகிறது.

**எதிர்மறைத் தாக்கம்:**

- நாடுகளுக்கிடையே மிக அதிகமான மூலதனம், வருமானத்தின் நியாயமற்ற மற்றும் ஒழுக்கமற்ற விநியோகிப்பாளர்களை அறிமுகப்படுத்துகிறது.

- தேசிய ஒருமைப்பாட்டை இழந்து வருவதோடு, மிக அதிகமான வர்த்தக பரிமாற்றம், இருப்பதால், சுதந்திரமான உள்நாட்டுக் கொள்கைகள் இழக்கப்படுகின்றன என்பத அச்சத்திற்குரியதாகும்.

- முக்கிய உள்கட்டமைப்பும் மற்றும் வளங்களை பிரித்தெடுத்தலும் ஒரு பொருளாதாரத்தின் விரைவான வளர்ச்சிக்கு தேவை என்றாலும், இது எதிர்மறை சுற்றுச்சூழல் மற்றும் சமூக செலவுகளை அதிகரிக்கும்.

- அந்நிய செலாவணியை பெறுவதற்காக, இயற்கை வளங்கள் மிக அதிகமாக விரைவாக சுரண்டப்படுகிறது.

- சுற்றுச்சூழல் பற்றிய தரங்களும், கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டுள்ளன.

**உலகமயமாக்கலின் சவால்கள்:**

- உலகமயமாக்கலில் நன்மைகள் அனைத்து நாடுகளுக்கும் நீடிக்கப்படவேண்டும். அவை தன்னிச்சையாக செயல்படாது.

- வளர்ந்து வரும் உலகில் உலகமயமாக்கல், உறுதியற்ற தன்மைக்கு வழிவகுக்கும் என்பது அச்சத்திற்குரியதாகும்.

- உலமயமாக்களினால் உலகளாவிய போட்டி அதிகரித்த தொழில்துறை உலகில், ஊதியங்கள், தொழிலாளர் உரிமைகள். வேலைவாய்ப்பு நடைமுறைகள் ஆகியவற்றை அடிமட்டத்திற்கு கொண்டு செல்ல இது வழிவகுக்கும்.

- இது உலகளாவிய சமத்துவமின்மைக்கு வழிவகுக்கிறது.

- உலகமயமாக்கல் ஒரு இக்கட்டான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

- உலகமயமாக்கலால் குழந்தை தொழிலாளர் மற்றும் அடிமைத்தனம் போன்ற நடவடிக்கைகள் அதிகரித்துள்ளது.

- மக்கள் அதிகமாக துரித உணவுகளை உட்கொள்கிறார்கள். இதனால் உடல்நலக் குறைவு மற்றும் நோய் பரவதலுக்கு இது வழிவகுக்கிறது.

# பொருளாதாரம்

## அலகு – 3

## உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து

**அறிமுகம்:**

மக்கள், வாழ்க்கையையும் வளர்ச்சியையும் பராமரிப்பதற்காக சாப்பிடும் மற்றும் அருந்தும் எந்தவொரு பொருளாகவும் உணவு வரையறுக்கப்படுகிறது. உணவு பாதுகாப்பு என்பது, ஒரு நபர் போதுமான அளவு சாப்பிடுவதையும் சுறுசுறுப்பாக இருப்பதையும் ஆரோக்கியமான வாழ்க்கையை நடத்துவதையும் குறிக்கும்.

**உணவு பாதுகாப்பு:**

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் வேளாண் அமைப்பு உணவு பாதுகாப்பினைப் பின்வருமாறு வரையறுக்கிறது.

‘‘எல்லா மக்களும், எல்லா நேரங்களிலும், போதுமான, பாதுகாப்பான மற்றும் சத்தான உணவுக்கான உடல், சமூக மற்றும் பொருளாதார அணுகுமுறையை கொண்டிருக்கும் போது, அவர்களின் உணவுத் தேவைகளையும், சுறுசுறுப்பான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கான உணவு விருப்பங்களையும் பூர்த்தி செய்வதில் உணவு பாதுகாப்பு இருக்கிறது’’(FAO,2009)

இந்த விரிவான வரையறை உணவு சத்துமிக்கதாக இருக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்துவதோடு, அது பாதுகாப்புமிக்க ஊட்டச்சத்தினைப் பெற வேறு சில அம்சங்கள் தேவைப்படுவதையும் உணர்த்துகின்றன.

பிரபல விவசாய விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதனின் கருத்துப்படி,‘‘சரிவிகித உணவு, பாதுகாப்பான குடிநீர், சுற்றுச்சூழல் சுகாதாரம், ஆரம்ப சுகாதார பராமரிப்பு மற்றும் ஆரம்பக் கல்வி ஆகியவற்றிற்கான உடல், பொருளாதார மற்றும் சமூக அணுகல்’’ என்பது ஊட்டச்சத்து பாதுகாப்பாகும்.

உணவு பாதுகாப்பு என்ற கருத்து கடந்த ஐந்து சகாப்தங்களாக தொடர்ச்சியாக உருவாகியுள்ளது. ஆரம்பத்தில் இது உலகளாவிய, வட்டார அல்லது தேசிய சூழலுக்கான ஒட்டு மொத்த உணவு வழங்குதலைக் குறிக்கிறது. ஒட்டுமொத்த போதுமான தன்மையை குறிக்கும் உணவு வழங்கல்/உணவு உற்பத்தி பற்றி விவாதித்த உணவு பாதுகாப்பு குறித்த இந்த சிந்தனைகளிலிருந்து, இந்த சொல் சமூகம்/வீட்டு/தனிநபர் மட்டத்தில் பொருத்தமானதாக இருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

**உணவின் அடிப்படைக் கூறுகள் மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு**

உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பின் மூன்று அடிப்படைக் கூறுகளை உள்ளடக்குவதற்காக இந்த சொல் விரிவுபடுத்தப்பட்டது. அவை கிடைத்தல், அணுகல் மற்றும் உறிஞ்சுதல் ஆகும்.

1. உணவு கிடைத்தல் என்பது விரும்பிய அளவுகளில் உணவு இருப்பு இருப்பதாகும். இது உள்நாட்டு உற்பத்தி, இருப்பு மற்றும் இறக்குமதியில் மாற்றங்கள் பற்றிய ஒரு செயல்பாடாகும்.
2. உணவுக்கான அணுகல் என்பது முதன்மையாக வாங்கும் திறன் பற்றிய கூற்றாகும். எனவே,ஈட்டுதலுக்கான திறன்கள் மற்றும் வேலை வாய்ப்புகளுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது. திறன்களும், வாய்ப்புகளும் ஒருவரின் சொத்துகள் மற்றும் கல்வியுடன் தொடர்புடையது.
3. உணவினை உறிஞ்சுதல் என்பது உட்கொள்ளும் உணவை உயிரியல் ரீதியாகப் பயன்படுத்துவதற்கான திறன் ஆகும். ஊட்டச்சத்து. அறிவு, நடைமுறைகள், பாதுகாப்பு மற்றும் சுகாதாரமான சுற்றுச்சூழல் நிலைகள் போன்ற பல காரணிகள் உணவு மற்றும் சுகாதார நிலையை திறம்பட உயிரியல் தீதியாக முழுஈடுபாட்டுடன் அனுமதிக்கிறது.

**உணவு தானியங்களின் கிடைத்தல் மற்றும் அணுகல்:**

ஒரு நாட்டில் உள்ள மக்களுக்கான உணவுப்பாதுகாப்பு என்பது கிடைக்கும் உணவின் அளவைப் பொறுத்தது மட்டுமல்லாமல், உணவை வாங்க/அணுக மற்றும் தாங்குவதற்கான மக்களின் திறனையும் சார்ந்துள்ளது. பொருத்தமான ஆரோக்கியமான சூழலில், பிற சிக்கல்களைப் போலவே, மக்களின் உணளவு பாதுகாப்பும் ஒரு நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சி செயல்முறையுடன் தொடர்புடையது. சுதந்திரத்திற்கு பிறகு, இந்தியா ஒரு திட்டமிட்ட வளர்ச்சிக்கான மாதிரியைக் தேர்வு செய்தது.

விவசாயத்தில் ஆரம்பத்தில் கவனம் செலுத்திய பின்னர். தொழில் மயமாக்கலுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. இந்தியாவில் ஏற்பட்ட தொடர்ச்சியான வறட்சி, உணவு தானியங்களின் இறக்குமதியைச் சார்ந்திருக்க தள்ளப்பட்டது. இருப்பினும், அப்பொழுது இருந்த அந்நிய செலாவணி இருப்பு, திறந்த சந்தைதக் கொள்முதல் மற்றும் தானியங்களின் இறக்குமதிக்கு அனுமதிக்கவில்லை. பணக்கார நாடுகளிலிருந்து உணவு தானியங்களை சலுகை விலையில் இந்தியா கோர வேண்டியிருந்தது. 1960-களின் முற்பகுதியில் அமெரிக்கா தனது பொதுச் சட்டம் 480(பி.எல்.480) திட்டத்தின் மூலம் இந்தியாவுக்கு உதவி வழங்கியது. இந்த நிலைமை பிரபலமாக 'கப்பலுக்கு வாயில்' இருப்பு (ship to Mouth) என்று அழைக்கப்பட்டது.

ஒரு பெரிய மக்கள் தொகையைக் கொண்ட பசியுடன் வளர்ந்து வரும் ஒரு நாடு புரட்சிக்கான சாத்தியமான தேர்வாளராக கருதப்பட்டது. அமெரிக்கா நிர்வாகம் ∴போர்டு அறக்கட்டளை போன்ற மனிதநேய அமைப்புகள் உணவு உற்பத்தியை அதிகரிக்க கோதுமை மற்றும் அரிசியின் உயர் ரக விளைச்சல் வகைகளுக்கான (High Yielding Varieties) திட்டத்தை வகுத்து அறிமுகப்படுத்தியது. இந்தத் திட்டம் நீர்ப்பாசனம் உறுதி செய்யப்பட்ட இடத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. திட்டங்களின் முடிவுகள் உறுதி செயயப்பட்டதால், அதிக எண்ணிக்கையிலான மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் இந்த திட்டம் நீட்டிக்கப்பட்டது.

இவ்வாறு, பசுமைப்புரட்சி நாட்டில் தோன்றி உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற வழி வகுத்தது. உயர் ரக விதைகளான (HYV) அரிசி மற்றும் கோதுமை உணவு தானியங்கள் பயிரிடப்பட்ட பகுதியில் உற்பத்தியை அதிகரிக்க முடிந்தது. மேலும் முக்கிய தானிய பயிர்களின் விளைச்சலும் அதிகரித்தது. 1950களின் முற்பகுதியில் உணவு தானியங்களின் உற்பத்தி பரப்பளவு 98-மில்லியன் ஹெக்டேர்களுக்கும் அதிகமாக இருந்தது. நாடு 54-

மில்லயன் டன் உணவு தானியங்களை மட்டுமே உற்பத்தி செய்து கொண்டிருந்தது. அப்போது சராசரியாக ஒரு ஹெக்டேருக்கு 547கிலோ உணவு தானியங்கள் கிடைத்தன. உணவு நிலையை சீர் செய்ய ஏறத்தாழ 65-ஆண்டுகள் ஆனது. உணவு தானிய சாகுபடியின் பரப்பளவு 122-மில்லியன் ஹெக்டேருக்கு 547-கிலோ உணவு தானியங்கள் கிடைத்தன. உணவு நிலையை சீர் செய்ய ஏறத்தாழ 65-ஆண்டுகள் ஆனது. உணவு தானிய சாகுபடியின் பரப்பளவு 122-மில்லியன் ஹெக்டேராக வளர்ந்து உற்பத்தி ஐந்து மடங்காக அதிகரித்தது. சுதந்திர காலத்திற்கும் தற்போதைக்கும் இடையில் உணவு தானியங்களின் விளைச்சல் நான்கு மடங்கு அதிகரித்துள்ளது.

உணவு தானிய உற்பத்தியில் இந்த வளர்ச்சி ஒரு தொகுப்பாக செயல்படுத்தப்பட்ட HYV திட்டத்தால் சாத்தியமானது. ஏற்புத்தன்மையுடைய உரங்கள் அதிக விளைச்சல் தரும் அரிசி மற்றும் கோதுமைகளை அறிமுகப்படுத்துவதைத் தவிர, மானிய விலையில் ரசாயன உரங்கள் கிடைப்பதை உறுதி செய்தது. கூட்டுறவு வங்கிகள் மற்றம் கூட்டறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு மலிவான பண்ணைக் கடன் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு“உலகளாவிய பொது வழங்கல் முறை”யை (Universal PDS) ஏற்றுக் கொண்டது. இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களில் “இலக்கு பொது வழங்கல் முறை”(Targeted PDS) செயல்பாட்டில் இருந்தது. உலகளாவிய பொது வழங்கல் முறையின் கீழ் குடும்ப வழங்கல் அட்டை பெற்றிருப்பவர்கள் அனைவருக்கும் பொது வழங்கல் முறை மூலம் வழங்கப்படுகிறது. ஆனால் இலக்கு பொது வழங்கல் முறையில் பயனாளிகள் சில அளவு கோல்களின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டு உரிமைகள் வழங்கப்படுகிறது. மீதமுள்ளவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. மத்திய மற்றும் மாநில அரசாங்கங்கள் பொது வழங்கல் முறை மூலம் வழங்கப்படும் பொருட்களுக்கு மானியம் அளிக்கின்றன. மானியத்தின் நிலை மற்றும் அளவு மாநிலங்களுக்கு இடையே வேறுபடுகிறது. அதைத் தொடர்ந்து தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் (National Food Security Act) இந்திய நாடாளுமன்றத்தால்2013இல் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் 50% நகர்ப்புற குடும்பங்களையும் மற்றும் 75% கிராமப்புற குடும்பங்களையும் உள்ளடக்கியதாகும். இந்த குடும்பங்கள் ஒரு குறிப்பிட்ட அளவுகோலின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டு முன்னுரிமைக் குடும்பங்கள் (priority Households) என அழைக்கப்படுகின்றன. இந்த நாட்டின் முன்னுரிமை குடும்பங்களுக்கு தற்பொழுது பொது வழங்கல் முறை மூலம் வழங்கப்படும். உணவினைப் பெறும் உரிமை உண்டு. மத்திய அரசினால் அரிசியை கிலோவிற்கு ரூ.3 என்ற விகிதத்திலும், கோதுமையை கிலோவிற்கு ரூ.2 என்ற விகிதத்திலும், தினை கிலோவிற்கு ரூ.1 என்ற விகிதத்திலும் NFSA கீழ் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு தொடர்ந்து உலகளாவிய பொது வழங்கல் முறையைக் கொண்டுள்ளது மற்றும் அனைத்து அட்டைதாரர்களுக்கும் இலவசமாக அரிசியை வழங்குகிறது.

**தமிழ் நாட்டில் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம்:**

இந்தியாவில் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் துவங்கி மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர், நவம்பர்-1, 2016 அன்று இச்சட்டம் இந்தியாவிலேயே கடைசி மாநிலமாக தமிழ் நாட்டில் துவங்கப்பட்டது. அக்டோபர்-27 அன்று வெளியிடப்பட்ட அரசாங்க உத்தரவில், இச்சட்டத்தை அமல்படுத்தும்போது, அது அதன் விதிகளை மாற்றியமைக்கும் என்று அரசு குறிப்பிட்டது.

## பயோ மெட்ரிக் குடும்ப அட்டை (Bio Metric Smart Family Cards)

தற்போதுள்ள குடும்ப அட்டைகளுக்குப் பதிலாக ஸ்மார்ட் குடும்ப அட்டைகள் வழங்கப்படும் என தமிழக அரசு அறிவித்துள்ளது. தேசிய மக்கள் தொகையின் கீழ் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடவடிக்கைகளின் இயக்குநரின் தனித்துவமான அடையாள எண்ணை(UIN) வெளியிடுவதற்கு 10 விரல்கள் கைரேகை, இரண்டு கருவிழிகள் மற்றும் முகப்பதிவு செய்தல் ஆகியவற்றின் மூலம் பதிவேட்டில் பதிவிடப்படுகிறது. பயோ மெட்ரிக் பதிவு செயல்முறையை முடித்த பின்னர், இந்த தரவு பயோ மெட்ரிக் ஸ்மார்ட் குடும்ப அட்டைகளை வழங்க முன்மொழியப்பட்டது. இதன் நன்மை என்னவென்றால், இது தனிப்பட்ட அடையாளத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், உறுப்பினர்களின் தரவு நகல் மற்றும் போலி அட்டைகளை அகற்றலாம்.

### உணவு பாதுகாப்பில் நுகர்வோர் கூட்டுறவின் பங்கு:

பொதுவான மக்களுக்கு பொறுப்பான விலையில் தரமான பொருட்களை வழங்குவதில் நுகர்வோர் கூட்டுறவு முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தியாவில் மூன்று அடுக்கு அமைப்புகளில் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை,முதன்மை நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள், மத்திய நுகர்வோர் கூட்டுறவுகடைகள் மாநில அளவிலான நுகர்வோர் கூட்டமைப்புகள் ஆகும். கிராமப்புறங்களில் நுகர்வோர் பொருட்களை வழங்குவதில் 50,000க்கும் மேற்பட்ட கிராம அளவிலான சங்கங்கள் ஈடுபட்டுள்ளன. சுகாதாரம்,காப்பீடு, வீட்டுவசதி போன்ற பல வகையான நுகர்வோர் கூட்டுறவு நிறுவனங்கள் உள்ளன. இந்தியாவில் உணவு பாதுகாப்பில் இந்த திட்டம் முக்கியப் பங்கினை வகிக்கிறது. உதாரணமாக,தமிழ்நாட்டில் இயங்கும் அனைத்து நியாய விலைக் கடைகளில், சுமார் 94% கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன.

பற்றாக்குறைப் பகுதிகளில் வழங்குவதற்காக தாங்கியிருப்பு செய்யப்படுகிறது. உணவு தானியங்கள், சமூகத்தின் ஏழ்மையான பிரிவினருக்கு சந்தை விலையை விட குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகிறது. அவ்விலை வெளியீட்டு விலை என்று அழைக்கப்படுகிறது. பாதகமான வானிலை அல்லது பேரழிவுக் காலங்களில் உணவு பற்றாக்குறைப் பிரச்சினையை தீர்க்க இது உதவுகிறது.

**தாங்கியிருப்பு(Buffer Stock)**

தாங்கியிருப்பு என்பது உணவு தானியங்களான கோதுமை மற்றும் அரிசி, இந்திய உணவுக் கழகத்தின் (Food Corporation of India) மூலம் அரசாங்கத்தால் வாங்கப்படுகிறது. உபரி உற்பத்தி இருக்கும் மாநிலங்களில் விவசாயிகளிடமிருந்து கோதுமை மற்றும் அரிசியை FCIவாங்குகிறது. விவசாயிகளுக்கு அவர்களின் பயிர்களுக்கு முன்பே அறிவிக்கப்பட்ட விலை வழங்கப்படுகிறது. இந்த விலை குறைந்தபட்ச ஆதரவு விலை (Minimum Support Price) என்று அழைக்கப்படுகிறது. இந்த பயிர்களின் உற்பத்தியை உயர்த்துவதற்காக விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குவதற்காக விதைப்பு பருவத்திற்கு முன்னர் ஒவ்வொரு ஆண்டும் MSP அரசாங்கத்தால் அறிவிக்கப்படுகிறது. வாங்கிய உணவு தானியங்கள் களஞ்சியங்களில்

சேமிக்கப்படுகின்றன.

**நியாய விலைக் கடைகள்:(Fair Price Shops)**

தற்போது 33,222 நியாய விலைக் கடைகள் 1.98 கோடி குடும்பங்களுக்கு சேவை புரிகிறது. 33.222 நியாய விலைக் கடைகளில் 31,232 கடைகள் கூட்டுறவு சங்கங்களால் நடத்தப்படுகின்றன. 596 கடைகள் பெண்கள் சுய உதவி குழுக்களால் நடத்தப்படுகின்றன. பொது வழங்கல் முறைக்கு அணுகலை மேம்படுத்த, நியாய விலைக் கடைகள் வாழ்விடங்களுக்கு அருகிலேயா அமைந்திருப்பது அவசியம். அதன்படி, எந்தவொரு அட்டைதாரரும் 1.5 கி.மீக்கு மேல் நடந்து செல்லாத வகையில் புதிய நியாய விலை கடைகளைத் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**வாங்குதிறன்:**

வாங்கும் திறன் என்பது ஒரு அலகு பணம் வாங்கக் கூடிய பொருட்கள் அல்லது சேவைகளின் அளவின் அடிப்படையில் வெளிப்படுத்தப்படும் நாணயத்தின் மதிப்பு விலை ஏறும் போது வாங்கும் திறன் குறைகிறது. மாறாக, இது நேர் மாறனது.

**வாங்கு திறனைப் பாதிக்கும் காரணிகள்:**

**1. அதிக மக்கள் தொகை:**

இந்தியாவில் மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 1000க்கும் 1.7ஆக உள்ளது. அதிக மக்கள் தொகை அதிக தேவைக்கு வழி வகுக்கிறது. ஆனால் அளிப்பு தேவைக்கு வழி வகுக்கிறது. ஆனால் அளிப்பு தேவைக்கு சமமாக இல்லை. எனவே, சாதரண விலை நிலை,அதிகமாக இருக்கும். எனவே, இது குறிப்பாக கிராமப்புற மக்களின் வாங்கும் சக்தியை பாதிக்கிறது.

**2. அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரித்தல்:**

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிலையான வளர்ச்சியும், இந்தியாவில் பொருளாதாரத்தில் வளர்ச்சி வாய்ப்புகளும் இருந்த போதிலும், அத்தியாவசிய பொருட்களின் விலையில் நிலையான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. விலைகளின் தொடர்ச்சியான உயர்வு வாங்கும் சக்தியை சுரண்டி, ஏழை மக்களை மோசமாகப் பாதிக்கிறது. 2015-16 ஆம் ஆண்டில் சராசரியாக 2%பணவீக்கத்தினால், பருப்பு வகைகளின் விலை சுமார் 40% உயர்ந்தது.

**3. பொருட்களுக்கான தேவை:**

பொருட்களுக்கான தேவை அதிகரிக்கும் போது, பொருட்களின் விலையும் அதிகரிக்கிறது. அதனால் வாங்கும் சக்தி பாதிக்கப்படுகிறது.

**4. பொருட்களின் விலை நாணய மதிப்பைப் பாதிக்கிறது:**

விலை அதிகரிக்கும் போது, வாங்கும் திறன் குறைந்து இறுதியாக நாணயத்தின் மதிப்பு குறைகிறது. மாறாக, இது நேர்மாறானது.

**5. பொருட்களின் உற்பத்தி மற்றும் அளிப்பு:**

பொருட்களின் உற்பத்தி மற்றும் அளிப்பு குறையும் பொழுது, பொருட்களின் விலை அதிகரிக்கிறது ஆகையால் வாங்கும் திறன் பாதிக்கப்படுகிறது.

6. **வறுமை மற்றும் சமத்துவமின்மை:**

இந்திய பொருளாதாரத்தில் ஒரு மிகப் பெரிய ஏற்றத்தாழ்வு உள்ளது. 10% இந்தியர்களுக்கு சொந்தமான வருமானம் மற்றும் சொத்துக்களின் விகிதம் அதிகரித்து வருகிறது. இது சமுதாயத்தில் வறுமை நிலையை அதிகரிக்க வழி வகுக்கிறது. பொதுவாக வறுமையாலும் மற்றும் செல்வத்தின் சமமற்ற வழங்குதலாலும் பொதுவாக வாங்கும் திறன் பாதிக்கப்படுகிறது.

வாங்கும் சக்தி பொருளாதாரத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் பாதிக்கிறது. நுகர்வோர் பொருட்கள் வாங்குவது முதல் முதலீட்டாளர்கள் வரை மற்றும் பங்கு விலைகள் ஒரு நாட்டின் பொருளாதார செழிப்பு வரை பாதிக்கிறது. எனவே, ஒரு நாட்டின் அரசாங்கம் நாணயத்தின் வாங்கும் சக்தியைப் பாதுகாக்க மற்றும் பொருளாதாரத்தை ஆரோக்கியமாக வைத்திருக்க கொள்கைகளையும், ஒழுங்கு முறைகளையும் ஏற்படுத்த உதவுகிறது. நுகர்வோர் விலை குறியீட்டு எண் என்பது வாங்கும் சக்தியைக் கண்காணிப்பதற்கான ஒரு முறையாகும்.

**வாங்கும் சக்தி சமனிலை (Purchasing Power party)**

வாங்கும் சக்தி சமனிலை(PPP) என்பது வாங்கும் சக்தி தொடர்பான ஒரு கருத்தாகும். வாங்கும் சக்தி சமநிலை என்பது ஒரு பொருளாதாரக் கோட்பாடாகும். இது ஒரு பொருளின் விலையுடன் சரி செய்யப்பட வேண்டிய தொகையை மதிப்பிடுகிறது. இரு நாடுகளின் மாற்று விகிதங்கள் கொடுக்கப்பட்டால், ஒவ்வொரு நாணயத்தின் வாங்கும் சக்தியுடனும் பரிமாற்றம் பொருந்த வேண்டும்.

நாடுகளின் வருமான நிலைகள் மற்றும் வாழ்க்கைச் செலவு தொடர்பான பிற தொடர்புடைய பொரளாதாரத் தரவு அல்லது பணவீக்கம் மற்றும் பணவாட்டத்தின் சாத்தியமான விகிதங்களை ஒப்பிடுவதற்கு வாங்கும் சக்தி சமநிலையை பயன்படுத்தப்படலாம். சமீபத்தில் வாங்கும் சக்தி சமநிலையின் அடிப்படையில் இந்தியா மூன்றாவது பெரிய பொருளாதாரமாக மாறியுள்ளது. சீனா மிகப்பெரிய பொருளாதாரமாக மாறி, அமெரிக்காவை இண்டாவது இடத்திற்கு தள்ளியுள்ளது.

**இந்தியாவின் விவசாயக் கொள்கை:**

விவசாயப் பொருட்களின் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட புதிய விவசாயக் கொள்கை 2018-ல் மத்திய அரசால் அறிவிக்கப்பட்டது. இந்தக் கொள்கை பெரும்பாலான கரிம மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளை நீக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக அறிவித்தது.

கரிம அல்லது பதப்படுத்தப்பட்ட விவசாயப் பொருட்களுக்கு ஏற்றுமதி வரி, ஏற்றுமதி தடை மற்றம் ஒதுக்கீடு கட்டுப்பாடு போன்ற எந்தவொரு ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளின் கீழும் இருக்காது என்ற உறுதி மொழியே முக்கிய காரணமாகும்.

ஒரு நாட்டின் விவசாயக் கொள்கை பெரும்பாலும் விவசாய உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கும், ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் விவசாயிகளின் வருமான நிலை மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் அரசாங்கத்தால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கொள்கை விவசாயத்துறையின் அனைத்து வட்டங்களிலும், விரிவான வளாச்சிக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

**இந்தியாவின் விவசாயக் கொள்கையின் முக்கியமான குறிக்கோள்கள் பின்வருமாறு:**

**1. உள்ளீடுகளின் உற்பத்தித்திறனை உயர்த்துதல்:**

இந்தியாவின் விவசாயக் கொள்கையின் முக்கியமான நோக்கங்களில் ஒன்று வீரியவித்து விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள், நீர்ப்பாசன திட்டங்கள் போன்ற வாங்கிய உள்ளீடுகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதாகும்.

**2. ஒரு ஹெக்டேருக்கு மதிப்புக் கூட்டப்பட்டவை:**

வேளாண் கொள்கையானது பொதுவாக வேளாண்மையின் உற்பத்தித்திறனை உயர்த்துவதன் மூலமும், குறிப்பாக சிறிய மற்றும் ஓரளவு வைத்திருக்கும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதன் மூலமும் உடல் ரீதியிலான உற்பத்தியை உயர்த்துவதை விட ஒரு ஹெக்டேருக்கு மதிப்பு கூட்டப்பட்டதை அதிகரிப்பதாகும்.

**3. ஏழை விவசாயிகளின் நலன்களைப் பாதுகாத்தல்:**

ஏழை விவசாயிகளுக்கு நிறுவன கடன் ஆதரவை விரிவுபடுத்துதல், நிலச் சீர்திருத்தங்கள் செய்தல், இடைத்தரகர்களை ஒழித்தல் போன்றவற்றின் மூலம் ஏழை மற்றும் குறு விவசாயிகளின் நலனைப் பாதுகாப்பதே விவசாயக் கொள்கையாகும்.

**4. விவசாயத் துறையை நவீன மயமாக்குதல்:**

விவசாயக்கொள்கை ஆதரவில் விவசாய நடவடிக்கைகளில் நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல் மற்றும் HYV விதைகள், உரங்கள் போன்ற மேம்பட்ட விவசாய உள்ளீடுகளைப் பயன்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

**5. சுற்றுச்சூழல் சீரழிவு:**

இந்தியா விவசாயத்தின் இயற்கை அடித்தளத்தின் சுற்றுச்சூழல் சீரழிவை சரிபார்க்க இந்தியாவின் விவசாயக் கொள்கை மற்றொரு நோக்கத்தை அமைத்துள்ளது.

**6. அதிகாரத்துவ தடைகளை நீக்குதல்:**

விவசாயிகள் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் சுய உதவி நிறுவனங்கள் மீதான அதிகாரத்துவ தடைகளை நீக்குவதற்கு இந்த கொள்கை மற்றொரு குறிக்கோளை அமைத்துள்ளது. இதனால் அவர்கள் சுதந்திரமாகச் செயல்பட முடியும்.

**வறுமையின் பல பரிமாணத்தின் இயல்பு:**

ஒரு விரிவான வடிவத்தினை உருவாக்க பல பரிமாண வறுமை நடவடிக்கைகள் பயன்படுத்தப்படுகிறது. யார் ஏழை,அவர்கள் எப்படி ஏழை, அவர்கள் அனுபவிக்கும் தீமைகளின் வீச்சு ஆகியவற்றை அவர்கள் வெளிப்படுத்துகிறார்கள். அத்துடன் வறுமையின் தலைப்பின் கீழ், ஒரு நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், பல்வேறு துணைக்குழு மக்களிடையேயும் காணப்படும் வறுமையின் அளவினை பல பரிமாண நடவடிக்கைகளினால் வெளிப்படுத்தி உடைக்க முடியும்.

பல பரிமாண வறுமை குறியீடு (MPI)ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் (United Nations Development Programme)மற்றும் ஆக்ஸ்போர்டு

வறுமை மற்றும் மனித மேம்பாட்டு முனைவு (oxford Poverty and human Development Initiative) ஆகியவற்றால் 2010ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. பல பரிமாண வறுமை குறியீட்டின் அடிப்படை தத்துவமும், முக்கியத்துவமும் என்னவென்றால், வறுமை என்பது ஒற்றை பரிமாணமல்ல, அது பல பரிமாணத்தினைக் கொண்டது என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது.

உடல் நலம்,கல்வி, வாழ்க்கைத் தரம், வருமானம் அதிகாரமளித்தல், பணியின் தரம் மற்றும் வன்முறையினால் அச்சுறுத்தல் போன்ற ஏழை மக்களின் அனுபவத்தை இழக்கும் பல காரணிகளால் பல பரிமாண வறுமை உருவாகிறது.

**இந்தியாவின் பல பரிமாண வறுமை குறியீடு 2018:**

ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்டம் (UNDP) மற்றும் ஆக்ஸ்போர்டு வறுமை மற்றும் மனித மேம்பாட்டு முனைவு (OPHI) ஆகியவற்றால் தயாரிக்கப்பட்ட பல பரிமாண வறுமைக் குறியீடு 2018 அறிக்கை, இந்தியாவைப் பற்றி பின்வருமாறு கூர்ந்து உருவாகியுள்ளது.

1. இந்தியா தனது வறுமை விகிதத்தை 10ஆண்டுகளில் 55% லிருந்து 28% ஆக வெகுவாக குறைந்துள்ளது. 2005-2006 மற்றும் 2015-2016 ஆம் ஆண்டிற்கு இடையில் 271மில்லியன் மக்களை வறுமையிலிருந்து விடுவித்தனர்.
2. இந்தியாவில் 2015-2016 ஆம் ஆண்டில் 364 மில்லியன் ஏழை மக்கள் இருந்தனர். இது எந்த ஒரு நாட்டிற்கும் மிகப்பெரியதாகும். இருப்பினும் 2005-2006ஆம் ஆண்டில் 635 மில்லியனாக இருந்ததை குறைத்துள்ளது.
3. 2015-2016ஆம் ஆண்டில் பல பரிமாண வறுமை குறியீடு ஏழைகளாக இருந்த 364 மில்லியன் மக்களில், 156 மில்லியன் குழந்தைகளாகும். 2005-2006 ஆம் ஆண்டில் இந்தியாவில் 292 மில்லியன் ஏழைக் குழந்தைகள் இருந்தனர். இது 47% குறைவு அல்லது பல பரிமாண வறுமையில் வளர்ந்து வரும் 136 மில்லியன் குறைவான குழந்தைகளை குறிக்கிறது.
4. பழங்குடியினரைச் சேர்ந்த 80% மக்கள் 2005-2006 ஆம் ஆண்டில் ஏழைகளாக இருந்தனர், அவர்களில் 2015-2016 ஆம் ஆண்டில் 50% பேர் இன்னும் ஏழைகளாகவே உள்ளனர்.
5. 2015-2016 ஆம் ஆண்டில் வறுமையால் பாதிக்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட மிக ஏழ்மையான மாநிலமாக பீகார் இருந்தது.
6. பீகார், ஜார்க்கண்ட், உத்திரப்பிரதேசம் மற்றும் மத்திய பிரதேசம் ஆகிய நான்கு ஏழ்மையான மாநிலங்கள் இன்னும் 196 மில்லியன் பல பரிமாண வறுமை குறியீடுள்ள ஏழை மக்களைக் கொண்டுள்ளன. இது இந்தியாவில் உள்ள அனைத்து பல பரிமாண வறுமை குறியீடுள்ள ஏழை மக்களில் பாதிக்கும் மேலானதாகும்.
7. 2006ஆம் ஆண்டில் கேரளா மிகக் குறைந்த ஏழ்மை வட்டாரங்களில் ஒன்றாக இருந்தது. அது பல பரிமாண வறுமை குறியீட்டை சுமார் 92% குறைத்துள்ளது.

## தமிழ்நாட்டின் பல பரிமாண வறுமை குறியீடு அறிக்கை-2018

கடந்த பத்து ஆண்டுகளாக, வறுமைக் குறைப்பில் தமிழகம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்கள் மூன்று வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை உயர் வறுமை மாவட்டங்கள் (வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் மக்கள் தொகையில் 40%க்கும் அதிகமானோர்), மிதமான ஏழை மாவட்டங்கள்(30% முதல் 40% வரை) மற்றும் குறைந்த அளவிலான வறுமை மாவட்டங்கள் (30%க்கும் குறைவு) ஆகும்.

1994க்குப் பிறகு, தமிழ்நாட்டின் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் வறுமை படிப்படியாகக் குறைந்துள்ளது, மற்றும் இந்தியாவில் அதன் மக்கள் தொகையுடன் ஒப்பிடும் போது சிறிய ஏழ்மைப் பங்கினைக் கொண்டுள்ளது. 2005-க்குப் பிறகு, இந்தியாவில் பல மாநிலங்களை விட வறுமைக் குறைப்பு தமிழ்நாட்டில் வேகமாக உள்ளது. 2014-2017 வரையிலான காலங்களில் வறுமை ஒழிப்புத் திட்டங்களில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. தற்போது, இந்திய அரசு வறுமையை ஒழிக்க பல கொள்கைகளையும், திட்டங்களையும் செயல்படுத்துகிறது.

இந்த கொள்கைகள் மற்றும் திட்டங்கள் தொடர்ந்து இருந்தால் மாநிலத்தின் வறுமையை முற்றிலுமாக ஒழிக்கலாம். எதிர்காலத்தில் தமிழ்நாடு இந்தியாவின் ஒரு மாதிரி மாநிலமாக மாற வாய்ப்புள்ளது.

## தமிழ்நாட்டின் அதிக மற்றும் குறைவான MPI மாவட்டங்கள்

| வ.எண் | அதிக மாவட்டங்கள் | தரம் | குறைவான மாவட்டங்கள் | தரம் |
|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 1 | தர்மபுரி | 32 |
| 2 | சென்னை | 2 | பெரம்பலூர் | 31 |
| 3 | கடலூர் | 3 | இராமநாதபுரம் | 30 |
| 4 | கோயம்புத்தூர் | 4 | விருதுநகர் | 29 |
| 5 | நாகப்பட்டினம் | 5 | அரியலூர் | 28 |

## ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலை:

உணவு பாதுகாப்பில் ஊட்டச்சத்தும் பாதுகாப்பும் அடங்கும் என்பதை நாம் முன்னரே குறிப்பிட்டோம். நமது நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்திருந்தாலும், மக்களின் ஊட்டச்சத்து நிலையில் அந்த அளவிலான முன்னேற்றங்களை அடையவில்லை. 2015-2016ஆம் ஆண்டில், 27% கிராமப்புறப் பெண்களும் மற்றும் 16% நகர்ப்புற பெண்களும் (15-49 வயதுக்குட்பட்டவர்கள்) ஊட்டச்சத்து குறைபாடு உடையவர்கள் அல்லது நீண்ட கால ஆற்றல் குறைபாடு என தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பினால் கண்டறியப்பட்டது.

இந்தியாவில் கிராமப்புற மற்றும் நகர்ப்புற இனப்பெருக்க வயதுக் குழுவில் (15-49 வயது) பாதிக்கும் மேற்பட்ட பெண்கள் 2015-2016 ஆம் ஆண்டில் இரத்தசோகைக்கு ஆளானார்கள். குழந்தைகளைப் பொறுத்தவரை கிராமப்புறங்களில் 60% மற்றும் 56% நகர்ப்புற குழந்தைகள் (6-59மாதங்கள்)

2015-2016 ஆம் ஆண்டில் இரத்த சோகை உடையவர்கள் எனப் கருதப்பட்டனர். கிராமப்புறங்களில் சுமார் 41% மற்றும் 31% குழந்தைகள் குன்றியிருக்கின்றனர். அதாவது அவர்களின் வயதுக்கு ஏற்ப தேவையான உயரத்தை கொண்டிருக்கவில்லை. ஊட்டச்சத்தின் குறைபாட்டினால் மற்றொருக் குறியீடாக குழந்தைகளிடையே வயது தொடர்பான எடையை விட "எடை குறைவாக" உள்ளனர். இந்தியாவில் 2015-2016ஆம் ஆண்டில் சுமார் 20% குழந்தைகள் (6-59 மாத வயதுக்குட்பட்டவர்கள்) எடைக் குறைவாக இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு நமது உணவு உற்பத்தியில் தன்னிறைவை எட்டியிருந்தாலும், நாம் அனைவருக்குமான உணவு பாதுகாப்பு என்ற நிலையை இன்னும் அடையவில்லை.

**ஊட்டச்சத்து மீதான தமிழ்நாடு அர்ப்பணிப்பு:**

இந்தியாவில் பசி என்ற ஒன்று மட்டுமே அரசியல் முன்னுரிமைக்கு போதுமானதாக இல்லை என்பதனை நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் அமர்த்தியாசென் உற்றுநோக்கியுள்ளார். சுகாதாரத்திற்கான பொதுச்செலவு மிகவும் குறைவு, குழந்தை ஊட்டச்சத்து போன்ற திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி செலவிடப்படாமல் உள்ளது. "ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத மாநிலம்" என்ற நிலையை அடைவது போன்ற குறிக்கோள்களை அமைப்பதன் மூலம் இந்த பிரச்சனைகளைச் சமாளிப்பதற்கான அரசியல் விருப்பத்தையும், அர்பணிப்பையும் அவர் தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் மட்டுமே காண்கிறார்.

**தமிழ்நாட்டில் ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியத்தின் நிலை:**

மனித ஆரோக்கியத்திலும், நல்வாழ்விலும் ஊட்டச்சத்து முக்கியப் பங்கு வகிக்கிறது. தேசிய அளவில் அதிக பொருளாதார வளர்ச்சி இருந்த போதிலும், மக்கள்தொகையின் ஊட்டச்சத்து அளவுகள் போன்ற மனித வளர்ச்சி குறிகாட்டிகளில் மேம்பாடுகள் ஏற்றுக்கொள்ள முடியாத அளவிற்கு மெதுவாக உள்ளன. ஏராளமான இந்திய குழந்தைகள் வளர்ச்சி குன்றியிருக்கிறார்கள். கணிசமான எண்ணிக்கையிலான இந்திய குழந்தைகள் மற்றும் பெண்கள் எடைகுறைவாகவும், இரத்த சோகை மற்றும் நுண்ணோட்டச் சத்து குறைபாடுகளாலும் பாதிக்கப்படுகின்றனர். இந்தப் பிரச்சனைகளை நீக்குவதற்காக மத்திய மற்றும் மாநில அரசுகள் பல்வேறு சுகாதார மற்றும் ஊட்டச்சத்துத் திட்டங்களான ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள் (integrated child Development Services), மதிய உணவுத் திட்டம், இனப்பெருக்க மற்றும் குழந்தைகள் சுகாதார திட்டங்கள் (Reproductive and Child Health Programmes), மற்றும் தேசிய கிராமப்புற சுகாதாரப் பணி (National Rural health Mission) போன்ற திட்டங்களில் கணிசமான வளங்களை கொண்டு வருகின்றன. எவ்வாறாயினும், நாட்டின் ஊட்டச்சத்து குறைவான நிகழ்வுகளைத் தணிக்க இந்த முயற்சிளைத் திறம்பட அளவிடுவது அவசியமாகும்.

ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் இளம் பருவப் பெண்கள் ஆகியோரின் உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்து நிலைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கொண்டுவருவதில் தமிழகம் ஒரு முன்னோடி பங்கைக் கொண்டுள்ளது. ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியத்திற்கான தமிழக அரசின் அடுத்தடுத்த வரவுசெலவுத்திட்ட

செலவினங்கள் நாட்டிலேயே மிக அதிகமாகும். ICDSதிட்டம் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் ஆகியவற்றின் செயல்திறன் நாட்டின் மிகச் சிறந்த ஒன்றாகக் கருதப்படுகின்றன.

'ஒரு ஊட்டச்சத்துக் குறைபாடு இல்லாத தமிழ்நாடு' என்ற தமிழ்நாட்டின் கொள்கை, ஊட்டச்சத்துக் குறைபாட்டை அகற்றுவதற்காக மாநிலத்தின் நீண்டகால பல துறைக் கொள்கைகளை செயல்படுத்துகிறது. 'அனைத்து வகையான மனித ஊட்டச்சத்துக் குறைபாட்டையும் சிறந்த செயல்திறன் கொண்ட நாடுகளின் நிலைக்குக் குறைப்பது' என்பது இதன் குறிக்கோளாகும். "அனைத்து வகையான மனித ஊட்டச்சத்து குறைபாட்டையும் சிறந்த செயல்திறன் கொண்ட நாடுகளின் நிலைக்கு குறைப்பது" என்பது இதன் குறிக்கோளாகும். தமிழ்நாட்டில், 434 குழந்தைகள் மேம்பாட்டுத் தொகுதிகளில் (385 கிராமப்புற, 47 நகர்ப்புற மற்றும் 2 பழங்குடியினர்) 54,439 குழந்தை மையங்கள் (49,499 அங்கன்வாடி மையங்கள்) மூலம் ICDSசெயல்படுத்தப்படுகிறது.

அணுகப்படாத பகுதிகளுக்கு நிலையான விரிவாக்கம், ஓரங்கட்டப்பட்ட குழுக்களின் பாதுகாப்பு, மேம்பட்ட ஒதுக்கீடுகள் மற்றும் சேவைகளின் விரிவாக்கம் ஆகியவற்றுடன்,ICDS இப்போது உலகின் மிகப்பெரிய திட்டங்களில் ஒன்றாக கருதப்படுகிறது மற்றும் குழந்தையின் முழுமையான வளர்ச்சிக்கான ஒரு மாதிரியாகும். சேவைகள் நோக்கம் கொண்ட பயனாளிகளை அடைவதை உறுதி செய்வதற்காக, இந்த திட்டம் உலகமயமாக்கப்பட்டு, சுகாதாரம், கல்வி, குடிநீர், சுகாதாரம் போன்றவற்றைக் கையாளும் தொடர்புடைய துறைகளுடன் ஒன்றிணைக்கப்படுகிறது.

புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் குழந்தைகளிடையே ஊட்டச்சத்துக் குறைபாட்டை எதிர்த்துப் போராடுவதற்கும், தொடக்கப்பள்ளி சேர்க்கையை அதிகரிப்பதற்கும், இடைநிற்றல் விகிதங்களைக் குறைப்பதற்கும் நாட்டின் மிகப்பெரிய மதிய உணவுத் திட்டமாகக் கருதப்படுகிறது. நாட்டின் பிற மாநிலங்கள், தமிழகத்தின் முன்னோடி முயற்சிகளின் படி மதிய உணவுத் திட்டங்களை வடிவமைத்துள்ளன.

**சக குழு ஈடுபாடு அதிகரித்தல்:**

- பெண் குழந்தைகளை மேம்படுத்துவதற்கும் மாற்றத்தின் தூண்டுதலான வினையூக்கிகளாக மாற்றுவதற்கும் 'பதுமையர் குழு' வலுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
- இளம் பருவப் பெண்களை இத்திட்டத்திற்கு ஈர்ப்பது, பல்வேறு பணிகளில் அவர்களை இணைப்பது மற்றும் செயற்பாடுகளில் அவர்கள் பங்கேற்பதை ஊக்குவிப்பது போன்ற புதுமையான அணுகுமுறைகள் பரிசீலிக்கப்படும். ஒன்பது மாவட்டங்களில் சேவைகளை விரிவுபடுத்துவதற்காக நடமாடும் மையங்கள் உருவாக்கப்பட்டது,
- 'பதுமையர் அட்டை' வழங்கப்பட்டு, மேலும் கண்காணிப்பு பலப்படுத்தப்படும்.

**தமிழ்நாட்டில் முக்கியமான திட்டங்கள்:**

1. **டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நலத் திட்டத்தின் (Dr. Muthulakshmi Reddy Maternity Benefit Scheme)** கீழ், ஏழை

கர்பிணிப் பெண்களுக்கு ரூ.12,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது. சக்திமிக்க உணவிற்கான செலவுகளை மேற்கொள்ளுதல் பிரசவக் காலத்தில் வருமான இழப்பினை ஈடுசெய்வது, மற்றும் புதியதாக பிறக்கும் குழந்தைகளின் குறைந்த எடை பிறப்பினை தவிர்க்க மூன்று தவணைகளில் பிறப்பிற்கு முந்தைய கவனிப்பைப் பெறுதல், அரச நிறுவனங்களின் குழந்தைகளை பிரசவித்தல் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துகள் வழங்குதல் போன்றவை இதன் குறிக்கோளாகும்.

2. **முதலமைச்சரின் விரிவான சுகாதார காப்பீடு திட்டத்தின் (chief Minister's Comprehensive Health Insurance Scheme)** மூலம் அரசாங்கத்தால் இலவச மருத்துவ மற்றம் அறுவை சிகிச்சை வழங்கி அனைவருக்கும் உலகளாவிய உடல் நலம் வழங்கும் நோக்கில் 2011-12 ஆம் ஆண்டில் இந்த திட்டம் தொடங்கப்பட்டது. பயனாளிகளின் ஆண்டு வருமானம் ரூ.72,000க்கு குறைவாக இருந்தால் அரசு மற்றும் தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அனைத்து செலவுகளையும் அரசே ஏற்றுக்கொள்கிறது.

3. **தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்டங்கள் (Tamil Nadu health Systems Projects)** இலவசமாக ஆம்புலன்ஸ் சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. (108 அவசர ஆம்புளன்ஸ் சேவை)

4. **'பள்ளி சுகாதார திட்டம்' (School Health Programme)** ˙முக்கியமாக விரிவான சுகாதார சேவையை அரசு மற்றம் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் வழங்குவதை வலியுறுத்துகிறது.

5. **தேசிய தொழுநோய் ஒழிப்பு திட்டத்தின் (National Leprosy Eradication Programme)**மூலம் அனைத்து தொழு நோயாளிகளையும் கண்டறிந்து தொடர்ச்சியான சிகிச்சையை வழங்குவதை நோக்கமாக கொண்டு மாநிலத்தில் செயல்படுத்தப்படுகிறது.

**தமிழ்நாட்டின் சில ஊட்டச்சத்து திட்டங்கள்:**

1. **புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் ஊட்டச்சத்து உணவுத்திட்டம் (Purachi Thalaivar M.G.R Nutrition Meal Programme):** கிராமப்புறங்களில் ஜூலை 1, 1982 முதலும், நகர்ப்புற பள்ளி மாணவர்களுக்கு 1984 முதலும், ஓய்வூதியதாரர்களுக்கு 1983 முதலும், கர்ப்பிணிப் பெண்களுக்கு 1995 முதலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

2. **ஆரம்பக் கல்விக்கு தேசிய ஊட்டச்சத்து ஆதரவு திட்டம்: (National Programme of Nutritional Support to primary Education)**

3. **பொது ICDSதிட்டங்கள் மற்றும் உலக வங்கி உதவியுடன் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள்: (General ICDS Projects and World bank Assisted Integrated Child Devgelopment Services)** 24 மாவட்டங்களை உள்ளடக்கிய 318 வட்டாரங்களில் 1991இல் இச்சேவை ஆரம்பிக்கப்பட்டது. 318 கிராமப்புற வட்டாரங்கள் மற்றும் 19500 மையங்களுக்கும் 1991ல் இது விரிவாக்கப்பட்டது.

4. **பிரதம மந்திரி கிராமோதயா யோஜனா திட்டம் ( Pradhan Manthri Gramodays Yojan Scheme):** 6மாதங்கள் முதல் 36 மாதங்கள் வரையான குழந்தைகளுக்கு உணவில் ஊட்டச்சத்து வழங்கப்படாத குக்கிராமங்களில் வழங்கப்படுகிறது.

5. **தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் (Tamil Nadu Integrated Nutrition Programme):** இத்திட்டம் 1980இல் ஆரம்பிக்கப்பட்டு 6-36 மாத வயதிற்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்கள் ஆகியோரை இலக்காக வைக்கப்பட்டது.

6. **மதிய உணவுத் திட்டம் (Mid-Day Meal Programme)** : இந்த திட்டம் 2-14 வயதுக்குட்பட்ட அங்கன்வாடி அல்லது பள்ளி குழந்தைகளுக்கு ஒரு பயனாளிக்கு தலா ரூ.0.90 வீதம் செலவழிக்கப்படுகிறது. இந்த திட்டம் 4426 வட்டாரங்களில் 5.57 கோடி குழந்தைகளை உள்ளடக்கியது.

# அத்தியாயம் - 9

# இந்தியாவின் மேம்பாட்டு அனுபவங்கள்

**அறிமுகம்:**

இந்தியா 1947-ல் சுதந்திரம் அடையும் போது, பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையிலே இருந்தது. அறிவியல் மற்றும் தொழில் நுட்பங்களில் பின்தங்கிய நிலையில் இருந்ததால் தொழில்மயமாதல் மிகக் குறைவாகவும், உறுதியின்றியும் இருந்தது. விவசாயத்துறை நிலப்பிரபுக்களின் கையில் இருந்தது. எனவே, அங்கு உற்பத்தித்திறன் மிகவும் குறைவாக இருந்தது. போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு பின்தங்கிய நிலையிலே காணப்பட்டன. கல்வி மற்றும் சுகாதார வசதிகள் போதுமானதாக இல்லை. மேலும் சமூக பாதுகாப்பு நடவடிக்கைகள் கானல் நீராகவே இருந்தது. சுருங்கக்கூறின், வறுமையும், வேலையின்மையும் நாட்டின் இரண்டு மிகப்பெரிய பிரச்சனைகளாக இருந்தது. இதன் காரணமாக மக்களின் வாழ்க்கைத்தரம் பின் தங்கிய நிலையில் இருந்தது.

சுதந்திரத்திற்குப் பிந்தைய காலத்தில் 1991-ம் ஆண்டு, இந்திய பொருளாதாரத்தில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. ஒரு பெரிய பொருளாதார நெருக்கடியை இந்தியா சந்தித்தது. வெளிநாட்டு வாணிபக் கணக்கில் பேரிழப்பு ஏற்பட்டு இருந்தது. எனவே இந்தியா புதிய பொருளாதாரக் கொள்கைகளைக் கொண்டுவர வேண்டியிருந்தது. இந்திய பொருளாதார அமைப்பில் பெரும்பாலான மாற்றங்களைக் கொண்டு வர வேண்டியிருந்தது. நாட்டின் கட்டமைப்பை மேம்படுத்தும் கொள்கைகளை அறிமுகப்படுத்தியதன் மூலம் பொருளாதார நெருக்கடிகளுக்கு இந்தியா முற்றுப்புள்ளி வைத்தது. இந்த கொள்கைகள் தொழிற்சாலை, வணிகம், நிதி மற்றும் வேளாண்மை போன்ற பொருளாதாரத்தின் பல துறைகளின் பலவீனத்தையும், முட்டுக்கட்டையாக உள்ள கடுமையான தடைகளை மாற்றுவதையும் முக்கிய நோக்கமாக கொண்டிருந்தது.

**தாராளமயம், தனியார்மயம் மற்றும் உலகமயமாதல் என்பதன் பொருள் (LPG): தாராளமயாக்கலின் தாக்கம்**

| நேர்மறை விளைவுகள் | எதிர்மறை விளைவுகள் |
|---|---|
| வெளிநாட்டு முதலீடு அதிகரிப்பு<br>உற்பத்தி அதிகரிப்பு<br>தொழில்நுட்ப வளர்ச்சி மேம்பாடு<br>GDP வளர்ச்சி வீதம் அதிகரிப்பு | வேலையின்மை அதிகரிப்பு<br>வசதி வரவுக் குறைவு |

தாராளமயம், தனியார்மயம் மற்றும் உலகமயமாதல் என்ற கருத்துருக்கள் புதிய பொருளாதாரக் கொள்கையின் மூன்று முக்கிய தூண்களாக இருந்தன.

**தனியார் மயமாதல்:**

தனியார் மயமாக்குதல் என்பது பொதுத்துறையின் நிர்வாகம் மற்றும் உரிமையை தனியாருக்கு மாற்றுவதைக் குறிக்கும். அரசின் நாட்டுடமையாக்குதலின்மை, அரசு முதலீடுகள் குறைப்பு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களை தனியார் துறைக்கு மாற்றியமைத்தல் போன்றவையே தனியார்மயமாதலின் சாராம்சம் ஆகும்.

**உலகமயமாதல்:**

உள்நாட்டுப் (இந்தியா) பொருளாதாரத்தையும் ஏனைய உலக பொருளாதாரத்தையும் இணைப்பது உலகமயமாதல் எனப்படும். சுங்க வரிக் குறைப்பு மற்றும் சுங்க வரி தவிர்ப்பு போன்ற செயல்பாடுகளின் மூலம் இறக்குமதியை எளிமைப்படுத்துதல், அயல்நாட்டு நேரடி முதலீடு (FDI) மற்றும் அயல்நாட்டு தொகுப்பு முதலீடுகளுக்கான (FPI) கதவுகளைத் திறந்து வைப்பது போன்ற ஒரு சில நடவடிக்கைகள் உலகமயமாக்குதலின் அளவீடுகள் ஆகும்.

**உலகமயமாக்கலின் தாக்கம்:**

| நேர்மறை விளைவுகள் | எதிர்மறை விளைவுகள் |
|---|---|
| சந்தை விரிவாக்கம்<br>உள்கட்டமைப்பு வளர்ச்சி<br>உயர்ந்த வாழ்க்கை தரம்<br>பன்னாட்டு ஒத்துழைப்பு | நெருக்கடி போட்டி<br>முற்றுரிமை அதிகரிப்பு |

## LPG க்கு ஆதரவான கருத்துக்கள்:

1. இந்தியாவில் பொருளாதார நடவடிக்கைகளை எளிதாகத் துவங்க இயலாத அளவுக்கு கட்டுப்பாடுகள் இருந்தன. அரசு உரிமைக்கொள்கைகளைச் சற்றே தளர்த்துவது அவசியமாக இருந்தது.

2. பொருளாதார வளர்ச்சியில் தனியார் துறைக்குப் போதுமான வாய்ப்புகளை வழங்கப்படவில்லை என்ற கருதப்பட்டதால் தனியார்மயமாதல் அவசியமானது.

3. வளர்ச்சி குன்றிய நாடுகளின் உதவியின்றி வளர்ந்த நாடுகள் மேலும் வளர முடியாது. இதற்கு உலகமயமாதல் அவசியமாகிறது. வளரும் நாடுகளின் இயற்கை மற்றும் மனித வளங்கள் முழுவதையும் வளர்ந்த நாடுகள் சுரண்டிக்கொள்கின்றன. வளர்ந்த நாடுகள் தங்களது உற்பத்திப் பண்டங்களை சந்தைப்படுத்தும் அங்காடியாக வளரும் பொருளாதார நாடுகளைப் பயன்படுத்திக் கொள்கின்றன. வளர்ந்த நாடுகள் தங்களுடைய உபரி முதலீட்டை பின்தங்கிய நாடுகளில் அதிகமாக செய்கின்றன. பழைய வழக்கொழிந்த தொழில்நுட்பங்களை வளர்ச்சி குன்றிய நாடுகளுக்கு விற்பதன் மூலம் வளர்ந்த நாடுகள் முன்னேறுகின்றன. முடிவாக, பணக்கார நாடுகள் வளரும் நாடுகளின் பொருளாதாரத்தினால் மேலும் வளர்கின்றன.

## LPG ற்கு எதிரான கருத்துகள்:

1. தாராளமயமாக்கும் கொள்கை வெளிநாட்டில் உள்ள பெரிய நிறுவனங்களுக்கு வசதியாகிவிட்டது. வெளிநாட்டு பெரிய நிறுவனங்களை எதிர்க்க இயலாத உள்நாட்டு நிறுவனங்கள் பாதிப்பிற்குள்ளாயின.

2. தனியார் மயமாக்குதல் பெரிய நிறுவனங்களின் முற்றுரிமைச் சக்தியினை வளர்க்கும் என்ற வாதம் உள்ளது. ஆதிக்கம் நிறைந்த நிறுவனங்கள் மட்டுமே தொழில் நீடித்திருக்க முடியும். இதில் சமூகநீதியை எதிர்பார்க்கவோ, நிலைநாட்டவோ முடியாது. எனவே மக்களிடையேயும், வட்டார அளவிலும் வேறுபாடுகள் அதிகரித்து வருகின்றன.

3. உலகமயமாக்குதல் அனைத்து நாடுகளையும் ஒன்றிணைந்து ஒரே குடையின்கீழ் கொண்டு வந்தது. உலகமயமானது பொருளாதார சக்திகளை உலக அளவில் மறுபகிர்வு செய்ய வழிவகை செய்கிறது. ஏற்கனவே வளர்ந்த நாடுகள் மேலும் வளர சாதகமாகவும், வளர்ச்சி குறைந்த நாடுகளின் நலன்கள் புறக்கணிக்கப்பட்டன. வளர்ந்த நாடுகளின் பொருளாதாரச் சிக்கல்கள் வணிகத்தின் வாயிலாக வளரும் நாடுகளுக்குப் பரவின.

## 1991-க்குப் பின்னர் இந்தியாவில் ஏற்பட்ட மாற்றங்கள்:

1. வெளிநாட்டுச் செலாவணியின் கையிருப்பு அதிகரிக்கத் துவங்கியது.
2. தொழில்மயமாதல் விரைவாக நடைபெற்றது.
3. நுகர்வு முறை மேம்படத் துவங்கியுள்ளது.
4. விரைவு நெடுஞ்சாலைகள், மெட்ரோ ரயில், மேம்பாலங்கள், விமான நிலையங்கள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் பெருகி வருகின்றன. (இந்த வசதிகள் ஏழைகளுக்கு எட்டப்படவில்லை)

சில துறைகளின் வளர்ச்சியின் பலன்கள் சமுதாயத்தில் விளிம்புநிலை மக்களுக்கு சென்றடையவில்லை. தவிர சமூக, பொருளாதார, அரசியல், மக்கட்தொகை மற்றும் சுற்றுசூழல் பிரச்சினைகள் மற்றும் சவால்களை அவை தோற்றுவிக்கின்றன. துறைகளின் முன்னேற்றம் நன்மைகளை கொண்டு வருகிறது. ஆனால் அது எந்த பிரிவினரைச் சென்றடைகிறது என்பது சமூக, பொருளாதார நிலையைச் சார்ந்தது. இந்தியப் பொருளாதாரத்தில் இத்தகைய அனைத்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும், வறுமை, வேலையின்மை, பேதங்காட்டுதல், சமுதாய புறக்கணிப்புகள், வளம்குன்றிய நிலை, பின்தங்கிய பொருளாதாரம், பணவீக்கம் அதிகரித்தல், வேளாண்மையில் தேக்கம், உணவு பாதுகாப்பின்மை மற்றும் தொழிலாளர்கள் இடப்பெயர்ச்சி ஆகிய அடிப்படைப் பொருளியல் பிரச்சினைகளை பெருமளவு இந்திய மக்கள் எதிர்கொள்கின்றனர். இவற்றுக்கு அரசின் கொள்கைகளை மட்டுமே குறைகூறக் கூடாது. தனிநபர்களின் மதிப்புகள், நம்பிக்கைகள், விதிமுறைகள் ஆகியவையும் காரணமென புதிய நிறுவனப் பொருளியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.

## முதலீட்டு விலக்கல் (DISINVESTMENT):

முதலீட்டு விலக்கல் என்பது பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை பிற தனியார் நிறுவனங்கள் அல்லது வங்கிகளுக்கு விற்பது. முதலீட்டு விலக்கம் முழுவதுமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

**இந்திய பொருளாதாரத்தின் நிலைமை:**

(குறிப்பிட்ட காலத்தில் இந்திய பொருளாதாரத்தின் நிலைமை இங்கு சுருக்கமாக குறிப்பிடப்படுகிறது. ஆனாலும் மாற்றங்கள் தவிர்க்கப்பட முடியாதவை).

- பன்னாட்டு பண நிதியத்தின் (IMF) கணிப்புப்படி, 2016-ல் இந்தியாவின் உள்நாட்டு மொத்த உற்பத்தியின் (GDP) அளவு (நடப்பு விலையில்) 2251 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது. நாணய மாற்று வீதத்தின் அடிப்படையில் உலக மொத்த GDP மதிப்பில் இந்தியாவின் பங்கு 2.99 விழுக்காடு ஆகும். ஆனாலும் இந்தியா உலக மக்கள் தொகையில் சுமார் 17.5 சதவீதத்தையும், உலக நிலப்பரப்பில் 2.4 சதவீதத்தையும் கொண்டுள்ளது.

- ஆசிய நாடுகளில், மொத்த உற்பத்தியில் சீனா (CHINA) ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு அடுத்து இந்தியா 3-வது இடத்தில் உள்ளது. 2016-ல் மொத்த ஆசியாவின் GDP-அளவில் 8.50 சதவீதமாக இந்தியாவின் பங்காக உள்ளது.

**தொழில் துறைச் சீர்திருத்தங்கள்:**

புதிய தொழிற்கொள்கைய ஜுலை 24, 1991-ல் பாரத பிரதமர் அறிவித்தார். புதிய கொள்கை தொழில்துறையில் கணிசமாக கட்டுப்பாடுகளைத் தளர்த்தியது. தொழிற்கொள்கையின் முதன்மையான நோக்கங்கள் அதிகாரத்தின் பிடியில் இருக்கும் பல தொழில்களை முன்னேற்றுவது, வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் உள்ள கட்டுப்பாடுகளை ஒழிப்பது. MRTP– சட்டக் கட்டுப்பாடுகளிலிருந்து உள்நாட்டு நிறுவனங்களை தளர்த்துவது, உற்பத்தித் திறனிலும், வேலைவாய்ப்பிலும் நீடித்த வளர்ச்சியைப் பராமரிப்பது மற்றும் சர்வதேச போட்டிகளை எதிர்கொள்வது ஆகியனவாகும்.

**தொழிற்கொள்கையில் அரசு எடுத்த முக்கிய முயற்சிகள்:**

தொழிற்கொள்கை பின்வரும் மாற்றங்களை தொழில் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தது.

1. தொழில் உரிமங்கள் விலக்கம் செய்யப்பட்டன.
2. தொழில் துறையில் உள்ள ஒதுக்கீட்டை நீக்குதல்.
3. பொதுத்துறைக் கொள்கை (கட்டுப்பாடுகள் நீக்கம் மற்றும் சீர்திருத்தங்கள்) கொண்டுவரப்பட்டது.
4. MRTP - சட்டம் ஒழிப்பு
5. அந்நிய முதலீட்டுக் கொள்கை மற்றும் அந்நிய தொழில்நுட்பக் கொள்கை கொண்டுவரப்பட்டது.

1. **தொழில் உரிம விலக்களித்தல் அல்லது சிவப்பு நாடா முறை ஒழிப்பு:**

1991-ன் புதிய தொழிற் கொள்கையின் மிக முக்கிய அம்சம் என்னவெனில், தொழிலிலுக்கு உரிமம் பெறுவதிலிருந்து விலக்களித்தல் மற்றும் சிவப்பு நாடா முறையை முடிவுக்கு கொண்டுவருதலாகும். தொழில் உரிமைக் கொள்கையின் கீழ் தனியார் துறை தொழில் துவங்க உரிமம் பெற வேண்டியிருந்தது.

2. **தொழிற்துறையில் உள்ள ஒதுக்கீட்டை நீக்குதல்:**

முன்னதாக மூலதன தொழிற்சாலைகளும். முக்கிய தொழிற்சாலைகளும் பொதுத்துறைக்கென ஒதுக்கப்பட்டது. தற்போது தொழிற் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு பெரும்பாலான தொழில்கள் தனியார் துறைக்கு திறந்துவிடப்பட்டது. புதிய தொழிற் கொள்கையின் கீழ் அணுசக்தி, சுரங்கம் மற்றும் இரயில்வே ஆகிய மூன்று துறைகள் மட்டுமே பொதுத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த மூன்று துறை தவிர ஏனைய துறைகள் தனியார் துறைக்கு திறந்து விடப்பட்டது.

3. **பொதுத்துறை தொடர்பான சீர்திருத்தங்கள்:**

பொதுத்துறை சீர்திருத்தங்கள் என்பது திறமையாக இயங்கும் நிறுவனங்களுக்கு தன்னாட்சி வழங்குவதாகும். பொதுத்துறையில் எந்தெந்த துறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பதை அரசு அடையாளம் காண்கிறது. தனது முதலீட்டுக் குறைப்புக் கொள்கை மூலம் பொதுத்துறையை மாற்றியமைக்கிறது. நட்டத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுவனங்களை தனியாரிடம் ஒப்படைக்க வழிவகுக்கப்பட்டுள்ளது.

4. **முற்றுரிமை வாணிப கட்டுப்பாட்டுச் சட்டத்தை (MRTP)ஒழித்தல்**

1991-ம் ஆண்டைய புதிய தொழிற்கொள்கை முற்றுரிமை வாணிப கட்டுப்பாட்டுச் சட்டத்தை அகற்றியது. 2010-ல் போட்டிக்குழு ஏற்படுத்தப்பட்டது. இது பொருளாதாரப் போட்டி நடைமுறைகளைக் கண்காணிக்கும். இக்கொள்கை தனியார் துறையில் போட்டியை ஏற்படுத்தவும், குறித்த எண்ணிக்கையிலான வெளிநாட்டு நிறுவனங்களை ஈர்க்கவும் செய்தது.

5. **வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கை:**

பொருளதார சீர்திருத்தத்தின் மற்றொரு முக்கிய அம்சம் வெளிநாட்டு முதலீட்டிற்கும் மற்றும் வெளிநாட்டு தொழில் நுட்பத்திற்கும் சிவப்புக் கம்பள வரவேற்பு தருவதாகும். இந்த நடவடிக்கை நாட்டில் தொழில் துறையில் போட்டியை ஏற்படுத்தி வணிகச் சூழலை மேம்படுத்தியுள்ளது. அயல்நாட்டு நேரடி முதலீடு (FDI) மற்றும் அயல்நாட்டு தொகுப்பு முதலீடு (FPI) ஆகியவற்றிற்கு இலக்குவான வழி திறந்துவிடப்பட்டது. 1991-ல் சில உயர் தொழில்நுட்பம் மற்றும் பேரளவு முதலீடு தேவைப்படும் முக்கிய தொழிற்சாலைகளுக்கு அனுமதியளித்தது. இதில் 51-சதவீத பங்குகள் வரை அயல்நாட்டு நேரடி முதலீடு செய்ய அனுமதிக்கப்பட்டது. இதன் அளவு பல நிறுவனங்களுக்கு 74 சதவீதமாகவும், பின்னர் 100-சதவீதமாகவும் மாற்றியமைக்கப்பட்டது. இதனால் பல புதிய நிறுவனங்கள் இந்த பட்டியலில் சேர்ந்துள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் நேரடி வெளிநாட்டு முதலீடு செய்ய பன்னாட்டு நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளவும். வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிக்கவும், வெளிநாட்டு முதலீடு ஊக்குவிப்பு வாரியம் (FIPB) அமைக்கப்பட்டது.

**வேளாண் துறையில் சீர்திருத்தங்களின் தாக்கம்:**

பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளின் தொடக்கத்திலிருந்தே, இந்தியப் பொருளாதாரம், தொழில்துறை மற்றும் சேவைத்துறைகளில் ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைந்துள்ளது. இருந்தாலும், இவ்வளர்ச்சி வேளாண்துறை வளர்ச்சியைத் தடைசெய்தது. (1984 – 85ல் 3.62 சதவீதமாக இருந்த வளர்ச்சி, 1995 – 96 முதல் 2004 - 05 வரை 1.97 சதவீதமாகக் குறைந்தது) வேளாண்துறையில் விளைச்சல் மற்றும் உற்பத்தித் திறனில் ஒரு பெரிய இடைவெளியைப் பதிவு செய்துள்ளது. இதனால் பணப்பயிர்ப் பயிரிடுதலுக்கு விவசாயிகள் இடம்பெயர்ந்தனர். மேலும், கடன் சூழல்களால் பல்வேறு விவசாயக் குடும்பங்கள் வறுமைக்கும், தற்கொலை போன்ற கொடூர முடிவுகளைக் கையிலெடுக்கும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

**பயிர் காப்பீடு:**

18 பிப்ரவரி 2016-ல், பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் (The Pradhan Mantri Fasal Bima) அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி விவசாயிகள் கோலைகாலப் பயிர்களுக்கு 2%, மற்றும் குறுவை சாகுபடி பயிர்களுக்கு 1.5% என்ற ஒரே சீரான சந்தாத் தொகை கட்ட உதவுகிறது. தோட்டப் பயிர்கள் மற்றும் பணப்பயிர்களுக்கு வருடாந்திர சந்தா 5% ஆக இருக்கும்

**குளிர்பதன சேமிப்புக் கிடங்கு:**

பழங்களின் உற்பத்தியில், இந்தியா உலக அளவில், மிகப் பெரிய உற்பத்தியாளராகவும், காய்கறிகள் உற்பத்தியில் இரண்டாவது மிகப்பெரிய உற்பத்தியாளராகவும் விளங்குகிறது. இருந்தபோதிலும், அறுவடைக்குப் பின்னால் ஏற்படும் 25மூ முதல் 30மூ வரையிலான இழப்புகளினால், தனிநபருக்குக் கிடைக்கக்கூடிய பழங்கள் மற்றும் காய்கறிகளின் அளவு மிகக்குறைவாகவே உள்ளது. அது தவிர நுகர்வோரை அடையும் நேரத்தில் பண்டத்தின் தரம் கனிசமான அளவில் குறைகிறது. விரைவில் அழுகும் தன்மையுடைய பழங்கள் மற்றும் காய்கறிகளை சந்தைப்படுத்துவதில் பல பிரச்சனைகள் ஏற்படுகின்றன. இது அதிக வியாபாரச் செலவுகள், சந்தைகளில் தேக்கம், விலையில் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் பல பிரச்சனைகளுக்கும் காரணமாக அமைகிறது. இந்தப் பிரச்சினையைச் சமாளிக்க, இந்திய அரசு மற்றும் வேளாண் அமைச்சகம், 1955 ஆம் ஆண்டு அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தின் மூன்றாவது பிரிவின்படி, ”குளிர்பதன கிடங்கு ஆணை 1964” "Cold Storgage order, 1964", என்பதை ஏற்படுத்தியது. இருந்தபோதிலும் இன்றளவும் குளிர்பதன சேமிப்பு கிடங்கு வசதி போதிய அளவில் இல்லை.

**உழவர் கடன் அட்டைத்திட்டம்:**

உழவர் கடன் அட்டை, கிஷான் கிரெடிட் கார்ட் (KCC) என்பது கடன் தேவைப்படுகிற ஒரு விவசாயியின் தகுதிக்கேற்ப கடன் மிக எளிதாக மற்றும் சரியான நேரத்தில் வழங்குவதற்கான ஒரு ஏற்பாடாகும். இது 1998-ம் ஆண்டில் இந்திய மைய வங்கி மற்றும் ”விவசாய மற்றும் கிராமப்புற மேம்பாட்டுக்கான தேசிய வங்கி” (National Bank for Agricultural and Rurul Development, NABARD) ஆகியவற்றால் தொடங்கப்பட்டது. விவசாயிகள் கடனுக்காக முறைசாரா வங்கிளைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதே அதன் நோக்கமாகும். முறைசாரா வங்கிகளைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதே அதன் நோக்கமாகும். முறைசாரா வங்கிகளில் கடன் பெறுவது எளிது, ஆனால் வட்டி வீதம் அதிகம். இந்த கடன் அட்டையை பிராந்திய, கிராமப்புற, கூட்டுறவு மற்றும் பொதுத்துறை வங்கிகள் வழங்குகிறது. மேலும் அரசு KCC– கடன் அட்டையை மின் தகவல் கடன் அட்டையாக (Smart card cum debit card) அட்டையாக மாற்றி வழங்க அறிவுறுத்தியுள்ளது.

**அறுவடைக்குப் பின் எடுக்கப்படும் நடவடிக்கைகள்:**

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் (Indian Council of Agricultural Research –ICAR), 2012 – 13 ஆம் ஆண்டுக்கான விபரங்களைக் கொண்டு, 2014 – ல் ஆம் ஆண்டுக்கான விபரங்களைக் கொண்டு, 2014-ல் ஆம் ஆண்டு மொத்த விற்பனை விலையில், வேளாண்மையில் அறுவடைக்குப்பின் ஓராண்டுக்கான இழப்பீடு,ரூ. 92,651 கோடியாகவுள்ளதாக கணித்துள்ளது.

விவசாய விளை பொருட்களின் விரயங்களைக் குறைப்பதற்காகவும் மற்றும் அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்புகளைக் குறைப்பதற்கும், உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளின் அமைச்சகம் (MOFPI), மத்திய அரசுத் திட்டங்களின் பல்வேறு கூறுகளை நடைமுறைப்படுத்தியுள்ளது.

பெரிய உணவுப்பூங்கா, ஒருங்கிணைந்த குளிர் இணைப்பு (அறுவடை இடத்திலிருந்து பாதுகாப்பு பெட்டகம் வரும்வரை குளிர்பதன வசதி), மதிப்புக் கூட்டி பாதுகாக்கும் கட்டமைப்பு, நவீன இறைச்சி வதைக் கூடங்கள்.

**தர உத்திரவாதத் திட்டம்:**
தரக் குறியீடு (அறிவியல் பூர்வமான தரக் குறியீடு) ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் பிற முன்னேற்ற நடவடிக்கைகள், மேலும் தோட்டக்கலை மற்றும் தோட்டக்கலை அல்லாத பொருட்களின் அறுவடைக்குப் பின் நேரிடும் இழப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க,விளைநிலங்களிலிருந்து நுகர்வோர் வரை அல்லது உற்பத்திப் பகுதியிலிருந்து அங்காடி வரையிலான ஒருங்கிணைந்த குளிர்பதன மற்றும் பதப்படுத்தும் கட்டடைப்பு வசதிகளை இந்திய அரசு செய்துள்ளது. 2008 – 09 ஆம் ஆண்டு முதல் நடவடிக்கை எடுத்து வருகிறது. எனினும் முன்னேற்றம் என்பது கண்கூட தெரியவில்லை.

### விவசாயபொருட்களுக்கான அங்காடி குழு Agricultural Produce market Committee (APMC)

விவசாய பொருட்களுக்கான அங்காடிக் குழு, வேளாண்மை அல்லது தோட்டக்கலை அல்லது கால்நடைப் பொருட்களை வர்த்தகம் செய்வதற்கு மாநில அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வமான அமைப்பு ஆகும்.

## APMC ன் செயல்பாடுகள்

## APMC ன் பணிகள் பின்வருமாறு:

1. வேளாண் சந்தைகளில் பொது மற்றும் தனியர்களிடையே கூட்டுறவை வளர்ச்சி பெறச் செய்தல்.

2. சந்தை சார்ந்த விரிவாக்க சேவைகளை விவசாயிகளுக்கு வழங்குதல்.

3. விலை நிர்ணயம் மற்றும் அங்காடிப் பறிமாற்றங்களில் வெளிப்படைத் தன்மையை கொண்டு வருதல்.

4. விவசாய உற்பத்திகளை விற்பனை செய்த அதேநாளில் விவசாயிகளுக்குப் பணம் செலுத்துவதை உறுதி செய்தல்.

5. வேளாண் நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.

6. வேளாண் பொருட்களின் வரவு மற்றும் விலை தொடர்பான புள்ளி விவரங்களை அவ்வப்போது காட்சிப்படுத்துதல்.

**சீர்திருத்தங்களுக்குப் பிந்தைய விவசாய நெருக்கடிகள்:**

1. **இடுபொருட்களின் செலவு உயர்வு:**

   விதைகளே விவசாயிகளுக்கான மிகப்பெரிய உள்ளீடு ஆகும். தாராளமயமாக்கப்படுவதற்கு முன் நாடு முழுவதும் விவசாயிகள் மாநில அரசாங்க நிறுவனங்களிலிருந்து விதைகளைப் பெற்று வந்தனர். இந்நிறுவனங்கள் விதைகளை தாங்களே உற்பத்தி செய்து தரம் மற்றும் விலை நிர்ணயித்துக்கு முழுப் பொறுப்பாக இருந்தன. தாராளமயமாக்கல் மூலம் இந்தியாவின் விதைகள் சந்தை உலகளாவிய வேளாண் தொழிலுக்கு திறந்து வைக்கப்பட்டது. மேலும் கட்டுப்பாடுகள் தளர்ந்தப்பட்டதால் 2003 ஆம் ஆண்டு பல மாநில அரசு நிறுவனங்கள் மூடப்பட்டன. இது விவசாயிகளை இரட்டிப்பாகப் பாதித்தது. விலைகள் உயர்வு மற்றும் போலி விதைகள் உருவாக்கம் போன்ற பிரச்சனைகளை மேலும் பூதாகரமாக்கியது.

2. **வேளாண்மை மானியக் குறைப்பு:**
   ஏற்றுமதி நோக்கத்துடன் மிளகாய், பருத்தி மற்றும் புகையிலை போன்ற பணப்பயிர்களை பாரம்பரியப் பயிர்களோடு ஊடு பயிர் வளர்ப்பதற்கு விவசாயிகளை ஊக்குவித்தனர். தாராளமயமாக்கல் கொள்கைகள், பூச்சிக்கொல்லி மற்றும் உர மானியத்தைக் குறைத்து விட்டதால் உரங்களின் விலைகள் 300% அதிகரித்தன மற்றும் மின் கட்டணங்களும் அதிகரித்துள்ளன. ஆனால் விவசாயப் பொருட்களின் விலை அந்தளவுக்கு உயரவில்லை.

3. **இறக்குமதிச் சுங்கவரி குறைப்பு:**
   உலகமயமாக்குதலின் விளைவாக இறக்குமதி மேல் விதிக்கப்பட்ட வரிகள் குறைக்கப்பட்டன. அத்துடன் 2001-ல் 1500 க்கும் மேற்பட்ட பொருட்கள்

மீதான இறக்குமதிக் கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டன. இதன் விளைவாக இறக்குமதி மலிந்து. பொருட்கள் சந்தையில் குவிந்தன. இதனால் பருத்தி மற்றும் மிளகு போன்ற பயிர்களின் விலை சரிந்தன.

4. **கடன் வசதிகளை நிறுத்தி வைத்தல்:**
   1991-க்குப் பின்னர் தேசியமயமாக்கப்பட்ட வங்கி உட்பட வணிக வங்கிகளின் கடனளிப்பு முறையில் ஏற்பட்ட பெரும் மாற்றத்தால் விவசாயத்திற்குப் போதுமான கடனுதவி அளிக்க இயலவில்லை. இது விவசாயிகளை அதிக வட்டி வசூலிக்கக்கூடிய வட்டிக்கடைக்காரரைச் சார்ந்திருக்கக் கட்டாயப்படுத்தியது.

**வர்த்தகக் கொள்கைச் சீர்திருத்தங்கள்:**
1991 முதல் செயல்பட்டு வரும் புதிய வர்த்தகக் கொள்கையின் முக்கிய அம்சங்களாவன.

**சுதந்திரமான இறக்குமதி மற்றும் ஏற்றுமதி:**

1991-க்கு முன், இந்திய இறக்குமதியானது ஒழுங்குபடுத்தப்பட்டு காணப்பட்டது. 1992-லிருந்து இறக்குமதியானது வரையறுக்கப்பட்ட எதிர்மறைப் படியல் மூலம் ஒழுங்குபடுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஏப்ரல் 1, 1992 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட வர்த்தகக் கொள்கையின்படி ஏறத்தாழ அனைத்து இடைவினை மற்றும் மூலதனப் பண்டங்களுக்கான இறக்குமதி சுதந்திரமாக்கப்பட்டது. 71 பொருட்கள் மட்டுமே தடைசெய்யப்பட்ட பட்டியலில் உள்ளன.

**சுங்க கட்டண அமைப்பு மற்றும் அளவுக் கட்டுப்பாடுகளை நீக்குதல்:**

செல்லையா குழு அறிக்கையானது, இறக்குமதிக்கான தீர்வைகளை பெருமளவு குறைக்கப் பரிந்துரை செய்துள்ளது. உச்ச அளவாக 50 சதவிகிதம் குறைக்க பரிந்துரைத்துள்ளது. இந்தத்தீர்வைகளைப் படிப்படியாகக் குறைப்பதன் முதல் முயற்சியாக 1991 – 92 ஆம் ஆண்டுக்கான நிதி அறிக்கையில் இறக்குமதி வரி 300 சதவீதத்திலிருந்து 150 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. அடுத்தடுத்த நிதி அறிக்கைகளில், சுங்க வரியைப் படிப்படியாகக் குறைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

**ஏற்றுமதி - இறக்குமதிக் கொள்கை:**

இந்திய அரசின் வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகம், 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 அன்று 2015 – 2020 வரையிலான காலத்திற்கான புதிய அயல்நாட்டு வாணிபக் கொள்கையை அறிவித்தது.

**ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கை (2015 – 2020):**
ஏற்றுமதி சூழல்களை மேம்படுத்துதல், உற்பத்தி அதிகரிப்பு மற்றும் ”இந்தியாவில் தயாரிப்பு” (Make in India) மற்றும் “மின்னனு இந்தியா” (Digital India) போன்ற திட்டங்களுக்கு ஆதரவளித்தலே இக்கொள்கையின் முதன்மையான நோக்கமாகும்.

**சிறப்பம்சங்கள்:**

- ❖ ஏற்றுமதி உதவிகளை 25 சதவீத அளவு குறைக்கவும், இந்தியப் பொருட்களை ஊக்குவிக்கவும் " இந்திய தயாரிப்பு" என்ற கருத்த உருவாக்கப்பட்டது.

- ❖ டிஜிட்டல் இந்தியா முறைப்படி, வரித்தாக்கல், முத்திரைத்தாள் கட்டணம் செலுத்துதல் போன்றவற்றிற்கான கைபேசி செயலி மற்றும் பட்டயக் கணக்காளர், கணக்குக்காசாளர் போன்றோரால் (CA/CS/Cost Accountatant) மின்னணு முறையில் கையொப்பமிடப்பட்ட ஆவணங்கள் தயாரிக்கப்படுகின்றது.

- ❖ போன்றோரால் மின்னணு முறையில் கையொப்பமிடப்பட்ட ஆவணங்கள் தயாரிக்கப்படுகின்றது.

- ❖ ஏற்றுமதியாளர் / இறக்குமதியாளர் சுயவிவர ஆவணங்களின் அசல் நகல்களை மீண்டும் மீண்டும் சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை.

- ❖ பாதுகாப்பு, இராணுவக்கிடங்கு, விண்வெளி மற்றும் அணுசக்தி போன்றவை தொடர்பான ஏற்றுமதிக் கோரிக்கைகளுக்கு கால அளவு 24 மாதங்களாகும்.

- ❖ தற்போது உலக வர்த்தகத்தில் 3% மாக இருக்கிற இந்தியாவின் பங்கை 2020 – க்குள், ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கை (2015 – 2020) இரு மடங்கு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (Special Economic Zones):**

அனுமதி வழங்குவதில் பெருகியிருந்த கட்டுப்பாடுகள், உள்கட்டமைப்பு வசதியின்மை, குறைவான நிதி போன்ற குறைபாடுகளைச் சமாளிக்கவும், நேரடி முதலீட்டை ஈர்க்கவும் 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சிறப்பு பொருளாதார மண்டலக் கொள்கை உருவாக்கப்பட்டது.

பொருளாதாரச் சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக வணிக மற்றும் தொழில் காரணங்களுக்காக அரசாங்க நிலங்களை கையப்படுத்தும் நடவடிக்கை தொடங்கப்பட்டது. 2005-ம் ஆண்டின் சிறப்புப் பொருளாதார மண்டலக் கொள்கையின்படி 400 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அறிவிக்கப்பட்டன. இக்கொள்கையினால் பெரும்பாலான விவசாயிகள் தங்கள் விளைநிலங்களையும் வாழ்வாதாரங்களையும் இழக்க வேண்டிய சூழ்நிலை வந்தது. உலகமயமாதலோடு உலகமயமாதலோடு கூடிய ஏற்றுமதி முன்னேற்றம் மற்றும் ஏற்றுமதி வளர்ச்சியை அடைவதற்காக பல நாடுகளில் ளுநுணு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## சிறப்பு பொருளாதார மண்டலம்:

EPZ– அதிக அளவு வெளிநாட்டுமூலதனத்தை ஈர்த்ததன் விளைவாக, 2000ல் இந்திய அரசு புதிய கொள்கையின் மூலம் சிறப்பு பொருளாதார மண்டலம் என்பதை ஏற்படுத்தியது.

காண்ட்லாவில் ஏற்படுத்தப்பட்ட ஏற்றுமதி செயலாக்க மண்டல வெற்றியை அடுத்து 1980 ன் துவக்க காலத்தில் மேலும் ஏழு EPZ– கள் பம்பாய், நொய்டா, சூரத், சென்னை, ∴பால்டா, விசாகப்பட்டினம் போன்ற இடங்களில் துவங்கப்பட்டது.

ஆசியாவின் முதல் ஏற்றுமதி செயலாக்க மண்டலத்தை 1965 ல் இந்திய அரசு காண்ட்லா என்னும் இடத்தில் துவங்கியது.

ஏற்றுமதி செயலாக்க மண்டல மாதிரிகளின் (Export Processing Zone – EPZ) பயன்பாட்டை உணர்ந்த நாடுகளில் முதன்மையானது இந்தியாவாகும். 1965 ஆம் ஆண்டில் கண்ட்லாவில் முதல் ஏற்றுமதி செயலாக்க மண்டலம் அமைக்கப்பட்டது. சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் பல மண்டலங்களை உள்ளடக்கியுள்ளன. எடுத்துக்காட்டாக, சுதந்திர வர்த்தக மண்டலங்கள், ஏற்றுமதி செயலாக்க மண்டலங்கள், தொழில் பூங்காங்கள், பொருளாதார மற்றும் தொழில் நுட்ப முன்னேற்ற மண்டலங்கள், உயிர் தொழில் நுட்ப மண்டலங்கள், அறிவியல் மற்றும் புதுமைப் பூங்காக்கள், இலவசத் துறைமுகங்கள், நிறுவன மண்டலங்கள் போல இன்னும் பல.

## SEZ - ன் - முக்கிய நோக்கங்கள்:

1. அந்நிய முதலீட்டை அதிகரிக்க, முக்கியமாக அந்நிய நேரடி முதலீட்டை ஈர்த்து, நம் நாட்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) யை அதிகரித்தல்.

2. பன்னாட்டு வியாபாரத்தில் / உலக ஏற்றுமதியில் நமது பங்கினை அதிகரித்தல்
3. கூடுதல் பொருளாதார நடவடிக்கைகளை உருவாக்குதல்
4. வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்
5. கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்
6. உலக அங்காடித் தொழில் நுட்பங்களைப் பகிர்ந்து கொள்ளுதல்

## SEZ ன் முக்கிய இயல்புகள்:

1. பாதுகாப்புடன் கூடிய நிலப்பகுதிகள்

2. தனி அமைப்பால் நிர்வகிக்கப்படுவது
3. நெறிமுறைப்படுத்தப்பட்ட நடைமுறைகள்
4. தனிப்பட்ட விருப்பப் பகுதியைக் கொண்டது
5. தாராளமய பொருளாதார சடடத்தால் நிர்வகிக்கப்படுகிறது.
6. இதில் அமையப்பெற்ற நிறுவனங்களுக்கு அதிக அளவு சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே அரசின் சட்டதிட்டங்களையும் கட்டுப்பாடுகளையும் கடைப்பிடிக்க வேண்டிய அவசியமில்லை

இதனால் சமூக மற்றும் சுற்றுப்புறச் சூழல்கள் பாதிக்கப்படுகின்றன.

**நிதி சீர்திருத்தங்கள்:**

நிதி ஒழுங்கு மிக முக்கியம் என்பதில் ஐயமில்லை. இந்த நிதிப் பற்றாக்குறை (FISCAL DEFICIT) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மூன்று சதவீதத்திற்கு மேல் இருக்கக்கூடாது என்ற ஒரு வழிகாட்டுதலை பன்னாட்டு பண நிதியம் கொண்டு வந்தது. இந்த வழியில் அரசானது வரவு செலவுத் திட்டத்தில் செலவுகளை இலக்காகக் கொண்டு வருவாயைப் பெருக்கும். நேரடி வரி அளவை மாற்றியமைப்பதால் ஆடம்பர நுகர்வு குறையும். எனவே பொதுநிதியைக் கூட்டுவதிலும் பொதுச் செலவைக் குறைப்பதிலும் அரசாங்கம் மிகக் குறியாக இருந்தது. செலவைக் குறைக்கும் முகத்தான் உர மானியம் மற்றும் சர்க்கரை மானியங்கள் குறைக்கப்பட்டன. வருவாயை அதிகப்படுத்த பொதுத்துறைச் சொத்துகள் விற்கப்பட்டன. அரசு நலத்திட்டங்களுக்கான நிதியை படிப்படியாக குறைத்தது. தொழில்துறை நிறுவனங்கள் மீதான வரியைக் குறைத்தது. இதனால் ஏழை மக்களின் மீதான வரி அதிகரித்தது.

**பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (GOODS AND SERVICSE TAX : GST):**

பண்டங்கள் மற்றும் பணிகள் வரி என்பது நுகர்வோர் நுகரும் பண்டங்கள் மற்றும் பணிகள் மீது விதிக்கப்படும் வரியாகும். விரிவான மறைமுக வரியாக, உற்பத்தி, விற்பனை மற்றும் நுகர்வு மீது விதிக்க இது முன்மொழியப்பட்டது. இது மத்திய மற்றும் மாநில அரசுகள் விதிக்கும் அனைத்து மறைமுக வரிக்கு மாற்றாக கொண்டுவரப்பட்டது. இது உற்பத்தி மற்றும் பண்டங்கள் பணிகள் மீதான அடுக்குவரி பாதக விளைவை நீக்கும். இந்த வரி ஒரு முனை வரியாகும். மதிப்புக் கூட்டப்பட்ட வரி (VAT)– என்பது பலமுனை வரியாகும்.

பண்டங்கள் மற்றும் சேவைகள் மீதான வரி 29.03.2017- அன்று பாராளுமன்றத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டு, 2017 ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் முதல் நாளன்று நடைமுறைக்கு வந்தது.

**தற்போதைய வரி விகிதங்கள்:**

**GST– யின் நன்மைகள்**

- அடுக்குவரி விளைவுகளை நீக்கியது.
- ஒரு முனை வரியாக உள்ளது
- பதிக்கான வாசலாக உள்ளது
- சிறிய நிறுவனங்களுக்கான கலவை திட்டங்கள் உள்ளது

❖ எளிமைப்படுத்தப்பட்டுள்ளது.

❖ மின்னணு வணிகம் வரையறுக்கப்பட்டுள்ளது.
❖ தளவாடங்களின் திறன் அதிகப்படுத்தப்பட்டுள்ளது.

❖ அமைப்பு ரீதியற்ற துறையை ஒழுங்குபடுத்துகிறது.

**பணம் மற்றும் நிதித்துறைச் சீர்திருத்தங்கள்:**

இச்சீர்திருத்தங்கள் வங்கியமைப்பை மிகுந்த திறனுடையதாய் மாற்ற முயற்சித்தன. வட்டி வீதங்களில் காணப்பட்ட வேறுபாடுகளைக் களைய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

**பணவியல் மற்றும் நிதித்துறை சீர்திருத்தங்கள்:**

இச்சீர்திருத்தங்கள் வங்கியமைப்பை மிகுந்த திறனுடையதாய் மாற்ற முயற்சித்தன. வட்டி வீதங்களில் காணப்பட்ட வேறுபாடுகளைக் களைய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

**அவற்றுள் சில**

1. **ரொக்க இருப்பு வீதம்**:

   1991 ஆம் ஆண்டு நரசிம்மம் குழு பரிந்துரைப்படி, சட்ட ரீதியான நீர்மை விகிதம் (Statutory Liquidity Ratio SLR) மற்றும் ரொக்க இருப்பு வீதம் (Cash Reserve Ratio) குறைக்கப்பட்டது. 1991 ஆம் ஆண்டின் மத்தியில் ஞடுசு மற்றும் CRR விகிதங்கள் மிக அதிகமாக இருந்தன. மூன்றாண்டு கால அளவில் ஞடுசு விகிதத்தை 38.5% லிருந்து 2.5% ஆகக் குறைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதே போன்று,CRR விகிதத்தையும் நான்கு ஆண்டுகளில் 3.5% ஆகக் குறைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

2. **வட்டி விகிதத் தளர்வு:**
   முன்னர், 1. வைப்புகளுக்கான வட்டி வீதம் மற்றும்
   2. வங்கிக் கடன்களுக்கான வட்டி
   போன்றவற்றை இந்திய ரிசர்வ் வங்கி (RBI) கட்டுப்படுத்தி வந்தது. தற்போது தளர்த்தப்பட்டுள்ளது.

3. பொதுத்துறை, தனியார்துறை மற்றும் அயல்நாட்டு வங்கிகளுக்கிடையேயான அதிகப்படியான போட்டியை சமாளிக்க நிர்வாகத்தில் இருந்த தடைகள் நீக்கப்பட்டன.

4. செயல்பாட்டிலிருக்கும் வங்கிகளின் வலையமைப்பைப் பரவலாக்க வங்கிக் கிளைகளுக்கான உரிமம் வழங்குதல் தளர்த்தப்பட்டது.

5. பொதுத்துறை, தனியார்துறை மற்றும் அயல்நாட்டு வங்கிகளுக்கிடையேயான அதிகப்படியான போட்டியை சமாளிக்க நிர்வாகத்தில் இருந்த தடைகள் நீக்கப்பட்டன.

6. செயல்பாட்டிலிருக்கும் வங்கிகளின் வலையமைப்பைப் பரவலாக்க வங்கிக் கிளைகளுக்கான உரிமம் வழங்குதல் தளர்த்தப்பட்டது.

7. புதிய கிளைகளைக் கண்டறிய மற்றும் சிறப்புக் கிளைகளைத் திறக்க வங்கிகளுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது.

8. புதிய தனியார் துறை வங்கிகள் தொடங்குவதற்காக வழிமுறைகள் வழங்கப்பட்டன.

9. நரசிம்மம் குழு அறிக்கையின்படி வராக்கடன் மற்றும் சொத்து மதிப்பினைக் கணக்கிட புதிய விதிமுறைகள் வகுக்கப்பட்டன.

# அத்தியாயம் - 10

## ஊரக பொருளாதாரம்

**முன்னுரை:**

ஊரக பொருளாதாரம் பொருளாதார கொள்கைகளை பயன்படுத்தி, ஊரக பகுதிகளை வளர்ச்சியடையச் செய்வதைக் குறிக்கிறது. ஊரக பகுதி என்பது நகரங்கள் மற்றும் மாநகரங்களுக்கு வெளியே அமைந்துள்ள பகுதி ஆகும். இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஊரக பகுதிகளுக்கு அடிப்படை அலகாக அமைவது வருவாய் கிராமம் ஆகும். ஊரக பொருளாதாரம் என்பது கிராமங்களையும், ஊரக சமுதாயம் என்பது கிராமங்களில் வாழும் மக்களையும் குறிக்கும். ஊரக பகுதிகளில் பல பிரச்சனைகள் உள்ளன. அவை வேளாண்மையில் பின் தங்கிய நிலை, குறைந்த வருமானம், குறைவான வேலைவாய்ப்புகள், வறுமை, குறைந்த உள்கட்டமைப்பு வசதிகள், குறைவான எழுத்தறிவு, குறைவான தொழிலாளர் உற்பத்தித்திறன், வேளாண் பொருட்களுக்கு குறைந்த விலை, கடன்கள் ஆகியவை சிலவாகும். உபரி தொழிலாளர்கள், அதிக மக்கள் தொகை, அதிக அளவு இடப்பெயர்ச்சி, இயற்கை மற்றும் இயற்கை வளங்களை அதிகமாக சார்ந்திருத்தல் ஆகியனவாகும். 2011-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி,இந்தியாவில் 6,40,867 கிராமங்கள் உள்ளன. 121 கோடியாக உள்ள மொத்த மக்கள் தொகையில் 68.84 சதவீத மக்கள் ஊரகங்களில் வசிக்கின்றனர்.

**ஊரக பொருளாதாரத்தின் இயல்புகள்:**
**ஊரக பொருளாதாரத்தின் முக்கிய பண்புகளாவன:**

1. **ஊரகம் ஒரு நிறுவனம்:**

   கிராமம் என்பது முதன்மை நிறுவனமாக செயல்பட்டு, ஊரக சமுதாயத்தின் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்கிறது. ஊரக மக்கள் அங்கு வசிக்கும் பிறருடன் தம் மக்கள் என்று ஒருவருக்கொருவர் உணர்வு பூர்வமாகவும், ஒற்றுமையுடனும் இருப்பர்.

2. **வேளாண்மையை சார்ந்திருத்தல்:**
   ஊரக பொருளாதாரம் இயற்கையையும், வேளாண் நடவடிக்கைகளையும் சார்ந்துள்ளது. வேளாண்மை மற்றும் அதனை சார்ந்த செயல்களே ஊரக மக்களின் முக்கிய தொழிலாகும்.

3. **ஊரக மக்களின் வாழ்க்கை முறை:**

   ஊரக மக்களின் வாழ்க்கை முறை மிக எளிமையானது. பொது பணிகளான கல்வி, வீட்டு வசதி, உடல் நலம் மற்றும் சுகாதாரம், போக்குவரத்து, தகவல் தொடர்பு, வங்கி செயல்பாடு, சாலைகள் மற்றும் அங்காடி வசதிகள் குறைவாகவோ அல்லது இல்லாமலோ இருக்கிறது. ஊரக மக்கள் மூடநம்பிக்கைகள் மற்றும் பாரம்பரிய கலாச்சார நடைமுறைகளை சார்ந்துள்ளனர். ஊரக பகுதிகளில் வாழும் பெரும்பான்மையான மக்களின் வாழ்க்கைத்தரம் ஏழ்மை நிலையிலும்,

பரிதாபகரமாகவும், உள்ளது. ஊரக மக்கள் உற்பத்தி முறைகளிலும், சமூக அமைப்பிலும். அரசியல் சூழலிலும் நலிவடைந்த மற்றும் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளனர். சமீப ஆண்டுகளில் மது அருந்துபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

4. **மக்கள் தொகை அடர்த்தி:**

ஒரு சதுர கி.மீ நிலப்பரப்பில் வாழும் மக்களின் எண்ணிக்கை மக்கள் தொகை அடர்த்தி மிகவும் குறைவாகவும், வீடுகள் கிராமம் முழுக்க பரவிக் காணப்படுகின்றன.

5. **வேலைவாய்ப்பு:**

வேலையின்மை, பருவகால வேலையின்மை மற்றும் குறை வேலையுடைமை ஆகியன கிராமப்புறங்களில் நிலவுகின்றன. வேலையின்மை என்பது தொழிலாளர்கள் வேலை செய்ய தகுதியும் விருப்பமும் இருந்தும் வேலை கிடைக்காமல் இருப்பது ஆகும். குறை வேலையுடைமை என்பது மறைமுக வேலையின்மையைக் குறிக்கும். தேவைக்கு அதிகமாக மிகுதியான தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவது மறைமுக வேலையின்மை. மறைமுக வேலையின்மை என்பது தொழிலாளர்கள் வேலையில் ஈடுபட்டாலும் உற்பத்தியளவு அதிகரிக்காத நிலையை குறிக்கும். இவ்விரண்டு சூழ்நிலைகளும் பொதுவாக கிராமப்புறங்களில் நிலவுகிறது.

6. **வறுமை:**

வறுமை என்பது அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் போன்றவற்றை பூர்த்தி செய்ய முடியாத நிலையாகும். 2011 – 12 ன் மதிப்பீட்டின்படி ஊரகப் பகுதிகளில் சுமார் 22 கோடி மக்கள் ஏழையாகவும், வறுமைக் கோட்டிற்கு கீழும் வசிக்கின்றனர்.

7. **கடன் சுமைகள்:**

ஊரக மக்களின் அதிக கடன் சுமைக்கான காரணங்கள் வறுமையும்,குறைவேலையுடைமையும், விவசாய நிலம் சார்ந்த மற்றும் நிலம் சாரா வேலைவாய்ப்புகளில் தேக்க நிலை, குறை ஊதிய வேலை, பருவகால உற்பத்தி, குறைந்த அங்காடி வசதிகள் போன்றவைகளாகும். புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளர் சர் மால்கம் டார்லிங் (1925) கூற்றுப்படி, ”ஓர் இந்திய உழவன் கடனிலே பிறந்து கடனிலே வாழ்ந்து, கடனிலேயே இறந்து அவன் சந்ததிக்கும் கடனையே விட்டுச் செல்கின்றான்”. முறையான கடன் வசதிகள் கிராமப் பகுதிகளில் கிடைக்காததால் அவர்கள் வட்டிக்கு பணம் தரும் உள்ளுர்வாசிகளை சார்ந்துள்ளனர். வட்டிக்குப் பணம் தருபவர்கள் கடன் பெற்ற கிராமங்களை அட்டையாக உறிஞ்சிவிடுகின்றனர். எனவே, கிராம மக்களை கடனில் மூழ்கி தற்கொலைக்கு ஆளாகின்றனர்.

8. **ஊரக வருமானம்:**

ஊரக பொருளாதாரம் ஊரக மக்களுக்கு போதுமான வருமானத்தை ஈட்டித்தரும் வேலைவாய்ப்புகளையோ, சுய வேலைவாய்ப்பு வாய்ப்புகளையோ தர இயலவில்லை. பெரும்பாலான தொழிலாளர்களும்

மற்றும் திறமை வாய்ந்தவர்களும் மிகவும் குறை வேலையுடையவர்களாக இருக்கிறார்கள் இவர்கள் வருமானத்தை பெருக்குவதற்கான வாய்ப்பு குறைவு.

9. **சார்ந்திருத்தல்:**

ஊரகப்பகுதிகளில் வசிப்பவர்கள் நகரத்தில் வேலை செய்யும் தமது குடும்ப நபர்களின் வருவாய் மற்றும் சமூக நிதி உதவிகளையும் பெருமளவு சார்ந்துள்ளனர்.

10. **இரட்டைத் தன்மை:**

எதிரிடையான இரண்டு அம்சங்கள் நிலவுவதே இரட்டைத் தன்மை ஆகும். வளர்ந்த மற்றும் பின் தங்கிய நிலை அமைப்பு சார்ந்த மற்றும் அமைப்பு சாராத நிலை, பாரம்பரிய மற்றும் நவீன நிலை, ஒழுங்கு படுத்தப்பட்ட மற்றும் ஒழுங்கு படுத்தப்படா நிலை, ஏழை மற்றும் பணக்காரர், திறமைமிக்கவர் மற்றும் திறமையற்றவர் போன்ற முரண்பாடான சூழல்கள் ஊரக பகுதிகளில் நிலவுகின்றன.

11. **ஏற்றத்தாழ்வு:**

ஊரக பகுதிகளில் வருமானம், சொத்து மற்றும் செல்வம் ஆகியவற்றின் பகிர்வு ஊரக மக்களிடையே ஏற்றத்தாழ்வுடன் காணப்படுகிறது. சமூக, பொருளாதார அரசியல் மற்றும் வரலாற்றுக் காரணங்களினால் ஏற்றத்தாழ்வு நிலவுகிறது. நிலக்கிழார்களும் நில உரிமையாளர்களும் கிராமப்புற நடவடிக்கைகளில் ஆதிக்கம் செலுத்துகின்றனர். நிலம், கால்நடை மற்றும் பிற சொத்துக்கள் சிலரிடம் மட்டுமே உள்ளது.

12. **குடிப்பெயர்ச்சி:**

ஊரக மக்கள் தமது வாழ்வாதாரத்திற்காக வேலை தேடி கிராமங்களிலிருந்து நகர்புறத்திற்கு இடம் பெயரும் சூழ்நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இந்த நிலை நகரங்கள் பெருகுவதற்குக் காரணமாகின்றன. பகைமை மற்றும் அடிப்படை சுகாதார வசதிகள் இல்லாமை, கிராம மக்களை நகர்புறத்திற்கு இடம் பெயர வைக்கிறது. ஒருபுறம் கிராமங்கள் காலியாகவும் மறுபுறம் நகரங்கள் நெரிசலாகவும் உள்ளன. இதையே "இரட்டை நஞ்சாக்கல்" என சுமாசர் (Schumacher) குறிப்பிடுகிறார். தற்போதைய வளர்ச்சி வகை முறை அபாயகரமானது என்று அவரின் "சிறியது அழகு" என்ற நூலில் விளக்குகிறார்.

**ஊரக மேம்பாடு : பொருள்:**

ஊரக மேம்பாடு என்பது ஊரக மக்களின் சமூக நலம் மற்றும் வாழும் சூழ்நிலையை மேம்படுத்துதல், போன்ற ஒட்டு மொத்த முன்னேற்றத்தைக் குறிப்பதாகும். உலக வங்கியின் கூற்றுப்படி, "ஊரக மேம்பாடு என்பது குறிப்பிட்ட ஊரக மக்களின் பொருளாதார மற்றும் சமூக வாழ்க்கை முறையை மேம்படுத்த வடிவமைக்கப்பட்ட உத்தி" ஆகும். சுருக்கமாக ஊரக வளர்ச்சி என்பது ஊரக பகுதிகள், ஊரக மக்கள், ஊரக வாழ்க்கை ஆகியவற்றை மேம்படுத்தும் முறையாகும்.

**ஊரக மேம்பாட்டிற்கான தேவை:**

இந்திய பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த மற்றும் முன்னேற்றத்திற்கு ஊரக மேம்பாடு என்பது மிக இன்றியமையாத ஒன்றாகும். அதற்கான காரணங்கள் பின்வருமாறு.

1. பெரும்பான்மையான மக்கள் கிராமபுறங்களில் வசிக்கின்றனர். அவர்களின் முன்னேற்றம் மற்றும் பங்களிப்பு நாட்டின் கட்டமைப்பு நடவடிக்கைகளில் துணை நிற்கின்றன. ஊரக பகுதியின் முன்னேற்றம் இன்றி நாட்டின் முன்னேற்றம் அமையாது.

2. நகர்புறத்திற்கு தேவையான குடிநீர், பால், உணவு மற்றும் கச்சா பொருட்கள் கிராமப்புறத்தில் இருந்து அளிக்கப்படுகின்றன. ஆகவே கிராமபுறங்களின் பின்தங்கிய நிலைமை நாட்டின் ஒட்டு மொத்த முன்னேற்றத்தை அடைவதற்கும் தடையாக அமைகிறது.

3. ஊரக மக்களுக்கு முறையான கல்வி, மருத்துவம் மற்றும் சுகாதார வசதிகளை அளிப்பதன் மூலம் நகர்புறங்களில் காணப்படும் பிச்சையெடுத்தல், குப்பை பொறுக்குதல், சாலையோர குடிசைவாசிகள் போன்ற மக்களின் பல்வேறு பிரச்சனைகளை தீர்க்கலாம்.

4. வேளாண்மை மற்றும் அதன் சார்புடைய தொழில்களை முன்னேற்றுவதன் மூலம், ஊரக பகுதிகளில் இலாபகரமான வேலைவாய்ப்புகளையும், ஒட்டுமொத்த உணவு உற்பத்தியையும் பெருக்க இயலும்.

5. கிராமங்களை முன்னேற்றுவதன் மூலம், வேலைவாய்ப்பை தேடி திறமைசாலிகள் இடம்பெயர்தல் மற்றும் கிராமங்களில் இருந்து நகர்புற பகுதிகளுக்கு குடிப்பெயர்ச்சி ஆகியவற்றை தடுக்கலாம்.

6. ஊரக பகுதிகளை முன்னேற்றுவதன் மூலம் பயன்படுத்தாத மற்றும் குறைவாக பயன்படுத்தி வரும் இயற்கை வளங்களை முழுமையாக பயன்படுத்த இயலும்.

7. கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு இடையேயுள்ள வேறுபாட்டினை குறைக்க முடியும். கிராமப்புறங்களில் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை கிராமப்புறங்களில் ஏற்படுத்த வேண்டும். இதற்காக முன்னாள் குடியரசு தலைவர் அப்துல் கலாம் - அவர்கள் ீருசுயு என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

8. மனித மேம்பாட்டுக் குறியீடு (HDI), மகளிர் வல்லமைக் குறியீடு (WEI), பாலின வேறுபாட்டுக் குறியீடு (GDI), இயல் தர வாழ்க்கைக் குறியீடு (PQLI), மொத்த தேசிய மகிழ்ச்சிக் குறியீடு (GNHI) போன்ற பொருளாதாரக் குறியீடுகளை மேம்படுத்துவதன் மூலம் உலக அரங்கில் இந்தியாவின் நிலையை மேம்படுத்த இயலும்.

**ஊரக பொருளாதாரத்தில் உள்ள பிரச்சனைகள்:**

ஊரக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் பின்வருமாறு:

1. மக்கள் சார்ந்தவை
2. வேளாண்மை சார்ந்தவை
3. உள்கட்டமைப்பு வசதிகள் சார்ந்தவை
4. பொருளாதாரம் சார்ந்தவை
5. சமூக மற்றும் கலாச்சாரம் சார்ந்தவை
6. தலைமை சார்ந்தவை
7. நிர்வாகம் சார்ந்தவை

1. **மக்கள் தொடர்புடைய பிரச்சினை:**

எழுத்தறிவின்மை, போதிய தொழில்நுட்ப அறிவின்மை, நம்பிக்கை குறைவு, பற்றுகள் மற்றும் நம்பிக்கைகள் இவற்றை சார்ந்து வாழ்க்கைத்தரம் அமைதல் ஆகியன ஊரக மக்களின் பிரச்சினைகள்.

2. **வேளாண்மை சார்ந்த பிரச்சனைகள்:**

வேளாண்மை சார்ந்த பிரச்சனைகள் கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கியது.

1. எதிர்பார்த்த அளவில் விழிப்புணர்வு, வேளாண் அறிவு, திறன் மற்றும் மனப்போக்கு போன்றவை இன்மை
2. உள்ளீடுகள் கிடைக்கப்பெறாமை
3. அங்காடிப்படுத்தும் வசதிகள் குறைவு
4. பற்றாக்குறையான பணியாளர்கள் மற்றும் சேவைகள்
5. பன்முக திறன் கொண்ட பணியாளர்கள் இன்மை
6. நிலங்கள் துண்டாடப்பட்டு சிறிது சிறிதாக இருத்தல்
7. சிறு நிலங்கள் மற்றும் சிறு சிறு துண்டுகளாக்கப்பட்ட நிலவுடைமைகள்
8. ஊரக பகுதிகளில் தங்கி பணியாற்றுவதற்கு போதுமான உள்ளகட்டமைப்பு வசதிகள் இன்மை
9. பழமையான தொழில்நுட்ப முறைகள் மற்றும் நவீன தொழில் நுட்பங்களை குறைவாக பயன்படுத்துதல்
10. குறைவான அரசு முதலீடு மற்றும் விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த விளைபொருட்களுக்கு விலையை நிர்ணயம் செய்ய இயலாமை.

3. **உள்கட்டமைப்பு சார்ந்த பிரச்சனைகள்:**

ஊரக பகுதிகளில் உள் கட்டமைப்பு வசதிகளான நீர், மின்சாரம், போக்குவரத்து, கல்வி நிறுவனங்கள், தகவல் தொடர்பு, மருத்துவ வசதி, வேலைவாய்ப்பு, பண்டக சேமிப்பு வசதி, வங்கி மற்றும் காப்பீடு போன்ற வசதிகள் போதுமானதாக இல்லை.

4. **பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகள்:**

அதிகச் செலவு பிடிக்கும் தொழில் நுட்பங்கள் மற்றும் உள்ளீடுகளை பயன்படுத்த இயலாமை, நலிவடைந்த ஊடக தொழிற்சாலைகள்,குறைவான வருமானம், கடன் சுமை, நிலவுடைமை மற்றும் சொத்துகளில் உள்ள ஏற்றத்தாழ்வு ஆகியவை ஊரக பகுதிகளில் காணப்படும் பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகளாக உள்ளது.

5. **தலைமை சார்ந்த பிரச்சனைகள்:**

ஊரக பகுதிகளில் தலைமை தொடர்பான பிரச்சனைகள் உள்ளன. அவை: தகுதியற்ற மற்றும் செயல்படாத நபர்கள் தலைமை பொறுப்பை வகிப்பது, சுய விருப்புடன் செயல்படும் தலைவர்கள், நடுவுநிலைமை அற்ற தலைவர்கள், குறைந்த பேர சக்தி ஆற்றல் மற்றும் திறமையை மறுத்தல் மற்றும் அரசியல் தலைவர்களின் தலையீடு.

6. **நிர்வாகம் சார்ந்த பிரச்சனைகள்:**

அரசியல் தலையீடு, ஊக்கமின்மை, ஆர்வமின்மை, குறைந்த கூலி, வரவு செலவுகளை சரிவர முறையாக பயன்படுத்தாமை,மேலாண்மையின்மை, ஊரக வளர்ச்சி திட்டங்களை மேற்பார்வையிடுவதற்கு சரியான கண்காணிப்பு இன்மை மற்றும் நடைமுறைபடுத்தாமை ஆகியவை ஊரக பகுதிகளில் காணப்படும் நிர்வாகச் சிக்கல்கள் ஆகும்.

கிராமப்புற வறுமை, கிராமப்புற வேலையின்மை கிராமப்புற தொழிற்சாலைகள், சிறு நிதி, ஊரக நலம் மற்றும் சுகாதாரம் மற்றும் ஊரக உள்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான பிரச்சனைகள் விரிவான விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

**ஊரக வறுமை:**

கிராமங்களில் காணப்படும் வறுமையை ஊரக வறுமை எனலாம். இந்தியாவில் வறுமை என்பது அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான வருமானத்தை ஈட்ட முடியாத நிலையாகும். வறுமை கோடு என்பது மக்களின் வருமானம் அல்லது நுகர்வு நிலையை பொறுத்து வறுமை கோட்டிற்கு மேல் மற்றும் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் என அனுமானிக்கும் கோடு ஆகும். பரிந்துரைக்கப்பட்ட ஊட்டச் சத்து உணவு எடுத்துக் கொள்ளுதல் அளவு அடிப்படையில் கிராமங்களில் வாழும் மக்கள் நாள் ஒன்றுக்கு 2,400 கலோரி அளவு மற்றும் அதற்குக் குறைவாக எடுத்துக்கொள்வர்கள் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் ஆவர். திட்டக்குழுவின் கணக்கீட்டின்படி 2009 – 2010-ல் ஊரக பகுதியில் வறுமையில் உள்ள மக்கள் சதவீதம் 54.10 சதவீதம் இருந்தது. 2009 – 10-ல் மொத்த வறுமை சதவீதம் 33.80.

ஊரக பகுதிகளில் உள்ள தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரிடையே வறுமை மிகுந்து காணப்படுகிறது. 2005-ஆம் ஆண்டில் இப்பிரிவினரில் 80 சதவீதம் பேர் ஊரக வறுமையில் இருந்தனர். இது மொத்த ஊரக மக்களின் பங்கினைக் காட்டிலும் குறைவாகும். இந்தியாவில் 2015 – ஆம் ஆண்டில் 80 கோடி மக்கள் கிராமங்களில் வாழ்கின்றனர்.

அவர்களில் கால்பகுதி கிராமமக்கள் (22 கோடி மக்கள்) வறுமைக்கோட்டிற்கு கீழ் வசிக்கின்றனர். உலக ஏழை மக்களின் தொகையில் 22% இந்தியாவில் உள்ளனர். மக்கட்தொகை வளர்ச்சிவீதத்தைக் காட்டிலும் ஏழைகளின் அளவு வீதத்தை குறைப்பதில் வெற்றி பெற்றுள்ளோம்.

**ஊரக வறுமைக்கான காரணங்கள்:**

ஊரக வறுமையை தீர்மானிக்கும் பல்வேறு காரணங்கள்

1. **நிலங்கள் சரியாக பிரிக்கப்படாமை:**

   ஊரக நிலப் பகுதிகள் ஒரு சிலரிடமே குவிந்து காணப்படுகிறது. பெரும்பான்மை கிராம மக்கள் தங்கள் குடும்ப தேவைகளுக்காக அந்நிலங்களில் கூலிக்கு வேலை செய்கின்றனர்.

2. **பண்ணை சாராத தொழில்களில் வேலைவாய்ப்பின்மை:**
   அதிகரிக்கும் உழைப்பாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பண்ணை சாராத தொழில்கள் வளரவில்லை. மிகுதியான தொழிலாளர்கள் ஊரகப்பகுதிகளில் உள்ளபடியால் குறைவான கூலியையே பெறுகின்றனர். இது வறுமைக்கு வழி வகுக்கிறது.

3. **பொதுத்துறைகளில் முதலீடு இன்மை:**
   மனித வளத்தை மேம்படுத்துவதற்கான முதலீடு நமது நாட்டில் மிகக் குறைவாக உள்ளதால், வறுமைக்கு அடிப்படையான காரணமாக உள்ளது.

4. **பணவீக்கம்:**
   பொருட்களின் விலை அதிகரிப்பதால் ஊரக மக்களின் வாங்கும் சக்தி குறைந்து ஊரக வறுமைக்கு வழிவகுத்தது.

5. **குறைந்த உற்பத்தித் திறன்:**

   ஊரக தொழிலாளர்கள் மற்றும் பண்ணைகளின் குறைந்த ஊற்பத்தித்திறன், வறுகைக்கு காரணமாக அமைந்தது.

6. **வளர்ச்சியின் நன்மைகளில் உள்ள சமனற்ற நிலை:**

   பொருளாதார வளர்ச்சியினால் ஏற்படும் நன்மைகளை நகர்புற பணக்காரர்களே அனுபவிப்பதால், சொத்துக்கள் அவர்களிடமே குவிந்து உள்ளன. குறைபாடுள்ள பொருளாதார அமைப்புகள் மற்றும் கொள்கைகளால், வளச்சியின் நன்மைகள் ஏழை மக்களை சென்றடைவது இல்லை. அதை போல ஏழை மக்களின் பங்களிப்பையையும் சரியாகக் கணக்கிடப்படவில்லை.

7. **குறைந்த பொருளாதார வளர்ச்சி வீதம்:**

   இந்திய பொருளாதார வளர்ச்சி பணக்காரர்களுக்கு சாதகமாகவே உள்ளது. நாடு அடைந்த வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தின் நன்மைகள் ஏழை மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது.

8. **பெரிய தொழிற்சாலைகளுக்கே முக்கியத்துவம்:**
   இந்தியாவில் பெரிய தொழிற்சாலைகளில் செய்யப்படும் அதிக முதலீடு நகர்புறத்தின் நடுத்தர மற்றும் உயர் வருமான பிரிவினரின்

தேவைகளையே பூர்த்தி செய்கிறது. இந்த தெழிற்சாலைகள் இயந்திரங்களையே அதிகமாக பயன்படுத்துவதால் வேலைவாய்ப்பு உருவாக்கம் குறைவாகவே உள்ளது. ஆதலால் கிராமப்புற மக்கள் வேலைவாய்ப்பினை பெற முடியாத நிலையிலும், வறுமையிலிருந்து மீள முடியாமலும் உள்ளனர்.

9. **சமூக குறைபாடுகள்:** சமுதாயத்தில் நிலவும் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் போன்றவை ஆக்கமற்ற உற்பத்தி செலவை அதிகரிக்கிறது.

10. **ஊரக வறுமையை ஒழிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்:**

ஊரக வேலையின்மையும், ஊரக வறுமையும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதால் வேலைவாய்ப்பினை ஊருவாக்குதல் மூலமாக வறுமையை ஒழிக்கலாம். வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் காலத்திற்கு ஏற்ப நடைமுறைப்படுத்தல், தொகுக்கப்படுதல் மற்றும் விரிவாக்கம் செய்தல் ஆகியன நடைபெறுகின்றன. ஆனாலும், வேலையின்மை, பிச்சையெடுத்தல், குப்பை பொறுக்குதல் மற்றும் குடிசைகளில் வாழ்வோர் போன்ற நிலைகள் தொடர்கிறது. வேலை வாய்ப்பின்றி ஏழை மக்களின் வறுமையை ஒழிக்க முடியாது.

| **வறுமை ஒழிப்புத் திட்டங்கள்** | |
|---|---|
| **திட்டங்கள்** | **தொடங்கப்பட்ட ஆண்டு** |
| 20 அம்ச திட்டம் | 1975 |
| ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம் (IRDP) | 1976 |
| ஊரக இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்பு பயிற்சி (TRYSEM) | 1979 |
| வேலைக்கு உணவுத்திட்டம் (FWP) | 1977 |
| தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் (NREP) | 1980 |
| ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித்திட்டம் (RLEGP) | 1983 |
| ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் (JRY) | 1989 |
| மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டம் (MGNREGS) | 2006 |

| **திட்டங்கள்** | **தொடங்கப்பட்ட ஆண்டு** |
|---|---|
| பிரதான் மந்திரி ஆதர்ஷ் கிராம் சதக் யோஜனா (PMAGSY) | 2010 |
| பாரத் நிர்மான் யோஜனா | 2005 |
| இந்திரா ஆவாஸ் யோஜனா | 1985 - 1986 |
| ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற மறுசீரமைப்பு திட்டம் (JNNURM) | 2005 |
| ராஜீவ் ஆவாஸ் யோஜனா (RAY) | 2009 |
| தேசிய ஊரக நலத்திட்டம் | 2005 |

| | |
|---|---|
| தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் | 2011 |
| தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டம் | 2013 |

**ஊரக வேலையின்மை:**

**வேலையின்மை:**

என்பது நடைமுறையிலுள்ள ஊதிய விகிதத்தில், தனி நபரால் வேலை செய்ய விருப்பப்பட்டும் கிடைக்கப் பெறாத நிலையாகும். இதனால் மனிதவளம் மிகவும் வீணாகிறது மற்றும் குறைவாக பயன்படுத்தப்படுகிறது. வேலையின்மை நிலவுகின்ற வரை சமூக பிரச்சினைகளை தடுக்க முடியாது. பொருளாதாரம் முன்னேற்ற இலச்சினை அடைய முடியாது.

பணிக்கான படிப்பு (Jobs study) என்ற ஆய்விற்காக பீட்டர் டயமண்ட், டேல் மார்டின்கன் மற்றும் கிறிஸ்டோர் பிசாரிட்ஸ் ஆகிய பொருளாதார அறிஞர்கள் 2010 – ம் ஆண்டிற்கான பொருளாதாரத்திற்கான நோபல் பரிசினை பகிர்ந்து கொண்டனர் இவர்கள் உருவாக்கிய முறைக்கு அல்லது கோட்பாட்டிற்கு DMP முறை எனப்படும். பொருளாதார கொள்கைகள் மற்றும் ஒழுங்கு முறைகள் எப்படி வேலையின்மை, வேலைக்கான காலியிடங்கள் மற்றும் கூலி ஆகியவற்றை பாதிக்கிறது என அறிந்துகெள்ள DMP முறை உதவுகிறது.

2016, அக்டோபர் 4, நிலவரப்படி, ஊரக வேலையின்மை 7.8 சதவீதமாகும். இது நகர்ப்பற வேலையின்மையை (10.1%) விட குறைவு ஆகும். இந்திய மொத்த வேலையின்மை 8.5% ஆகும்.

**ஊரக வேலையின்மை என்பது மூன்று வகைப்படும்:**

1. வெளிப்படையான வேலையின்மை
2. மறைமுக வேலையின்மை அல்லது குறை வேலையுடைமை
3. பருவகால வேலையின்மை

**வெளிப்படையான வேலையின்மை:**

என்பது வேலைக்குத் தயாராக இருந்தும் எந்த வேலையும் கிடைக்காமல் வேலையில்லாத நிலையில் இருப்பது ஆகும். விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் ஊரக கைவினைஞர்கள் மற்றும் கற்றவர்கள் ஆகியோர் இப்பிரிவைச் சார்ந்தவர்கள்.

**மறைமுக வேலையின்மையில்**

தகுதிக்கு குறைந்த வேலையில் ஈடுபட்டுள்ளவர்களை அடையாளம் காண்பது கடினம். உபரியான வேலையாட்கள் நியமிக்கப்பட்டுதல், மறைமுக வேலையின்மைக்குக் காரணமாகும். வேலையிலிருந்து சிலரை நீக்கினாலும் உற்பத்தியின் அளவு குறையாது. ஏனென்றால் அவர்களின் இறுதிநிலை உற்பத்தித் திறன் ஒன்றுமில்லை. இதுவே மறைமுக வேலையின்மை அல்லது குறைவேலையுடைமை எனப்படும். சிறு மற்றும் குறு விவசாயிகள், கால்நடை வளர்ப்பவர்கள் மற்றும் கிராமப்புற கைவினைஞர்கள் ஆகியோரிடையே குறைவேலையுடைமை காணப்படுகிறது. இவ்வகை வேலையின்மை நகர்புறத்தை

விட, ஊரக பகுதிகளிலேயே அதிக மோசமாக காணப்படுகிறது. ஊரக பகுதிகளில் மறைமுக வேலையின்மை 25 முதல் 30 விழுக்காடு வரை காணப்படுகிறது.

**பருவகால வேலையின்மையில்** :

இயற்கை சூழல் பொறுத்து ஒரு குறிப்பிட்ட பருவ காலத்தில் ஊடக மக்கள் வேலைவாய்ப்பினை பெறுகிறார்கள். எஞ்சியுள்ள காலகட்டத்தில் வேலையின்றியோ அல்லது பகுதி நேர வேலையிலோ ஈடுபட்டுள்ளனர். உழுதல், விதைத்தல், களை எடுத்தல் மற்றும் அறுவடை செய்தல் போன்ற பருவங்களில் வேலைக்கு ஆள் பற்றாக்குறை நிலவுகிறது. ஆண்டின் பிற பருவங்களில் ஆட்களுக்கு வேலை கிடைப்பதில்லை. ஒரு விவசாயி வருடத்திற்கு ஒரு பயிரை மட்டும் பயிரிடும் போது, கிட்டத்தட்ட 5 முதல் 7 மாதங்கள் வேலையின்றி தவிக்கும் பரிதாபமான சூழலுக்கு தள்ளப்படுகிறார்.

வோளாண் தொழிலாளர் விசாரனைக்குழு அறிக்கையின் படி, 84 சதவீத வேளாண் தொழிலாளர்கள் குறை வேலையுடமையில் உள்ளனர். அவர்கள் சராசரியாக ஆண்டுக்கு 82 நாட்கள் வேலையின்றி உள்ளனர்.

**ஊரக வேலையின்மைக்கான காரணங்கள்:**

இந்தியாவில் ஊரக வேலையின்மைக்கான பல்வேறு காரணங்களை விவாதிக்கலாம்.

1. **திறன்மேம்பாட்டு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம் இன்மை:**

   ஊரகப்பகுதிகளில் வேலைவாய்ப்பு இல்லாமல் இருப்பதற்கு அரசு போதிய பயிற்சிகள் மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்காமல் இருப்பதே முக்கிய காரணமாகும்.

2. **வேளாண்மை பருவகாலம் சர்ந்தது**:
   வேளாண் செயல்பாடுகள் பருவகால மாற்றங்களான இயற்கை மற்றும் மழையளவு ஆகியவற்றை சார்ந்துள்ளது. பருவகாலம் அற்ற நேரங்களில் உழைப்பிற்கான தேவை மிகவும் குறைவாக உள்ளது. எனவே வேளாண் சாரா வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும்.

3. **துணை தொழில்களின் மை:**
   போதிய முதலீட்டு நிதிவசதி மற்றும் அங்காடி வசதிகள் இல்லாததால், ஊரக மக்கள் கோழி வளர்ப்பு, கயிறு திரித்தல் மற்றும் பன்றி வளர்த்தல் போன்ற துணைத்தொழில்களை மேற்கொள்ள இயலவில்லை. இவை ஊரக வேலைவாய்ப்பு மற்றும் குடும்ப வருமானத்தைக் குறைக்கிறது. ஊரக மக்களுக்கு தேவையான நிதிவசதியை அரசு ஏற்படுத்தித்தர வேண்டும். முறையான அமைப்புகளிடமிருந்து பணத்தை கடனாக பெற முடியாதால் உள்ளூரில் அதிகவட்டிக்கு பணம் கடன் பெறுகின்றனர்.

4. **வேளாண்மையை இயந்திரமயமாக்கல்:**
   வேளாண் தொழிலாளர்கள் வேலைக்காக நிலக்கிழார்களையே முழுமையாக நம்பியுள்ளனர். வேளாண் செயல்பாடுகளான உழுதல், நீர்பாய்ச்சுதல், அறுவடை செய்தல், கதிர் அடித்தல் போன்றவற்றில்

இயந்திரங்களை பயன்படுத்துவதால் வேளாண் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு குறைகிறது.

5. **மூலதன செறிவு தொழில்நுட்பம்:**
நகர்புறங்களில் விரிவடைந்து வரும் தனியார் தொழில் துறை மூலதன செறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதால், கூடுதல் வேலைவாய்ப்பை ஏற்படுத்த முடியவில்லை. அரசாங்கம், தொழில் நிறுவனங்களை நிறுவுவதன் மூலம் உபரி தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும்.
6. **கல்விமுறையில் உள்ள குறைபாடுகள்:**

தற்போதைய கல்வி முறை ஊரக வேலையின்மை பிரச்சனையை மேலும் அதிகப்படுத்தியுள்ளது. சமீப ஆண்டுகளில் பட்டதாரிகளை உருவாக்கும் கல்வி நிலையங்கள் ஏராளம். மேலும் மாணவர்களும் பட்டம் பெறுவதை மட்டுமே விரும்புகின்றனர். அவர்கள் தமது திறமைகளை வளர்த்துக்கொள்ள விரும்பவில்லை. திறன் அடிப்படையில் பட்டங்கள் வழங்கப்பட வேண்டும். வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு அவர்களின் திறமைகளை வளர்த்துக்கொள்ள போதிய வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

**ஊரக வேலையின்மைக்கான தீர்வுகள்:**

நாட்டில் ஊரக வேலையின்மையை குறைப்பதற்கு பல்வேறு நிலைகளில் ஒருங்கிணைந்த முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். சில தீர்வுகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

1. **துணை தொழில்கள்:**
பருவகால வேலையின்மையை தவிர்க்க ஊரக மக்களை, துணை தொழில்களை தொடங்குவதற்கு ஊக்கப்படுத்த வேண்டும். கடன் வசதிகளை ஏற்படுத்தித்தர வேண்டும். உற்பத்தி செய்த பண்டங்களை சந்தைபடுத்துவதற்கான வசதிகளையும் செய்து தர வேண்டும்.

2. **ஊரக வேலைத்திட்டம்:**
சாலைவசதி, வடிகால்கள், கால்வாய்கள் தோண்டும் பணிகள் போன்ற ஊரக சமுதாய ஆக்கப்பணிகள் செய்தல் மற்றும் பராமரித்தல் போன்ற பணிகளை திட்டமிட்டு வேளாண் பருவகாலம் அல்லாத நேரங்களில் செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் வேலையற்றவர்களுக்கு ஆக்கப்பூர்வமான வேலை வாய்ப்புகளை உருவாக்கலாம்.

3. **நீர்ப்பாசன வசதிகள்**:

போதிய மழையாளவு இல்லாததால் நீர்ப்பாசன வசதியினை பயன்படுத்தி பலவகை பயிர்களை பயிர் செய்யும் முறையினை கையாள வேண்டும். தீவிர பயிர்சாகுபடி முறைகளை அதிகரிப்பதன் மூலம் தொழிலாளர்களுக்கான தேவை அதிகரிக்கும்.

4. **ஊரக தொழில் மயமாக்கல்**:

வேலைவாய்ப்பினை உருவாக்க ஊரக பகுதிகளில் புதிய தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும். இது புதிய துறைகளில் வேலைவாய்ப்பினையும் மற்றும் ஊரக மக்களின் அணுகுமுறையிலும் மாற்றத்தை ஏற்படுத்தும். அரசாங்கம் இதற்கான நடவடிக்கைகளின் ஈடுபடவேண்டும். தனியார்துறைக்கு இத்தகைய பொறுப்புகள் ஏதும் இல்லை.

5. **தொழில்நுட்ப கல்வி:**

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், வேலை வாய்ப்பு சார்ந்த படிப்புகளை உருவாக்கி அதன் மூலம் கற்ற இளைஞர்களை சுயமாக தொழில் துவக்க வழிவகை செய்ய வேண்டும்.

**ஊரக தொழிற்சாலைகள்:**

ஊரக பகுதிகளில், ஊரக மக்களால் நடத்தப்படும் அனைத்து தொழிற்சாலைகளும் ஊரக தொழிற்சாலைகள் ஆகும். உள்ளூரில் கிடைக்கும் கச்சாப் பொருட்கள், திறன்கள் மற்றும் சிறிய அளவிலான முதலீடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இத்தொழிற்சாலைகள் அமைகின்றன. ஊரக தொழிற்சாலைகள் பலவகைப்படும். அவை

1. குடிசைத்தொழில்கள்
2. ஊரக தொழில்கள்
3. சிறு தொழில்கள்
4. குறுந்தொழில்கள் மற்றும்
5. வேளாண் சார்ந்த தொழில்கள்

**குடிசைத் தொழில்கள்:**

பொதுவாக குடிசைத் தொழில்கள் விவசாயத்தையே சார்ந்துள்ளன. இதன் மூலம் ஊரக மக்கள் முழு நேர மற்றும் பகுதிநேர வேலைவாய்ப்பினை பெறுகிறார்கள்.

**குடிசைத் தொழில்களின் முக்கிய சிறப்பியல்கள்**

1. கைவினை தொழிலாளர்கள் தங்கள் சொந்த பொறுப்பில் வீட்டிலேயே குடும்ப வருமானத்திற்காக பொருட்களை தயாரிக்கின்றனர். வேறு ஒரு நிரந்தர பணியினை செய்து கொண்டே குடிசைத் தொழிலை மேற்கொள்பவர்களும் உள்ளனர்.

2. குடிசைத்தொழிலில் உழைக்க வெளியிலிருந்து நபர்களை அமர்த்துவதில்லை. பொதுவாக குடும்ப உறுப்பினர்களே தேவையான உழைப்பினை தருகின்றனர்.

3. குடிசைத்தொழில்கள் பாரம்பரியமானது மற்றும் பரம்பரைபரம்பரையாகவும் செய்துவரும் தொழிலாகும்.

4. மின்சாரத்தின் உபயோகமின்றி தயாரிக்கப்படுகின்றன அல்லது குறைந்த அளவு மின்சாரம் உபயோகப்படுத்தப்படுகின்றது.

5. வழக்கமாக உள்ளூர் சந்தையிலேயே பொருட்கள் விற்கப்படுகின்றன. பொதுவாக பிற தொழிற்சாலைக்களுக்கு தேவையான உதிரிபாகங்களை வழங்குகின்றன.

பாய், கயிறு திரித்தல் மற்றும் கூரை முடைதல் ஆகியன உதாரணங்களாகும். இந்தியாவின் முதன்மை குடிசைத் தொழிலாக விளங்குபவை கைத்தறி, நெசவு (பருத்தி, பட்டு, சணல் முதலியன) மட்பாண்டம் செய்தல், சலவை சோப்பு தயாரித்தல், சங்கு தொழில், கைகளால் காகிதம் தயாரித்தல், கொம்பு பொத்தான், முத்துச் சிப்பி பொத்தான், வீட்டு உபயோகக் கருவிகள் செய்தல், பீட்டு மற்றும் சாவி தயாரிக்கும் தொழிற்சாலைகள்.

**கிராமத் தொழிற்சாலைகள்:**

கிராமத் தொழிற்சாலைகள் இயற்கை பராம்பரியமானது மற்றும் உள்ளூர் மூலப் பொருள்களை சார்ந்தது. அவை உள்ளூர் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. கிராமத் தொழிற்சாலைகளுக்கு எடுத்துக்காட்டு சர்க்கரை மற்றும் வெல்லம் தயாரித்தல், பிரம்பு மற்றும் மூங்கில் கூடை செய்தல், காலணி தயாரித்தல் மட்பாண்டங்கள் மற்றும் தோல் பதனிடுதல் முதலியன. இவை அனைத்தும் குடிசைத் தொழில்கள் போன்றே அமைந்துள்ளன.

**சிறுதொழில்கள் (SSIs):**

நகர்புற மையங்களுக்கு அருகிலேயே பெரும்பாலான தொழில் நிறுவனங்கள் அமைந்துள்ளன. உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அங்காடிகளுக்கு பண்டங்களை உற்பத்தி செய்கின்றன. சிறுதொழில் நிறுவனங்களுக்கு எடுத்துக்காட்டு: விளையாட்டு உபகரணங்கள் தயாரித்தல், சோப்பு தயாரித்தல், மின் விசிறி தயாரித்தல், காலணிகள் தயாரித்தல், தையல் இயந்திரங்கள் மற்றும் தைத்தறி நெசவு உற்பத்தி முதலியன ஆகும்.

SSIs என்பது குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSMEs) ஆகும். குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் வளர்ச்சிச் சட்டம் 20065-ன் படி இவை வகைப்படுத்தப்படுகின்றன. இச்சட்டத்தின்படி உற்பத்தி தொழிற்சாலைகள் முதலீட்டின் அடிப்படையிலும், சேவை சார்ந்த தொழிற்சாலைகள் கருவிகள் மீதான முதலீட்டின் அடிப்படையிலும் பிரிக்கப்படுகின்றன.

**வேளாண் சார்ந்த தொழிற்சாலைகள்:**

வேளாண் உற்பத்தி பண்டங்களை நுகர்வுக்குரிய பொருட்களாக மற்றுகின்ற பணியில் வேளாண்மை சார்ந்த தொழிற்சாலைகள்ஈடுபடுகின்றன. வேளாண் சார்ந்த தொழில்கள் குடிசைத்தொழில், சிறுதொழில் மற்றும் ஆலைத்தொழிலாகவும் உள்ளன. நிரந்தர பணியில் அதிக அளவு பணியாளர்கள் தொழிற்சாலைகளில் பணிபுரிவதால் அதனருகிலேயே குடியேற்றங்கள் பெருகுகின்றன. எ.கா. ஜவுளி தொழிற்சாலை, சர்க்கரை ஆலை, காகித ஆலை, தாவர எண்ணெய் ஆலை, தேயிலை மற்றும் காபி தொழிற்சாலைகள்.

**ஊரக கடன்சுமை:**

ஊரக கடன்சுமை என்பது கிராம மக்கள் குறிப்பிட்ட காலத்தில் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த இயலாமல் கடனின் அளவு அதிகரித்துக் கொண்டே செல்லும் நிலையைக் குறிக்கும். இந்தியாவின் நிதி கட்டமைப்பு பலவீனமாக இருப்பதனால் உதவி தேவைப்படும் விவசாயிகள், நிலமற்ற விவசாயிகள் மற்றும் வேளாண் கூலி தொழிலாளர்களின் கடன்சுமை அதிகரித்துக் கொண்டே வருகிறது. இதனால் குறைந்த வாழ்க்கைத் தரம், குறைந்த உற்பத்தித் திறன், தற்கொலைகள் போன்ற தீய விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

வேளாண்மை செய்யவும், வேளாண்மை இல்லாத காலங்களில் குடும்ப செலவிற்காகவும், கருவிகள் வாங்குவதற்காகவும், குடும்பவிழா கொண்டாட்டங்கள், மதுபான நுகர்வு மற்றும் மருத்துவச் செலவு போன்ற காரணங்களுக்காகவும் வரம்பின்றி விவசாயிகள் கடன் பெறுகின்றனர். வருமானம் குறைவாக உள்ளதால் அவர்கள் பெற்ற கடன்களையும், வட்டியையும் திருப்பி செலுத்த இயலாத நிலையில் கிராம மக்கள் உள்ளனர்.

| |
|---|
| ”இந்தியாவில் 2015 ஆம் ஆண்டு சமூக பொருளாதார மற்றும் சாதி ரீதியான கணக்கீட்டடின்படி,73% மக்கள் ஊரக பகுதிகளில் வசிக்கின்றனர். இதில் 18.5% மக்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள்,11% மக்கள் பழங்குடியினர். |

தேசிய மாதிரி கணக்கெடுப்பு அமைப்பு (NSSO, 2002 – 2003) புள்ளிவிவரப்படி 30% ஏழைகள் மட்டுமே அரசுடமை வங்கிகளில் கடன் பெறுகின்றனர். அகில இந்திய கடன் மற்றும் முதலீட்டு ஆயிவு (AIDIS 2002) – ன் படி 1991 – ல் 66.3% ஆக இருந்த அமைப்புக் கடன் 2002-ல் 57.1% ஆக குறைந்தது. இந்தக் குறைவு அமைப்புசாரா கடன்களின் அதிகரிப்பை காட்டுகிறது (RBI 2006)

**ஊரக கடன் சுமைகளின் இயல்புகள்:**

இந்தியாவில் ஏறக்குறைய 4ல் 3 பகுதி ஊரக குடும்பங்கள் கடனில் மூழ்கி உள்ளனர். சிறு விவசாயிகளுக்கு கடன் சுமை அதிகம். விவசாய தொழிலாளர்கள் மற்ற தொழிலாளர்களைக் காட்டிலும் மிகுந்த கடனாளிகளாக உள்ளனர். பெரும்பாலான கடன்கள் குறுகிய கால கடன்கள் மற்றும் உற்பத்தி இயல்பற்றவை. அதிக வட்டிக்கு கடன் வாங்குபவர்களின் சதவிகிதமே அதிகமாக உள்ளது. பெரும்பான்மையான கிராம மக்கள் தனியார் நிறுவனங்களிடமிருந்தும், அதிக வட்டிக்கு பணம் கொடுப்பவர்களிடமிருந்தும் கடன் பெறுகிறார்கள்.

**ஊரக கடன்களுக்கான காரணங்கள்:**

ஊரக கடன்களுக்கான காரணங்கள் பின்வருமாறு

1. **விவசாயிகளின் ஏழ்மை நிலை:**

   வறுமைகொடும் சூழலானது நுகர்விற்காகவும், விவசாயத் தொழிலை மேற்கொள்வதற்காகவும் மற்றும் குடும்பவிழாக்களுக்காவும் விவசாயிகளை கடன் பெறத் தூண்டுகிறது. ஏழ்மை நிலை, கடன் மற்றும் கடனுக்கான அதிக வட்டி முதலியன விவசாயிகளைக் கடன் கொடுப்பவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கிறது.

2. **பருவமழை பொய்த்தல்**:

அடிக்கடி பருவமழை பொய்த்துப் போவது விவசாயிகளுக்கு சாபமாக அமைகிறது. இயற்கை பொய்த்துப் போவதால் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். ஆதலால் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த இயலாமல் அவதிப்படுகின்றனர். விவசாயம் எப்போது சிறக்கும், கடன்களை அடைக்கலாமென அவர்களால் கணிக்க முடியவில்லை.

3. **வழக்குகள்:**

நிலங்கள் தொடர்பான வழக்குகள் நீதிமன்றத்தில் இருப்பதால் அதற்காக செலவிட அதிக கடன் பெறுகிறார்கள். அவர்களின் கல்வியறிவின்மையாலும் அறியாமையாலும் வழக்குகள் நீண்டகாலமாக இழுத்தடிக்கப்பட்டு அவர்கள் சேமிப்பு மற்றும் சொத்துக்கள் அழிக்கப்படுகிறது.

4. **வட்டிக்கு கடன் தருவோர் மற்றும் அதிக வட்டி வீதம்:**

உள்ளூரில் வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் அதிக வட்டி வசூலித்தல் மற்றும் அசலுடன் வட்டியைச் சேர்த்து அதிகரித்தக்கொண்டே செல்வதால் விவசாயிகள் கடனிலேயே மூழ்கும் நிலை உள்ளது.

**ஊரக கடன்களை தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்:**

ஊரக கடன்களைத் தீர்ப்பதற்கு பல்வேறு வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவை வட்டிக்கு கடன் கொடுப்பவர்களை ஒழுங்குபடுத்துதல், ஊரக வங்கிகளை மேம்படுத்துதல், வட்டார ஊரக வங்கிகள் (RRBs) தொடங்குதல், நுண்கடன்கள் வழங்குதல், சுய உதவிக் குழுக்களை அமைத்தல் (SHGs), தொடக்க கூட்டுறவு வங்கிகள் மற்றும் நில வங்கிகள் தொடங்குதல், பயிர் கடன் வழங்குதல், முன்னோடி வங்கித்திட்டங்கள், சிறிய அலகு முன்னேற்ற மற்றும் மறு நிதியளிப்பு முகவர் வங்கி (MUDRA) தொடங்குதல், துணை தொழில்களை உருவாக்குதல்,விவசாயம் சாரா தொழில்களை உருவாக்குதல், திறன் மேம்பாடு பயிற்சிகள் அளித்தல், இருப்பினும் ஏழைகள் மற்றும் சுய உதவிக்குழுவினருக்கு வட்டி வீதங்கள் மற்றும் போக்குவரத்து செலவினங்கள் வசதிமிக்கவர்களுக்கு கிடைப்பதைக் காட்டிலும் அதிகமாக உள்ளது. எடுத்துக்காட்டாக மகிழ்வுந்துக்கான கடனைவிட கல்விக்கடன் வட்டி அதிகமாக உள்ளது.

**வட்டார ஊரக வங்கிகள் (RRBs):**

இந்திய அரசாங்கம் 1975 ஆம் ஆண்டு ஊரக வங்கிகளின் செயல்பாடுகள் குறித்து ஆராய, ஊரக வங்கிகளில் பணிபுரிந்தவர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின்படி, வட்டார ஊரக வங்கிகள் (Regional Rurual Banks) செயல்படுத்தப்பட்டன. சிறு மற்றும் குறு விவசாயிகள், வேளாண் தொழிலாளர்கள், கிராம கைவினைஞர்கள் மற்றும் சிறு நிறுவனங்களுக்கு கடன் மற்றும் பிற உதவிகளை வழங்குவதன் மூலம் ஊரகப் பொருளாதாரம் மேம்பாடு அடைய வட்டார ஊரக வங்கிகள்

பரிந்துரைக்கப்பட்டன. மத்திய மாநில அரசுகள் மற்றும் வணிக வங்கிகளின் கூட்டு முயற்சியால் உருவானதே வட்டார ஊரக வங்கிகள் ஆகும். தற்போது இந்தியாவில் 64 வட்டார ஊரக வங்கிகள் உள்ளன. பொருளாதாரத்தில் நலிவடைந்தோருக்கு மட்டுமே RRBs– கடன் வழங்குகிறது. மற்றும் வங்கியின் வட்டி வீதமானது கூட்டுறவு சங்கங்களின் வட்டி வீதத்தைப் போல் இருக்கும்.

## குறுநிதி (Micro Finance):

குறுநிதி என்பது குறுகடன்களைக் குறிக்கும். இந்த நிதிச்சேவையானது கடன்கள், சேமிப்புகள். தொழில் முனைவோர்க்கான காப்பீடு வசதிகள், பாரம்பரிய மூலதன ஆதாரம் இல்லாத சிறு தொழில் முனைவோர் ஆகியோர்க்கு வங்கி அல்லது முதலீட்டாளர் போல செயல்படுவதாகும். சிறுதொழில்புரிவோருக்கு தேவையான நிதியை சிறுதொழில்புரிவோருக்கு தேவையான நிதியை வழங்கி அவர்களை தொழில் அல்லது வணிகத்தில் முதலீடு செய்யவைப்பதே இதன் நோக்கமாகும்.

குறு நிதியானது குறுங்கடன் வழங்கும் நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகிறது. இதில் சிறிய, இலாப நோக்கமில்லாத நிறுவனங்களிலிருந்து பெரிய வங்கிகள் வரை அடங்கும். அரசு சாராத நிறுவனங்கள் (NGOs) இவ்வகைக் கடன் வழங்குவதில் முன்னோடியாக விளங்குகின்றன. இந்தியாவில் இந்த குறுங்கடன் வழங்கும் முறைகள் கடந்த 20 வருடங்களாக அதிக வளர்ச்சியடைந்துள்ளன. இந்தியாவில் 2009 ஆம் ஆண்டில் குறு கடன் வழங்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை 150 ஆக இருந்தது.

### சுய உதவிக் குழுக்கள்:

”சுயஉதவிக்குழு” என்பது ஓரே மாதிரியான சமூக பொருளாதாரப் பின்னணி கொண்ட 20 பெண்கள் வரை (சராசரியாக 14 பேர்) கொண்ட தன்னிச்சையான அமைப்பு ஆகும். இவற்றின் உறுப்பினர்கள் சுயஉதவி மற்றும் பரஸ்பர உதவி மூலம் பொதுவான பிரச்சனைகளை தீர்த்துக்கொள்ள முயல்கின்றனர். சுயஉதவிக் குழுக்கள் உறுப்பினர்களின் சிறு சேமிப்பை அதிகரிக்க உதவுகின்றன. அவர்கள் மாதந்தோறும் சிறுதொகையான ரூ 10 முதல் ரூ 50 ரூபாய் வரை வங்கியில் சேமிக்கின்றனர். தொடர்ந்து இவ்வாறு 6 மாதங்கள் சேமித்த பிறகு சிறிய தொகைகளாக குழுவிலுள்ள தேவைப்படும் உறுப்பினர்களுக்கு வட்டிக்கு வழங்குகின்றனர். செயல்பாடுகளை வைத்து சுயஉதவிக் குழுக்கள் வங்கி இணைப்பு திட்டத்தில் சேர்க்கப்படுகிறார்கள் (SBLP). இது 1992 ல் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டம் சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதற்கும், ஊரக ஏழை மக்களை இணைப்பதற்கும் மற்றும் அவர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கும், செயல்பாடுகளை திட்டமிடுவதற்கும், உள்கட்டமைப்பு வசதியை உருவாக்குவதற்கும், தொழில்நுட்ப வசதி, கடன் மற்றும் சந்தைப்படுத்துதல் ஆகிய அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கும் உருவாக்கப்பட்ட நல்ல திட்டமாகும்.

2009 – 10 ஆம் ஆண்டின்படி 1.59 மில்லியன் புதிய சுய உதவிக் குழுக்கள் இக்கடன் பெறும் வசதியோடு இணைக்கப்பட்டன. மற்றும் வங்கிகள் மூலம் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ. 14,453 கோடி கடனாக வழங்கப்பட்டது. 2010 மார்ச் முடிவில் 6.95 மில்லியன் சுய உதவிக் குழுக்கள் வங்கிகளில் சேமிப்பு கணக்கை வைத்திருந்தனர்.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது, வங்கிக் கடன் மற்றும் அரசாங்க மானியம் வழங்கி வருவாய் ஆதாரங்களை பெருக்கி, பயனாளிகளை ஏழ்மை கோட்டிற்கு மேல் முன்னேற்றமடைய செய்வதாகும். NABARD வங்கியின் கணக்கீட்டின்படி 2.2 மில்லியன் சுய உதவிக் குழுக்கள் இந்தியாவில் உள்ளன. அதில் 33 மில்லியன் உறுப்பினர்கள் வங்கி இணைப்புத் திட்டத்தின் கீழ் வங்கிக் கடன் பெற்றுள்ளனர். SHGs வங்கி இணைப்புத் திட்டம் தொடக்கம் முதலே சில மாநிலங்களில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. குறிப்பாக, தென் மாநிலங்களான ஆந்திரபிரதேசம், தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா போன்றவற்றிற்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

வங்கிகள் அதிக நிதியினை திரட்ட சுயஉதவிக் குழுக்கள் உதவின. வங்கிகள் வாகன கடனுக்கான வட்டி வீதத்தை விட சுயஉதவிக் குழுக்கான வட்டி வீதம் அதிகமாக உள்ளது.

NABARD ன் SHG வங்கி இணைப்பு திட்டத்தின்படி உறுப்பினர்கள் கடனை சரியாக திருப்பி செலுத்திய பதிவை வைத்திருக்கும் சுய உதவிக் குழுக்கள் வங்கியில் கடன் பெற இயலும். 2005- 2006 ஆண்டில் தென் மாநிலங்களான ஆந்திரப்பிரதேசம், தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா ஆகியவை வெற்றிகரமாக செயல்பட்டுள்ளன. இம்மாநிலத்தில் 60மூ சுய உதவிக் குழுக்கள் வங்கு இணைப்பு கடன் வசதியை பெற்றுள்ளன. (தருணா மற்றும் யாதவ், 2016)

**சுய உதவிக் குழுக்களின் முக்கிய இயல்புகள்:**

1. சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் பொதுவாக ஒரே மாதிரியான பொருளாதார நிலையில் உள்ளவர்கள். குழுவினரிடையே உள்ள புரிந்துணர்வின் அடிப்படையில் உறுப்பினர்களை சுயமாகத் தெர்ந்தெடுக்கின்றனர்.

2. பெரும்பாலான சுயஉதவிக் குழுக்கள் 10 முதல் 20 பெண் உறுப்பினர்களைக் கொண்டவை.

3. SHGs தமக்கென்று வடிவமைக்கப்பட்டச் சட்டங்களையும், விதிமுறைகளையும் கொண்டுள்ளன. தொடர்ச்சியாக கூட்டம் நடத்துதல் மற்றும் முறையாக பதிவேடுகளைப் பராமரித்தல், சேமிப்பு மற்றும் கடன் வழங்குதல் ஆகிய ஒழுங்கினை அவை கடைபிடிக்கின்றன.

4. SHG– க்கள் முழு பங்கேற்பினை அளித்து, அனைவரும் கலந்தாலோசித்து முடிவெடுப்பதுடன் தங்களை தாங்களே நிர்வகித்துக் கொள்கின்றனர்.

**சிறிய அலகு முன்னேற்றம் மற்றும் மறுநிதியளிக்கும் முகவர் வங்கி** (MUDRA):

இது ஒரு பொதுத்துறை சார்ந்த நிதி நிறுவனம் ஆகும். இது சிறு, குறு நிதி நிறுவனங்களுக்கும், வங்கி சாரா நிதி நிறுவனங்களுக்கும் மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கும் (MSMEs) கடன் வழங்குகிறது. இது ஏப்ரல் 8, 2015 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது.

**முத்ரா வங்கியின் முதன்மை நோக்கங்கள்:**

1. குறுங்கடன் வாங்குபவரையும், பெறுபவரையும் ஒழுங்குபடுத்துதல் மற்றும் குறுங்கடன் வழங்குவதில் நிலைத்த தன்மையை ஏற்படுத்தல்.

2. சிறு தொழில் புரிபவர்கள், சில்லறை வியாபாரிகள், சுய உதவிக்குழுக்கள் மற்றும் தனிநபர்களுக்கு கடன் வழங்கும் சிறு நிதி நிறுவனங்களுக்கு, மேலும் நிதி மற்றும் கடன் வசதியை ஏற்படுத்தி தருதல்.

3. அனைத்து சிறு நிதி வழங்கும் நிறுவனங்களை பதிவு செய்தல் மற்றும் அதன் செயல்பாடுகளை தரம் நிர்ணயம் செய்தல் மற்றும் முறையான ஒப்புதல் வழங்குதல்.

4. சிறு தொழில்களை மேற்கொள்வதற்கு வழங்கப்படும் கடன்களுக்கு உத்திரவாதம் வழங்குவதற்காக கடன் உத்திரவாத திட்டம் (CGS) ஆரம்பித்தல்.

5. கடன் வழங்குதல், கடன் பெறுதல் மற்றும் பகிர்ந்தளிக்கப்படும் மூலதனத்தை மேற்பார்வையிடல் ஆகியவற்றுக்கு பொருத்தமான தொழில்நுட்ப உதவிகளை அறிமுகப்படுத்துதல்.

**ஊரக நலம் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரம்:**

சிறந்த வாழ்வினை வாழ்வதற்கு உடல்நலம் மிக முக்கியம்.

இந்தியாவில் உள்ள பெரும்பான்மையான ஏழை மக்கள் வாழ்வாதாரத்திற்காகவும், உடல் நலத்திற்காகவும், நம்பிக்கையற்றுப் போராடி தோற்று வருகின்றனர். இந்திய ஊரகப் பகுதி மக்கள் பல்வேறு தொற்று நோய்களான பெரியம்மை, காலரா, மலேரியா, டைபாய்டு, டெங்கு, சிக்கன்குன்யா போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். போதிய மருத்துவ வசதியின்மை, அறியாமை மற்றும் ஏழ்மை நிலையே இதற்கு காரணம் ஆகும். தங்கள் மக்களுக்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் வழங்குதலும்,மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதலும் மற்றும் மக்களின் உடல்நலத்தை மேம்படுத்துதலுமே அரசின் முதன்மையான கடமையாகும் என்று இந்திய அரசியலமைப்பு தெளிவாக வலியுறுத்துகிறது.

இந்த அரசியலமைப்பின் வழிகாட்டுதலை நிறைவேற்றுவதற்காக ஊட்டச்சத்தினை மேம்படுத்துவதற்காக பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. இவற்றில், இணை உணவு வழங்கும் திட்டங்களான மதிய உணவு திட்டம், செய்தித்தாள் மற்றும் தொலைக்காட்சி வாயிலாக ஊட்டச்சத்து கல்வி, உணவில் அயோடின் உப்பினை சேர்ப்பதை வலியுறுத்தல் போன்றவை ஆகும். இந்தியாவைவிட இலங்கை உடல்

நலதரத்தில் முன்னேற்றம் அடைந்துள்ளது. இந்தியாவை பொறுத்தவரையில் கேரளா மாநிலம் தமிழ்நாட்டை விட சிறப்பாக உள்ளது.

**தேசிய ஊரக நல அமைப்பு:**

தேசிய ஊரக நல அமைப்பு (NRHM) 12, ஏப்ரல் 2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. நலிவடைந்த ஊரக மக்களுக்காக குறைந்த விலையில் எளிதில் பெறக்கூடிய தரமான ஆரோக்கிய வசதிகளை ஏற்படுத்தி தருவது இதன் நோக்கம். உடல் நலத்தை தீர்மானிக்கும் காரணிகளான குடிநீர், சுகாதாரம், கல்வி, ஊட்டச்சத்து சமூக மற்றும் பாலின சமுத்துவம் சமூகத்தைப் பரவலாக்கப்பட, நல விநியோக முறையை ஏற்படுத்துவதே இந்த அமைப்பின் மிக முக்கியமான நோக்கமாகும்.

இனப்பெருக்கம், தாய்மைப்பேறு, சிசு மற்றும் குழந்தை மற்றும் வளர் இளம் பருவத்தினரின் (RMNCH+A) நலனுக்காக பல்வேறு பணிகளை NRHM மேற்கொள்கிறது. மகப்பேறு மற்றும் குழந்தை நலன் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் வழங்குகிறது.

**ஊரக உள்கட்டமைப்பு:**
**ஊரக வீட்டுவசதி**

வீடு என்பது ஒவ்வொரு குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாகும். சிறந்த வீட்டு வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிக்கும். இப்பொழுது அனைவரும் தனிக் குடும்பமாக வசிக்க முனைவதால் வீட்டுமனை, வீடுகள் பெறுவதில் பிரச்சனைகள் அதிகரிக்கின்றது. வீடுகளை ஏற்படுத்தி தருவது என்பது வீட்டினை வழங்குவது மட்டுமின்றி முறையான குடிநீர் வசதி, நல்ல சுகாதார வசதி, முறைப்படி கழிவுகளை அப்புறப்படுத்தும் வழி வகைகள் போன்றவற்றையும் ஏற்படுத்தித்தருவதாகும்.

மனை பெறுவதில் உள்ள பிரச்சனைகளை தீர்க்க குறைந்த செலவு தொழில்நுட்பத்தில் வீடு கட்டுவது, போதுமான வீட்டுக் கடன் வசதியை ஏற்படுத்தித் தருவது, மற்றும் ஊரக பகுதியிலுள்ள நிலமற்ற தொழிலாளர்களுக்கு வீட்டு மனையை அளிப்பது போன்ற வழிமுறைகளின் மூலம் வீட்டுமனை பெறுவதில் உள்ள பிரச்சனைகளைத் தீர்க்கலாம்.

**ஊரக அங்காடி:**

ஊரகப் பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களை வாங்கவோ அல்லது விற்கவோ ஏற்படுத்தப்பட்ட கட்டமைப்பு ஊரக அங்காடியாகும். நகர்ப்புறம் மற்றும் இதர பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்ட இதர பொருட்கள் ஆகியவற்றை வாங்கவும் ஊரக அங்காடிகள் பயன்படுகின்றன.

விவசாயிகளிடம் பேரம் பேசும் ஆற்றல் குறைவு. இடைத்தரகர்கள், அங்காடி அமைப்பில் காணப்படும் குறைபாடுகள், சேமிப்பு கிடங்கு வசதிகள் பற்றாக்குறை, போக்குவரத்து வசதிகள் குறைவு, பண்டங்களை தரம் பிரித்தல் இன்மை, வேளாண் சார்ந்த தகவல் பற்றாக்குறை மற்றும்

மோசமான அங்காடி அமைப்பு முறைகள் முதலியன ஊரக அங்காடியில் காணப்படும் குறைபாடுகளாகும்.

NSSO புள்ளி விவரத்தின் படி 38 சதவீத குடும்பங்கள் ஓர் அறையையே வீடாகக் கொண்டும் மற்றொரு 36 சதவீத குடும்பங்கள் இரண்டு அறைகள் கொண்ட வீட்டிலும் வாழ்கின்றனர்.

இந்தியாவின் ஊரக சாலை பகுதி 26.50 இலட்சம் கி.மீ ஆகும். இதில் 13.5 சதவீதம் பகுதிகளில் மட்டுமே சாலைகள் போடப்பட்டுள்ளன.

இந்தியாவின் சாலை தொடர்பு வசதி அமைப்புகள் உலகிலேயே பெரிய அமைப்புகளுள் ஒன்றாகும். 1950 – 51ல் 4 இலட்சம் கி.மீட்டர் நீளமாக இருந்த இந்தியச் சாலைகளின் நீளம் தற்போது 2018 – ல் 34 இலட்சம் கி.மீட்டர் ஆகும்.

**ஊரக சாலைகள்:**

போக்குவரத்து முறைகளில் சாலை போக்குவரத்து மிக முக்கிய பங்கு வகிக்கிறது. ஊரக பொருளாதாரத்தில் ஊரக சாலைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஊரக பகுதிகளில் நன்கு அமைக்கப்பட்ட சாலைகள், தொலைதூர கிராமங்களை பிற நகர்புற மையங்களோடு இணைப்பதற்கும், வேளாண் இடுபொருட்களின் போக்குவரத்து செலவைக் குறைப்பதற்கும், ஊரக உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்துவதற்கும் உதவுகின்றன.

ஊரக விவசாயிகளின் உற்பத்தியை நகர்ப்புற அங்காடிகளில் சந்தைப்படுத்துவதற்கும், தொலைதூர அங்காடிகளுக்கு செல்வதற்கும், பிற பணிகளை பயன்படுத்திக் கொள்வதற்கும் உதவுகிறது.

**ஊரக மின்மயமாக்கல்:**

ஊரக மின்மயமாக்குதல் என்பது ஊரக பகுதிகளுக்கு மின் வசதியை ஏற்படுத்தித்தருவதாகும்.

**ஊரக மின்மயமாக்குதலின் முக்கிய நோக்கங்கள்:**

வேளாண் செயல்பாடுகளுக்கு மின் வசதியை அளிப்பதன் மூலம் வேளாண் உற்பத்தித் திறனை பெருக்குவது பயிரிடும் நிலப்பரப்பை அதிகரிப்பது, ஊரக தொழிற்சாலைகளை மேம்படுத்துவது மற்றும் ஊரக பகுதிகளுக்கு மின்வசதியை ஏற்படுத்துதல் ஆகியன ஆகும். வேளாண் உற்பத்தியை அதிகப்படுத்த இந்தியாவின் பல மாநிலங்களில் மின்வசதி இலவசமாக வழங்கப்படுகிறது மற்றும் ஊரக பகுதிகளில் மின் கட்டண வீதம் மிகக் குறைவாக உள்ளது.

2017 மார்ச் முடிவில் இந்தியாவின் 99.25 சதவீதம் கிராமங்கள் முழுமையாக மின் தொடர்பைப் பெற்றிருந்தன. 31.03.2017 ன் படி கீழ்க்கண்ட 20 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் முழுமையான அதாவது 100 சதவீத மின்வசதி அடையப்பட்டுள்ளது அவை சண்டிகர்,

டெல்லி, ஹரியானா, ஹிமாச்சலம் பிரதேசம், பஞ்சாப், ராஜஸ்தான் டாமன் மற்றும் டையூ, தாத்ரா மற்றும் நாகர் ஹவேளி, கோவா, குஜராத், மாஹாராஷ்டிரா, ஆந்திரபிரதேசம். கேரளா, லட்சத்தீவு, புதுச்சேரி, தமிழ்நாடு, தெலுங்கானா, அந்தோமான் நிக்கோபர் தீவுகள், சிக்கிம் மற்றும் திரிபுரா ஆகியவை ஆகும்.

இந்தியாவில் ஊரக பகுதிகளில் மின்மயமாக்கிகளைப் பாதிக்கும் காரணிகள்:

1. **நிதிப் பற்றாக்குறை:**
   மின்சாரம் உற்பத்திக்கும் அதனை விநியோகிப்பதற்கும் அதிக செலவு ஏற்படுகிறது இதற்கான நிதி ஒதுக்கீடு மிகவும் குறைவு.

2. **மாநிலங்களுக்குகிடையேயுள்ள பிரச்சனைகள்:**

   மின் திட்டங்களை நிர்வகிப்பதில் மாநிலங்களுக்குகிடையே பிரச்சனைகள் நிலவுவதால் மின்சார விநியோகம் பாதிக்கப்படுகிறது.

3. **சீரற்ற நிலப்பரப்பு:**
   கிராமப்புற பகுதிகள் சமமற்று இருப்பதால் (குண்டுகள், மலைகள்) முறையான மின் இணைப்பு வழங்வது கடினமாகவும், புதிதாத மின் இணைப்பு கம்பிகள் அமைப்பதற்கு கடினமாகவும் அதிக செலவும் ஆகிறது.

4. **மின் அனுப்புகையில் ஏற்படும் இழப்பு:**
   ஊரக பகுதிகளுக்கு மின் அனுப்புகையில் ஏற்படும் இழப்பானது 25 சதவீதம் ஆகும்.

5. **மின் திருட்டு:**

   வசதி படைத்த மக்கள் முறையற்ற வழிகளில் மின்சாரத்தைப் பயன்படுத்துதல் வேறு பயன்பாட்டுக்கு மாற்றுதல் போன்றவைகள் ஊரக பகுதிகளில் மின்மயமாக்குதலுக்கு தடையாக உள்ளன.

**ஊரக முன்னேற்றத்திற்கான தேவைகள்:**

**ஸ்லேட்டரின் கிராமங்கள்:**
கிரில்பெர்ட் ஸ்லேட்டர் என்பவர் மெட்ராஸ் பல்கலைக்கழகத்தின் முதல் பொருளாதார பேராசிரியர். இவர் தனது மாணவர்களைக் கொண்டு சில கிராமங்களை ஆய்வு செய்தார்.
வடமலைபுரம் (ராமநாதபுரம்), கங்கை கொண்டான் (திருநெல்வேலி), பாலக்குறிச்சி (தஞ்சாவூர்) மற்றும் துசி (வட ஆற்காடு) ஆகிய தமிழ்நாட்டில் உள்ள சில கிராமங்களை ஆய்வு செய்து 1918-ஆம் ஆண்டு சில தென்னிந்திய கிராமங்கள் என்ற புத்தகத்தை வெளியிட்டார். இதனை தொடர்ந்து பல்வேறு ஆராய்ச்சி குழுவினரும் இதனை 1930, 1950 மற்றும் 1960-ஆம் ஆண்டுகளில் ஆய்வு செய்தனர். இதில் இரண்டு கிராமங்கள் மட்டும் 21-ஆம் நூற்றாண்டுக்கு முந்தைய கால கட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டதாகும். இந்த மறு ஆய்வில் முக்கியமான வரலாற்றுப்

பதிவுகள் காணப்படுகின்றன. இந்த கிராமங்களை ஆய்வு செய்யும் பிற ஆராய்ச்சியாளர்களுக்கு வழிகாட்டியாக அமைகிறது. மற்றும் பிற்கால ஆராய்ச்சியாளர்களுக்கு முன்மாதிரியாக விளங்குகிறது. இந்த ஆய்வின் மூலம் ஊரக பகுதிகளில் ஏற்படும் மாற்றங்களை பற்றி நாம் அறிந்து கொள்ளலாம்.

1. ஊரக உண்மை வருமானம் உருவாக்கும் முயற்சிகள் தேவை. வேலைவாய்ப்புகளை உருவாக்கி வருமானம் உண்டாக்குதல், உரக தொழில்மயமாக்குதல், உடல்நல மற்றும் ஊட்டச்சத்து கல்வி வசதி, வீட்டு வசதி மற்றும் பல்வேறு மக்கள் நல பணிகளை மேற்கொள்வதற்கு முயற்சிகள் தேவை.

2. அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக தேவைத் திட்டங்கள் மேம்படுத்துவதற்கு முதலீடுகளை அதிகரிக்க செய்தல் வேண்டும்.

3. தற்போதுள்ள பிரச்சனையை தீர்க்க ஒருங்கிணைக்கப்பட்ட திட்டங்களை தீட்டுவதுடன் அதன் மூலம் நிலையான வளர்ச்சியினை பெறுவதற்கும் வழிவகுக்க வேண்டும்.

4. வளர்ச்சி திட்டங்களை வகுக்கும் போது ஊரக பகுதி மக்களின் பிரச்சனைகளை பற்றி அறிந்த நபர்களையோ அல்லது தலைவர்களையோ மற்றும் தொலை நோக்கு பார்வையுள்ள சிந்தனையாளர்களையோ கலந்தாலோசிக்க வேண்டும்.

---

# 12TH பொருளியல்

# அலகு– 3

# வேலைவாய்ப்பு மற்றும் வருமான கோட்பாடுகள்

**அறிமுகம்:**

பல நாடுகள் பொருளாதாரப் பிரச்சனைகளைச் சந்தித்துள்ளதை பொருளாதார வரலாறு கண்டுள்ளது. பல்வேறு பிரச்சனைகளுள் வேலைவாய்ப்பின்மை என்பது ஒரு அபாயகரமான ஒன்றாக இருக்கிறது. வேலைவாய்ப்புக்கும் வருமானத்திற்கும் உள்ள உறவைத் தொன்மைப் பொருளாதார அறிஞர்களம் J.M. கீன்சும் (J.M. Keynes) விளக்கியுள்ளனர். பிரென்ஞ் பொருளியல் அறிஞரான J.B. சேயின் (Say) சந்தை விதியின் (Law of Markets) மேல் தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் அபாரமான நம்பிக்கை வைத்திருந்தனர். 20 ஆம் நூற்றாண்டில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியவர் J.M. கீன்ஸ்.

**முழு வேலை வாய்ப்பின் பொருள்:**

நல்ல உடல் நலம் உள்ள தனிநபர்கள் மற்றும், நிலவுகின்ற கூலி விகிதத்தில் வேலை செய்யத் தயாராக இருப்பவர்கள் அனைவருக்கும் வேலை கிடைக்கிறதெனில் அதனை முழு வேலை வாய்ப்பு என்கிறோம். அதாவது முழுவேலை நிலை என்பது வேலை செய்ய விருப்பமும் திறமையும் இருப்பவர்களுக்கு கண்டிப்பாக கிடைக்கும் வேலை நிலையை குறிக்கும். கீன்ஸின் கூற்றுபடி முழு வேலைநிலை என்பது விருப்பமில்லா லேலையின்மை (Involuntary Unempolyment) இல்லாமல் இருப்பது ஆகும். உதாரணம்: சில செல்வந்தர்களின் குழந்தைகள் வேலைக்கு செல்ல விரும்புவது இல்லை (Voluntary Unemployment).

லர்னரின் கூற்றுப்படி, முழு வேலை நிலை என்பது “கூலியும் விலையும் எந்த வேலைநிலையில் மாறிமாறி அதிகரிக்கின்றதோ அங்கு முழு வேலைவாய்ப்பு நிலவுகிறது” என்கிறார்.

உலகில் ஒவ்வொரு நாடும் முழு வேலை நிலையை அடைவதை குறிக்கோளாக கொண்டிருக்கின்றன. இதற்காக தங்கள் நாட்டில் இருக்கும் வளங்களை முழுமையாக பயன்படுத்தி உத்தம அளவு உற்பத்தியை அடைய முயல்கின்றன. ஆனால் நடைமுறையில் முழு வேலைவாய்ப்பு என்பது நாட்டின் உழைப்பாளர்களை முழுமையாக பயன்படுவது ஆகும்.

**வேலையின்மையின் வகைககள் (Types of unemployment):**

வேலையின்மை என்பது நல்ல உடல் நலம் உள்ள தனிநபர்கள், நிலவுகின்ற கூலி விகிதத்தில் வேலை செய்யத்தயாராக இருப்பவர்கள் அனைவருக்கும் தகுந்த வேலையில்லாத சூழ்நிலை வேலையின்மை ஆகும்.

இந்தியாவில் வேலையின்மை பிரச்சனையைச் சமாளிக்க கொள்கைகள் உருவாக்கும் போது வேலையின்மையின் வகைகளையும் தன்மைகளையும் அறிய வேண்டும். இந்திய கிராமப்புறங்களில் வேலையின்மையும் குறைவான வேலைவாய்ப்பும் (Underemployment) காணப்படுகின்றன கிராமங்களில் மறைமுக வேலையின்மை மற்றும் பருவகால வேலையின்மை நிலவுகிறது. நகர்புறங்களில் பிறழ்ச்சி வேலையின்மை, அமைப்புசார் வேலையின்மை மற்றும் திறந்த வேலையின்மை நிலவுகிறது. நகர்மயமாதல் காரணமாக கிராமப்புற வேலையாட்கள் நகர்ப்புறங்களை நோக்கி செல்கின்றனர். இவ்வாறு கிராமபுற மக்கள் நகர்ந்து செல்வதால் நகர்புறங்களில் வேலையின்மை அதிகரிக்கிறது.

**வேலையின்மையின் வகைகள்:**

வளர்ந்த நாடுகளில் வேலையின்மை என்பது தற்காலிகமாகவோ அல்லது பிறழ்ச்சியாகவோ இருக்கலாம். ஆனால் வளர்கின்ற நாடுகளில் மூலதன உருவாக்கம் குறைவாக இருப்பதால் அமைப்புசார்ந்த வேலையின்மை அதிகமாக இருக்கும். கீழ்கண்டவை வேலையின்மையின் வகைகள் ஆகும்.




**வாணிபச் சூழல் வேலையின்மை (Cyclical Unemployment):**

கீழ்நோக்கிய பகுதியில் ஒரு பொருளாதாரம் இருக்கும் போது நிகழ்கின்ற வேலையின்மைக்கு சுழல் வேலையின்மை (Cyclical Unemployment) என்று பெயர். வாணிப சூழலின் பின்னிறக்க பகுதியில், உற்பத்தி மற்றும் வருமானம் குறைந்து வேலையின்மை அதிகரிக்கும். இது போதுமான அளவு விளைவுத் தேவை இல்லாத போது நிகழ்வதாகும். அரசு முதலீட்டை அதிகரிப்பதன் மூலமும், விரிவான பணவியல் கொள்கைகளைக் கடைப்பிடித்தும் இந்த சுழல் வேலையின்மையைக் குறைக்கலாம்.

**பருவகால வேலையின்மை (Seasonal Unemployment):**

ஒரு வருடத்தின் சில காலங்களில் மட்டும் நிலவும், வேலையின்மைக்கு பருவகால வேலையின்மை என்று பெயர். விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்கள் (கரும்பு, பருத்தி) போன்றவை குறிப்பிட்ட பருவத்தில் மட்டுமே நடைபெறும். இத்தகைய தொழில்களில் குறிப்பிட்ட காலங்களில் மட்டும்

வேலைவாய்ப்பு இருக்கும். மற்ற பருவங்களில் வேலையிருக்காது. எனவே அவற்றை நம்பி செயல்படும், வேளாண்மை மற்றும் தொழிற்சாலைகளிலும் வேலையின்மை நிலை நிலவும். மக்களின் தேவை கூடுவதாலும் குறைவதாலும் பருவகால வேலையின்மை தோன்றும், உதாரணம், ஐஸ்கீரிம், விடுமுறைகால சுற்றுலாவின் தேவை குறைவதாலும் வேலைவாய்ப்பு குறையலாம்.

## தற்காலிக அல்லது உடன்பாடில்லா (பிறழ்ச்சி) வேலையின்மை (Temporary Unemployment or Frictional unemployment)

உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் தற்காலிக அல்லது பிறழ்ச்சி வேலையின்மை ஏற்படுகிறது. உழைப்பாளர்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம் பெயராமை, திறமை பற்றாக்குறை, இயந்திரங்களில் பழுது ஏற்படுதல், மூலப்பொருட்களின் பற்றாக்குறை போன்ற காரணங்களால் உடன்பாடில்லா (பிறழ்ச்சி) வேலையின்மை ஏற்படுகிறது. வேலையை இழந்து புதிய வேலை தேடும் உழைப்பாளர்களும் இவ்வகையில் அடங்குவர்.

## கற்றோர் வேலையின்மை (Educated Unemployment):

சில நேரங்களில் படித்து கல்வி தகுதி பெற்றவர்களுக்கு வேலைகிடைப்பதும் இல்லை அல்லது பகுதி நேர வேலை செய்கின்றனர். இத்தகைய வேலையின்மைக்கு கற்றோர் வேலையின்மை என்று பெயர். தவறான கல்வி முறை, வேலைக்கான திறன் பற்றாக்குறை அதிக அளவு மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் பட்டங்களை முடித்து வெளிவருதல், இலகுவான வேலையை மட்டுமே விரும்புதல் போன்ற காரணங்களால் பட்டம் பெற்றவர்களின் வேலையின்மை கூடுகிறது.

## தொழில் நுட்ப வேலையின்மை (Technical Unemployment):

புதிய தொழில்நுட்பம் மூலதன செறிவு உடையதாக இருப்பதால், குறைந்த எண்ணிக்கையில் உழைப்பாளர்கள் தேவைப்படுகின்றனர். புதியன கண்டுபிடித்தலும் புதிய கருத்துக்களும் வேலைவாய்ப்பினை உருவாக்கும். ஆனால் உழைப்பை சேமிக்கின்ற புதிய கண்டுபிடிப்புகள் தொழில்நுட்ப வேலையின்மையை உருவாக்கும்.

## அமைப்புசார் வேலையின்மை (Structural Unemployment):

சமூக அமைப்பில் ஏற்படும் பெரிய மாற்றங்களால் அமைப்புசார் வேலையின்மை உருவாகிறது. ஒரு பொருளுக்கான தேவை குறைதல் (Eg. Type Machine, Taperecordeas, Radios, Camera etc) அல்லது பிற பொருள்களின் தேவை அதிகரித்தல் இடு பொருட்கள் இன்மை, முதலீடு பற்றாக்குறை ஆகியவையும் இவ்வகை வேலையின்மைக்கு காரணமாகிறது. உதாரணமாக, கைபேசியின் தேவை அதிகரித்ததால், கேமராவின் தேவை மற்றும் டேப் ரெக்கார்டர்களின் தேவை இருக்கின்றனர்.

## மறைமுக வேலையின்மை: (Disguised Unemployment):

தேவைக்கு அதிகமானவர்கள் ஒரு வேலையில் இருந்தால் அது மறைமுக வேலையின்மையாகும். (உதாரணம் - விவசாயத்துறை). இவ்வேலைகளில் சிலர் வேலையைவிட்டு விலகினாலும். உற்பத்தி பாதிக்காது. உற்பத்தியில் அவர்களின் பங்கு குறைவாக இருக்கும். வேலையில்லாததாலேயே, தெரிந்தும் அதிகமானோர் ஒரு வேலையில் ஈடுபட்டிருப்பார்கள். இத்தகைய வேலையின்மையால் உழைப்பாளரின் இறுதிநிலை உற்பத்திதிறன் பூஜ்யமாகவோ, குறைவாகவோ அல்லது எதிர்மறையாகவோ இருக்கும்.

## வேலைவாய்ப்பு பற்றிய தொன்மைக் கோட்பாடு( Classical Theory of Employment)

வேலை பற்றிய தொன்மைக் கோட்பாடு எந்த ஒரு தனிகோட்பாட்டையும் பெற்று இருக்கவில்லை. நாட்டில் வருமானம் மற்றும் வேலை பற்றி பன்முக பார்வையில் வேலை பற்றிய தொன்மைக் கோட்பாடுகள் இருந்தன. ஆடம் ஸ்மித் என்ற பொருளியல் வல்லுநர் 1776ம் ஆண்டு “நாடுகளின் செல்வம் பற்றிய இயல்பு மற்றும் காரணங்கள் அடங்கிய விசாரணை” என்ற புத்தகத்தை வெளியிட்டார். பின்னர் டேவிட் ரிக்கார்டோ, J.S மில் J.B சே மற்றும் A.C பிகு ஆகியோரால் தொன்மைக் கோட்பாடு வளர்ச்சி பெற்றது.


ஒரு பொருளாதாரம் நீண்டகாலத்தில் பணவீக்கம் இன்றி முழு வேலைநிலையுடன் இயங்கும் என்று தொன்மை பொருளியல் அறிஞர்கள் அனுமானித்தனர். மேலும் பொருளாதாரத்தில் கூலியும் விலையும் நெகிழ்ச்சி உடையதாக இருக்கும் எனவும், சந்தையில் போட்டி நிலவும் எனவும், அரசு தலையிடாக் கொள்கையை (Laissez – faire economy) பின்பற்றும் என்றும் நம்பினர்.

## சேயின் சந்தை விதி (Say's Law of Market):

வேலைவாய்ப்பு பற்றிய தொன்மைக் கோட்பாட்டின் முக்கிய அங்கமாக சேயின் சந்தை விதி திகழ்கிறது. பிரென்சு பொருளியலறிஞரான J.B. சே (1776 – 1832) ஒரு தொழிலதிபர் ஆவர். ஆடம்ஸ்மித் மற்றும் டேவிட் ரிக்கார்டோ போன்றவர்களின் எழுத்துக்களினால் கவரப்பட்டார். J.B. சேயின் கருத்துப்படி, ”அளிப்பு அதன் தேவையை தானே உருவாக்கும்” (Supply Creates its own demand). சேயின் கருத்துப்படி, பொருளாதாரத்தில், நிறுனங்கள் பொருட்களை உற்பத்தி செய்ததற்கு உற்பத்திக்காரணிகளுக்கு ஊதியத்தை அளிக்கப்படுகின்றனது. அந்த ஊதியத்தைக் கொண்டு குடுமபபங்கள், நிறுவனங்கள் செய்த உற்பத்தி செய்த பொருட்கள் மற்றம் பணிகளை வாங்குகின்றன. ஆகவே ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் அதற்கான தேவையை அங்காடி மதிப்பில் தானே உருவாக்கும் என்று J.B. சே கருதினார். ஒரு உழைப்பாளி பெறும் ஊதியத்தை கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை வாங்குவதால், உற்பத்தி செய்த அனைத்தும் விற்கப்பட்டுவிடும் என்று சேயின் சந்தை விதி கூறுகிறது. சேயின் கருத்துப்படி,

ஒரு பொருளாதாரத்தில் மொத்த உற்பத்தியும் மொத்த வருவாயும் சமமாக இருக்கும்.

சுருக்கமாக, வேலைவாய்ப்பு பற்றிய தொன்மைக் கோட்பாட்டின்படி "உற்பத்தியின் மூலம் ஒரு நபர் அவர் வருவாயை ஈட்டுகிறார், அது மற்றவர் உற்பத்தி செய்யும் பண்டங்கள் மற்றும் பணிகளை வாங்குவதற்கு செலவிடப்படுகிறது. நாடு முழுவதிலும் மொத்த உற்பத்தி மொத்த வருவாய்க்கு சமமாக இருக்கும்".




**சேயின் சந்தை விதியின் எடுகோள்கள்**

சேயின் சந்தைவிதி கீழ்கண்ட எடுகோள்களை அடிப்படையாக கொண்டுள்ளது.

1. ஒரு தனி வாங்குவோரோ, விற்பவரோ அல்லது உள்ளீடோ பொருளின் விலையை மாற்ற முடியாது.
2. முழு வேலை நிலை நிலவும்
3. மக்கள் அவர்களின் சுய விருப்பங்களால் உந்தப்படுகிறார்கள். அவர்களின் விருப்பங்கள் பொருளாதார முடிவுகளை நிர்ணயிக்கின்றன.
4. சந்தைச் சக்திகளே அனைத்தையும் நிர்ணயிக்கின்றன. ஒரு பொருளாதாரம் தானே சரிசெய்து கொள்ளும் சூழல் பெற்று முழு வேலைநிலை சமநிலை அடைய அரசின் தலையிடாக் கொள்கை அவசியமாக உள்ளது.
5. உழைப்பு மற்றும் பண்டங்களின் சந்தையில் நிறைவுப்போட்டி நிலவும்
6. கூலி மற்றும் விலையில் நெகிழ்வுத் தன்மை உண்டு
7. பரிவர்த்தனைக்கு மட்டுமே பணம் உதவும்
8. இது நீண்ட கால பகுத்தாய்வை அடிப்படையாக கொண்டது.
9. அதிக உற்பத்திக்கோ வேலையின்மைக்கோ வாய்ப்பில்லை.
10. பயன்படுத்தப்படாத வளங்கள் இருந்தால், முழுவேலைவாய்ப்பு வரை அவற்றை பயன்படுத்துவது இலாபகரமாக இருக்கும். உற்பத்திக்காரணிகள்

அவற்றின் உற்பத்தித் திறனுக்கேற்ப ஊதியம் பெற விருப்பமுடன் இருப்பார்கள் என்ற நிபந்தனை இவ்விதியில் இருக்கும்.

11. விலைக் கருவி தானாக இயங்குவதால் அங்கு அரசின் தலையீடு தேவை இருக்காது.

12. வட்டிவீத நெகிழ்வுத் தன்மை, சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் சமநிலையை உருவாக்கும்.

**சே – விதியின் விளைவுகள்:**

1. அதிக உற்பத்திகோ, வேலையின்மைக்கோ வாய்ப்பில்லை.

2. பயன்படுத்தாத வளங்கள் நாட்டில் இருந்தால், முழுவேலை வாய்ப்பு வரை அவற்றை பயன்படுத்துவது இலாபகரமாக இருக்கும். உற்பத்தி காரணிகள் அதன் உற்பத்தி திறனுக்கு இணையாகும் வரை ஏற்றும் கொள்ளும்.

3. விலைக் கருவிதானாக இயங்குவதால் அங்கு அரசின் தலையீடு தேவை இருக்காது.

4. வட்டி வீத நெகிழ்வுத்தன்மை, சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் சமநிலையை உருவாக்கும்.

5. பரிவர்த்தனைக்கு மட்டுமே பணம் செயல்படும். பணத்தை மக்கள் கையிருப்பாக வைத்திருக்க மாட்டார்கள்.

**சேயின் விதி பற்றிய திறனாய்வு (Criticism of Say's Law):**

கீழ்கண்டவை J.B. சேயின் சந்தை விதியின் திறனாய்வு ஆகும்.

1. கீன்ஸின் கருத்துப்படி, அளிப்பு அதற்கான தேவையை உருவாக்காது. உற்பத்தி அதிகரிக்கும் அளவிற்கு தேவை அதிகரிக்காவிட்டால் இந்த விதி செயல்படாது.

2. பொருளாதாரத்தில் தானாக சரி செய்து கொள்ளும் அமைப்பு வேலையின்மையைக் குறைக்காது. மூலதனவிகிதத்தை அதிகரித்து வேலையின்மையைக் குறைக்கலாம்.

3. தனிநபர்கள் எதிர்பாராத சூழ்நிலைகளக்காகவும், வியாபாரிகள் எதிர்கால நடவடிக்கைகளுக்காகவும் பணத்தை இருப்பாக வைத்திருப்பார்கள். ஆகவே பணம் நடுநிலையாக இருக்காது.

4. சேயின் சந்தை விதி, அளிப்பு தன் தேவை தானே உருவாக்கும் என்ற அடிப்படையில் செயல்படுவதால், அதிக உற்பத்திக்கு வாய்ப்பு இல்லை என்று கூறுகிறது. ஆனால் கீன்ஸீன் கூற்றுப்படி அளவுக்கு அதிகமான உற்பத்திக்கு வாய்ப்பு உள்ளது.

5. முதலாளித்துவ நாடுகளில் குறைவான வேலை (Underemployment) உள்ளதால், முழு வேலை வாய்ப்புக்குச் சாத்தியமில்லை என கீன்ஸ் கூறுகிறார்.

6. அளவுக்கு அதிகமான உற்பத்தியும், அதிக வேலையின்மையும். பல முதலாளித்துவ நாடுகளில் காணப்படுவதால் அரசுத் தலையீடு அவசியம் எனக் கீன்ஸ் கருதுகிறார்.

## வேலை வாய்ப்பு மற்றும் வருமானம் பற்றிய கீன்ஸின் கோட்பாடு (Keynes' Theory of Employment and Income):

நவீனப் பொருளாதாரக் கோட்பாடுகளின் வளர்ச்சியில், கீன்ஸ் எழுதிய புத்தகமான "வேலைவாய்ப்பு, வட்டி மற்றும் பணம் பற்றிய பொதுகோட்பாடு"

ஒரு திருப்புமுனையாக இருக்கிறது. அதிக தாக்கத்தை ஏற்படுத்திய இந்த நூல் 1936ல் வெளியிடப்பட்டது. தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் ஒரு முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் சந்தை சக்திகளே மாற்றங்களை ஏற்படுத்தி சமநிலையை உருவாக்கும் என நம்பினர். இதற்கு எதிர்மாறான கருத்தை கீன்ஸ் கொண்டிருந்தார். எனவே அதில் உள்ள குறைகளை களைய தன்னுடைய புதிய வேலைவாய்ப்பு கோட்பாட்டை உருவாக்கினார்.

J.M. கீன்ஸ் 20 ஆம் நூற்றாண்டில் ஒரு தாக்கத்தை உருவாக்கிய ஒரு பொருளியல் அறிஞர். 1883 ல் இவர் பிறந்தார். அவர் பொருளாதார அறிஞராகப் பணியாற்றினார். அத்துடன் ஒரு குடிமைப் பணியாளராகவும் (Civil Servant), Bank of England ல்இயக்குநராகவும் மாநாட்டில் ஒரு முடிவை எடுப்பதற்கான ஒரு குழுவுக்குத் தலைவராகவும் இருந்தார்.

அவருடைய கருத்தின் அடிப்படையில் அமைந்த பொருளாதாரக் கருத்துக்கள் கீன்ஸியன் பொருளாதாரம் என அழைக்கப்படுகின்றன. இன்றைய காலகட்டத்திலும் அதிக தாக்கத்தை பேரியல் பொருளியலில் ஏற்படுத்துகிறது.

கீன்ஸின் கோட்பாடு, முழுவேலைவாய்ப்பு கருத்தை மட்டும் விளக்காமல், குறைந்த வேலை நிலைக்கும் (Underemployment) வாய்ப்பு இருப்பதை சுட்டிக்காட்டுகிறது. கீன்ஸின் கோட்பாடு ஒரு பொதுக்கோட்பாடாகவே திகழ்ந்தது. இது எல்லாவகைச் சூழ்நிலைகளுக்கும் பொருந்துவதாக இருக்கிறது.

கீன்ஸின் கருத்துக்கள் குறுகிய காலத்தை அடிப்படையாக கொண்டு இருந்தன. அவரது கருத்துப்படி, வேலை வாய்ப்பின் அளவு நிர்ணயிக்கப்படும் போது உற்பத்திக் காரணிகளான மூலதனம்,உழைப்பு, திறன், தொழில்நுட்பம் ஆகியவை மாறாமலேயே இருக்கும்.

## விளைவுத் தேவை (Effective Demand):

வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் பற்றிய கீன்ஸ் கோட்பாட்டின் ஆரம்பப் புள்ளியே "விளைவுத் தேவை" கருத்தாகும். விளைவுத்தேவை என்பது உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மீது உண்மையிலேயே செலவு செய்கிற பணத்தின் அளவு ஆகும். தொழில் முயல்வோர்கள், வட்டி, வாடகை, கூலி மற்றும் இலாபம்

போன்றவற்றை பணமாகவே கொடுப்பார்கள் எனவே விளைவுத் தேவை தேசிய வருவாய்க்குச் சமமாக இருக்கும்.

மொத்த விளைவுத் தேவை (Aggregate effective demand) அதிகரிக்கும் போது வேலை வாய்ப்பின் அளவிலும் ஏற்றம் வரும். மொத்த விளைவுத் தேவை குறையும் போது வேலையின்மை சிக்கல் தோன்றும். ஆகவே நாட்டின் மொத்த வேலை வாய்ப்பு, தொகு தேவையின் உதவியுடன் தீர்மானிக்கப்படுகிறது.

கீன்ஸின் வேலைவாய்ப்பு கோட்பாட்டின்படி, பொருட்கள் மற்றும் பணிகளின் நுகர்வு மற்றும் மூலதனத்திற்காக செலவு செய்யப்பட்ட பணமே விளைவுத் தேவை ஆகும். எனவே மொத்தச் செலவு, தேசிய உற்பத்திக்கும், தேசிய வருவாய்க்கும் சமமாக இருக்கும். ஒரு நாட்டில் உற்பத்திக்கும் வேலைவாய்ப்பிற்கும் இடையே உள்ள தொடர்பு விளைவு தேவையின் அளவைப் பொறுத்து அமைகிறது. விளைவுத் தேவையின் அளவு தொகு அளிப்பையும் தொகு தேவையையும் சார்ந்து உள்ளது.

ED = Y = C + 1 = வெளியீடு = வேலைவாய்ப்பு

”விளைவுத் தேவை” ஒரு பொருளதாரத்தின் வேலைநிலையை நிர்ணயிக்கிறது. விளைவுத் தேவை அதிகரிக்கும் போது, வேலைவாய்ப்பும் அதிகரிக்கும். மாறாக, விளைவுத்தேவை குறைந்தால் வேலைவாய்ப்பும் குறையும். நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவு ஆகிய இரண்டு காரணிகளும் விளைவுத் தேவையின் அளவை நிர்ணயிக்கின்றன. தொகுத் தேவையில், நுகர்வுச் சார்பை மக்களின் வருமானமும் இறுதிநிலை நுகர்வு விருப்பமும் (Marginal Propensity to Consume: MPC) நிர்ணயிக்கின்றன. கீன்ஸின் கூற்றுப்படி, வருமானம் கூடினால் நுகர்வும் கூடும். ஆனால் வருமானம் கூடுகின்ற அதே விகிதத்தில் நுகர்வு விகிதம் அதிகரிக்காது.

முதலீட்டு அளவை, வட்டிவீதம் மற்றும் மூலதனத்தின் இறுதிநிலை ஆக்க திறன் (Marginal Efficiency of Capital : MEC) ஆகிய இருகாரணிகளும் நிர்ணயிக்கின்றன. வட்டி வீதமானது, பண அளிப்பு மற்றும் பணத்தின் ரொக்க இருப்பு விருப்பம் ஆகிய இரண்டையும் சார்ந்துள்ளது. ரொக்க இருப்பு விருப்பத்திற்கு கீன்ஸ் அதிக முக்கியத்துவம் அளித்துள்ளார்.

ரொக்க இருப்பு விருப்பம் மூன்று நோக்கங்களை அடிப்படையாக கொண்டுள்ளது. அவை: பேரநோக்கம், முன்னெச்சரிக்கை நோக்கம் மற்றும் ஊக நோக்கம் ஆகும். மூலதன சொத்திலிருந்து கிடைக்கின்ற வருமானம் மற்றும் மூலதனத்தின் அளிப்பு விலை ஆகிய இரண்டு காரணிகளையும் MEC சார்ந்து உள்ளது.

## தொகு தேவைச் சார்பு (Aggregate Demand Function: ADF):

கீன்ஸ் கோட்பாட்டின் படி, ஒரு பொருளாதாரத்தின் தொகு தேவை தான் உற்பத்தியை நிர்ணயிக்கிறது. உழைப்பாளர்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பதால் எவ்வளவு வருவாய் கிடைக்கும் என்று தொழில் முனைவோர்கள் எதிர்பார்க்கிறார்களோ அதுவே மொத்த தேவை. அதாவது, வேறுபட்ட வேலை நிலையில் உற்பத்தி செய்ததை விற்பனை

செய்வதன் மூலம் கிடைக்கும் வருவாய் அல்லது எதிர்பார்க்கும் வருவாய் எனலாம்.

தொகுத் தேவை கீழ்க்காணும் நான்கு பகுதிகளைக் கொண்டது.

1. நுகர்வுத் தேவை
2. முதலீட்டுத் தேவை
3. அரசுச் செலவு
4. நிகர ஏற்றுமதி (Export – Import)

விரும்புகிற அல்லது திட்டமிடுகிற தேவை (செலவு) என்பது குடும்பங்கள், நிறுவனங்கள், அரசு மற்றும் வெளிநாட்டிலிருந்து வாங்குவோர் (ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கு இடையே உள்ள வித்தியாசம்) ஆகியோர் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை வாங்குவதற்காக செய்கின்ற செலவு தொகையாகும். விரும்புகிற செலவு என்பது மொத்தச் செலவு (தேவை) என்றும் அழைக்கப்படுகிறது. இதனை கீழ்கண்ட வாய்ப்பாட்டின் மூலம் குறிப்பிடலாம்.

$$AD = C + I + G + (X - M)$$

கீழ்கண்ட தொகுத் தேவைக்கும், வேலைவாய்ப்புக்கும் உள்ள தொடர்பை காட்டுகிறது.

வேலைவாய்ப்பு அதிகரித்தல் மற்றும் குறைதல் ஆகியவற்றிற்கு ஏற்ப மொத்த தேவை கூடும் அல்லது குறையும். வரைபடத்தில் முதலில் மொத்த தேவை வளைகோடு அதிகரிக்கும் விகிதத்தில் அதிகரிக்கின்றது. பின்பு இவ்வளைகோடு குறையும் விகிதத்தில் அதிகரிக்கிறது. அதாவது வேலைவாய்ப்பு அதிகரித்தால் வருமானம் அதிகரிக்கும். ஆனால் வருமானம் அதிகரித்த வீதத்தில் பொருளாதாரத்தில் செலவு அதிகரிப்பது இல்லை. மாறாக, குறைந்த விகிதத்தில் அதிகரிக்கிறது என்பதை வரைபடம் விளக்குகிறது.

**தொகு அளிப்புச் சார்ப்பு (Aggregate Supply Function: ASF) :**

தொகு அளிப்புச் சார்பு என்பது அதிகரிக்கும் வேலைவாய்ப்பை குறிப்பிடுகிறது. ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் தொகுமதிப்பே தொகு அளிப்பு எனப்படும். எனவே தொக அளிப்பு என்பது தேசிய உற்பத்தியின் மதிப்பு அல்லது தேசிய வருமானத்திற்குச் சமமாக இருக்கும். தொகு அளிப்புச் சார்பு வேலைவாய்ப்பு அளவோடு சேர்ந்து அதிகரிக்கும்.

தொகு அளிப்பு என்பது தேவையான உற்பத்தியை நாட்டில் அதிகரிப்பதற்கு பயன்படுத்தப்படும் தேவையான உழைப்பாளர்கள் எண்ணிக்கை மற்றும் பிற பொருட்கள் பயன்படுத்துவதை குறிக்கும். உற்பத்திக்காக முதலாளிகள், உழைப்பாளர்கள் இடு பொருட்கள் போன்ற பலவற்றை விலைகொடுத்து வேலைக்கு அமர்த்துவார்கள். ஆகவே உற்பத்தியில் செலவும் அடங்கும். ஒரு குறிப்பிட்ட இடத்தில், நிறுவனத்தின் உற்பத்திச் செலவைவிட,சரக்குகளை விற்பதால் கிடைக்கும் வருவாய் அதிகமாக இருந்தால், நிறுவனங்கள், மேலும் அதிகமான உழைப்பாளர்களையும் மற்ற இடுபொருள்களையும் வாங்குவதற்கு முனைவார்கள்.

தொகு அளிப்பு விலை என்பது ஒரு குறிப்பிட்ட அளவு உழைப்பையும் இடுபொருட்களையும் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்ற பிறகு கிடைக்கும், "எதிர்பார்க்கப்படும் (வருமானம்) மொத்த தொகை" ஆகும். இங்கு "விலை" என்பது விற்பனையால் கிடைத்த வருவாயை குறிப்பிடுகிறது.

**தொகு அளிப்பின் கூறுகள்:**

1. மொத்த (விரும்பப்படுகிற) நுகர்வுச் செலவு (C)

2. மொத்த (விரும்பப்படுகிற) தனியார் சேமிப்பு (S)

3. நிகர வரி வசூல் (T). அரசு பெற்ற மொத்த வரிவருமானத்தில் இருந்து மாற்றுச் செலுத்தல்கள் (Transfer Payments), ஓய்வூதியம், மானியம், அரசு செலுத்தவேண்டிய வட்டி ஆகியற்றைக் கழித்த பிறகு கிடைக்கும் தொகையாகும். மற்றும்

4. தனிநபர் (விரும்பப்படுகிற) வெளிநாட்டவர்க்கு (உறவினர் மற்றும் நண்பர்கள்) கொடுக்கின்ற மாற்று செலுத்துதல்கள் மற்றும் உதவித் தொகை. இது $R_f$(வெளிநாட்டிற்கு வழங்கிய நிவாரண தொகை) என குறிக்கப்படுகிறது.

மொத்த அளிப்பு $= C + S + T + R_1$

ஆக, ஒரு பொருளாதாரத்தில் உருவாக்கப்பட்ட மொத்த வருமானம்.

கீழ்கண்ட வரைபடம், தொகு அளிப்பை கோட்டை விளக்குகிறது. வரைபடத்தில், நிலையான பணக்கூலி மற்றும் மாறும் கூலி நிலவும் என்ற எடுகோளை அடிப்படையாகக் கொண்டு இரண்டு அளிப்புக் கோடுகள் வரையப்பட்டுள்ளன.

வரைபடம் வேலைவாய்பபுக்கும், எதிர்பார்க்கும் வருமானத்திற்கும் உள்ள தொடர்பை விளக்குகிறது. பூஜ்ஜியத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட Z நேர்கோடு என்பது பணக்கூலி மாறாமல் இருக்கும் போது உள்ள நிலையையும் மற்றொன்று ($Z_1$) வேலைவாய்ப்பைப் பொறுத்து பணக்கூலி மாறும்போது உள்ள நிலையையும் விளக்குகின்றன. Z கோடு குறிப்பிட்ட நிலைக்கு பிறகு வளைகோடாகவும் இருக்கிறது $ON_f$ அளவில் பொருளாதாரம் முழுவேலை நிலையை அடைகிறது.

அதற்குப் பின்பு உழைப்பினை அதிகப்படுத்தி உற்பத்தியை அதிகப்படுத்த இயலாது. எனவே,$N_1$ க்குப் பின்னர், தொகு அளிப்புக்கோடு செங்குத்தாக, நெகிழ்வற்றதாக உள்ளது.

தொகு அளிப்பு கோட்டின் சாய்வு (Slope) என்பது வேலைவாய்ப்புக்கும் உற்பத்தித் திறனுக்கும் இடையே உள்ள தொடர்பைச் சார்ந்து அமைந்துள்ளது. மூலதன இருப்பு மாறாமல் இருக்கும்போது அதிக உழைப்பாளர்களை பணியிலமர்த்துவதால் குறைந்துசெல் இறுதிநிலை விளைவு செயல்படுகிறது. பொதுவாக தொகு அளிப்பு வளைகோடு $Z_1$இறுதிநிலை விளைவு செயல்படுகிறது. பொதுவாக தொகு அளிப்பு வளைகோடு $Z_1$போன்று இருக்கும். ஆகவே விலைக்கும் கூலிக்கும் உள்ள தொடர்பை சார்ந்துதான் தொகு அளிப்பு

இருக்கும். பொருளின் விலை அதிகமாக இருந்த கூலிகுறைவாக இருந்தால், உற்பத்தியாளர்கள் கூடுதாலாக உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவார்கள். மாறாக பொருட்களின் விலை குறைவாக இருந்து கூலி அதிகமானால், முதலீடு குறையும். இதனால் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனும் குறையும். எனவே பொருளாதார நடவடிக்கையை தீர்மானிக்கும் காரணிகளில் தொகு அளிப்பு முக்கியப்பங்கு வகிக்கிறது.

## ADFமற்றும் ASF– ன் சமநிலை (Equilibrium between ADF and ASF):

கீன்ஸின் வேலைவாய்ப்பு கோட்பாட்டில்,ADF மற்றும் ASF சமநிலையை விளக்க, குடும்பங்களை மற்றும் வியாபாரம் ஆகிய இரு துறைகள் எடுத்துக் கொள்ளப்படுகிறது. நுகர்வு செலவு தொடர்பான முடிவுகளை குடும்பங்களும், முதலீடு தொடர்பான முடிவுகளை வியாபார நிறுவனங்களும் எடுக்கின்றன. மேலும் நுகர்வுச் சார்பு நேர்கோடு ஆகவும், முதலீடு தன்னிச்சையானது (Autonomous) எனவும் கீன்ஸின் கோட்பாடு அனுமானிக்கிறது.

கீன்ஸின் கோட்பாட்டில் வருமான சமநிலையை நிர்ணயிக்க இரு அணுகுமுறைகள் பயன்படுத்துதப்படுகின்றன. அவை:

1. தொகுத் தேவை மற்றும் தொகு அளிப்பு அணுகுமுறை
2. சேமிப்பு மற்றும் முதலீடு அணுகுமுறை

இந்த அத்தியாயத்தில் மொத்த தேவை மற்றும் மொத்த அளிப்பு அணுகுமுறை மட்டும் விளக்கப்பட்டுள்ளது.

விளைவு வேவை கருத்து தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. தொகுத் தேவை மற்றும் தொகு அளிப்பு “E“ என்ற புள்ளியில் சமநிலை அடைகிறது. இப்புள்ளியில் வேலை வாய்ப்பு $N_o$ ஆக இருக்கும். $ON_1$ அளவு வேலைவாய்ப்பில், தொகு அளிப்பு $N_1R_1$ ஆக இருக்கும். ஆனால் $M_1N_1$ அளவு உற்பத்தி செய்ய உற்பத்தியாளர்களால் முடியும். எதிர்பார்க்கும் இலாபத்தை அடைய வேண்டிய உற்பத்தியின் அளவு ஆகும். இந்த இலாப நிலையில் முதலாளி அதிக உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவர். சமநிலை “E“ என்ற புள்ளியை அடைந்தபிறகு உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவதை நிறுத்துவர். ஏனெனில் $N_o$ நிலைக்கு பிறகு வேலைவாய்ப்பு அதிகரித்தால் தொகுதி தேவை, தொகு அளிப்பைவிட குறைவாக இருக்கும். எனவே முதலாளித்துவ பொருளாதாரம் அல்லது திறந்த வெளிசந்தை பொருளாதாரத்தில் (கீன்ஸ் கோட்பாட்டின்படி) உற்பத்தி சமநிலையை தீர்மானிப்பத்தில் தொகுத் தேவை கருத்து அதிக முக்கியத்துவம் வகிக்கிறது.

கீன்ஸின் வேலைவாய்ப்பு கோட்பாட்டின் மைய கருத்து என்னவெனில், சமநிலை வேலைவாய்ப்பு என்பது ஒரு நாட்டின் பொருளாதாரம் முழுவேலை நிலையில் இருக்க வேண்டும் என்பதில்லை. வரைபடத்தில் $N_o$ மற்றும் $N_f$ க்கும் இடையே உள்ள வித்தியாசம் வேலையின்மையை காட்டுகிறது. ஆகவே வேலை சமநிலையை விளக்குவதில் விளைவுத்தேவை கருத்துமுக்கியப்பங்கு வகிக்கிறது.

## தொன்மையியம் மற்றும் கீன்ஸியம் - ஓர் ஒப்பிடு (Comparison of Classicism and Keynesianism):

| வரிசை எண் | கீன்ஸியம் | தொன்மையியம் |
|---|---|---|
| 1. | குறுகிய காலச் சமநிலை | நீண்ட காலச் சமநிலை |
| 2. | சேமிப்பு கெடுதல் | சேமிப்பு நல்லது |
| 3. | பணத்தின் பணி என்பது ஒருபுறம் பரிமாற்றத்திற்கு உதவவும், மறுபுறம் சேமிக்க கூடியதாகவும் செயல்படும் | பரிவர்த்தனைக்குத் மட்டுமே பணம் உதவும் |
| 4. | நாட்டின் பிரச்சனைகளை தாக்க பேரியல் அணுகுமுறை தேவை | நுண்ணின அடிப்படையில் பெரிய சிக்கல்களுக்கு தீர்வு காணுதல் அணுகுமுறை |
| 5. | அரசுத்தலையீடு அனுமதிக்கப்படுகிறது. | தலையிடாக் கொள்ளை வலியுறுத்தப்படுகிறது. |
| 6. | எல்லா சூழ்நிலைக்கும் முழு வேலைவாய்ப்பு மற்றும் குறைமுழு வேலை வாய்ப்பு பொருத்தமானது | முழு வேலை வாய்ப்புச் சூழலுக்கு மட்டுமே பொருந்தக் கூடியது |
| 7. | முரண்பாடுகளைக் கொண்டது முதலாளித்துவம் | முதலாளித்துவம் சரியானது |
| 8. | பொருளாதாரத்தின் தேவைக்கு ஏற்ப வரவு – செலவு அறிக்கையை மாற்றிக் கொள்ளலாம் | சமநிலை வரவு – செலவு அறிக்கை ஆதரிக்கப்படுகிறது. |
| 9. | வருமான மாற்றம் மூலம் சேமிப்பு – முதலீடு சமநிலை முன் வைக்கப்படுகிறது. | வட்டிவீத மாற்றம் மூலம் சேமிப்பு முதலீடு சமத்துவம் முன் வைக்கப்படுகிறது |
| 10. | பணத்திற்கான தேவை மற்றும் அளிப்பே வட்டி வீதத்தை நிர்ணயிக்கிறது. | சேமிப்பு மற்றும் முதலீடு ஆகிய இரண்டும் வட்டி வீதத்தை நிர்ணயிக்கிறது. |
| 11. | வட்டி வீதம் மாறிக்கொண்டே உள்ளது (Flow) | வட்டி வீதம் மாறாதது (Stock) |
| 12. | தேவையே அதன் அளிப்பை உருவாக்குகிறது | அளிப்பு தன் தேவையை தானே உருவாக்குகிறது |
| 13. | வட்டி என்பது ரொக்க இருப்பை விட்டுக் கொடுப்பதற்கான வெகுமதி | வட்டி என்பது சேமிப்பிற்கான வெகுமதி |

### தொகுப்புரை:

தொன்மைப் பொருளியல் கோட்பாட்டுக்கு கீன்ஸ் மறுப்புரை வழங்கினார். அவர் அரசுத் தலையீடு அவசியமென்று தன் கோட்பாட்டில் விளக்கியுள்ளார். இரண்டாம் உலகப்போருக்குப் பின் பல நாடுகள் அவரின் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருகின்றன.

# அத்தியாயம் - 10
# சுற்றுச்சூழல் பொருளியல்

**அறிமுகம்:**

சுற்றுச்சூழல் பொருளியல் என்பது மனிதனின் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் இயற்கைச்சூழலுக்கும் இடையோன தொடர்பினைபற்றி படிக்கும் ஒரு இயல் ஆகும். இயற்கை வளங்களை உயர்திறனுடன் பங்கீடு செய்வது தொடர்பான பொருளியலின் ஒரு பகுதியே சுற்றுச்சூழல் பொருளியல். பொருளாதார நடவடிக்கைகளுக்கான நேரடி மதிப்பினையும், இடுபொருட்களையும் சுற்றுச்சூழல் வழங்குவதால் அவைகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவைகளாகும்.

இயற்கை வள மதிப்பீடு, பாதுகாப்பு, மாசுக் கட்டுப்பாடு, கழிவுகள் மேலாண்மை மற்றும் மறுசுழற்சி, நீடித்த வளர்ச்சி ஆகியவற்றினை உள்ளடக்கியது சுற்றுச்சூழல் பொருளியல், எந்த வகையான வளங்களாக இருந்தாலும் அவைகள் மிகச் சிறந்த முறையில் பயன்படுத்தினால்தான் அவற்றிலிருந்து கிடைக்கும் பயன் சிறந்ததாக இருக்கும். அவ்வகையில், இயற்கை வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்தி பயன்களைப் பெறுவதைபற்றி அறியும் ஒரு இயலாகும்.

சுற்றுச்சூழல் பொருளியலின் முக்கிய குறிக்கோள் இயற்கை வளங்களை மிகச்சிறந்த முறையில் பங்கீடு செய்வதற்கான கருவிகளையும், கொள்கைகளையும் கண்டறிந்து அவ்வளங்களை நோக்கி சந்தையினை திரும்ப வைப்பது ஆகும்.

**சுற்றுச்சூழல் என்பதன் பொருள்:**

சுற்றியிருப்பவைகள் என்ற பொருள்படும் எனும் பிரஞ்ச் சொல்லிருந்து தோன்றியது சுற்றுச்சூழல். சுற்றுச்சூழல் என்பது, நம்மை சுற்றியுள்ள அனைத்து நிலைமைகள், சூழ்நிலைகள், உயிர்கள் அல்லது உயிர் தொகுப்பு ஆகியவைகளை குறிப்பிடுவது ஆகும். மேலும் இது, இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் காரணிகளை உள்ளடக்கிய உயிர்தொகுப்பு அல்லது உயிர்சூழல் சமூக அமைப்பினை தீர்மானிப்பதும், உயிர்வாழ்வதும் ஆகும்.

**சுற்றுச் சூழல் பொருளாதாரம் என்பதன் பொருள்:**

சுற்றுச் சூழல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளின் மதிப்புகளின் அடிப்படையில் தேர்வு செய்வதால் இது பொருளியியலில் வேறுபட்ட பிரிவாகும். செலவுகள் மற்றும் நன்மைகளைக் கணக்கிலெடுத்துக்கொண்டு பொருளாதார நடவடிக்கைகளையும் சுற்றுச் சூழலையும் சமன்செய்வதே இதன் நோக்கமாகும்.

சுருங்கக் கூறினால் சுற்றுப்புறச் சூழலின் பிரச்சனைகள் மற்றும் கொள்கைகளின் நிதித்தாக்கத்தைப் பற்றி ஆராயும் பொருளியலின் ஒரு பகுதியே சுற்றுச்சூழல் பொருளாதாரம் எனப்படும்.

## சூழல் அமைப்பு (Ecosystem):

ஒரு குறிப்பிட்ட பகுதியில் இருக்கும் உயிரினங்கள் மற்றும் உயிரற்றவைகள் (தட்பவெப்ப நிலை, பூமி, மண், வளிமண்டலம், பருவநிலை) ஆகியவற்றிற்கிடையேயான தொடர்பே சூழல் அமைப்பு எனப்படுகிறது. சூழல் அமைப்பு உயிர்க்கோளத்தின் அடிப்படையாகும். மேலும் அதுவே பூமியின் நலத்தை தீர்மானிப்பதாகும். சுருக்கமாக கூறின் உயிர்ச் சமூகமும், உயிரற்றவைகளும் கொண்டுள்ள தொடர்பே சூழல் அமைப்பு எனப்படுகிறது.

## பொருளாதாரத்திற்கும் சுற்றுச்சூழலுக்கமான இணைப்பு:

சமூக, அரசியல், அறவியல், தத்துவ மற்றும் பொருளாதார அமைப்பு முறைகள் மனித வாழ்வினை தீர்மானிக்கிறது என்பது நம்மில் பலருக்கு தெரிந்திருக்கும். மனிதன் தனது வாழ்வாதாரத்திற்காக இயற்கையிலுள்ள மற்ற உயிரினங்களுடனும், உயிரற்ற பொருட்களுடனும் இணைந்துள்ளதால், அவனது வாழ்க்கை முறையை சுற்றுச்சூழலே பெருமளவுக்கு தீர்மானிக்கிறது. பொருளாதாரத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையேயான தொடர்பினை விளக்க ஆலன் நீஸ் மற்றும் R.V. அய்யர்ஸ் ”பொருள்சார் சமநிலை அணுகுமுறை” (Material Balance Approach) வகுத்தளித்துள்ளனர்.

இந்த மாதிரியில் மொத்த பொருளியியல் செயல்பாடுகள் உள்ளீடு, வெளியீடு ஆகியவற்றிற்கிடையே சமமான ஓட்டமாக உள்ளது என்று கருதப்பட்டுள்ளது. உள்ளீடுகளில் உள்ள திறன் சுற்றுப்புறச் சூழலிலிருந்து பெறப்படுகின்றது. பொருளாதாரத்திற்கும் சுற்றுப்புறச் சுழலுக்கும் உள்ள தொடர்பு வரைபடங்கள் மூலம் விளக்கப்படுகின்றது.

சுற்றுச்சூழலுக்கும் பொருளாதாரத்திற்குமான இணைப்பினை நாம் அறிவியல் விதி கொண்டு விளங்கிக்கொள்ளலாம். ”உற்பத்தி முறைக்குள் உள்நுழையும் எந்தவொன்றும் பிறகு வெளியேறித்தான் ஆகவேண்டும்” (What goes in must come out) என்பதனை வலியுறுத்துகிறது இயற்பியலின் பொருள் மற்றும் ஆற்றல் பாதுகாப்பிற்கான வெப்ப இயக்கவியல் முதல்விதி (First law of Thermodyanmics). இவ்விவிதியை ஆதாரமாகக் கொண்டு சுற்றுச்சூழலுக்கும் பொருளாதாரத்திற்குமான தொடர்பினை விளக்குவதுதான் மேற்சொன்ன பொருள்சார் சமநிலை அணுகுமுறையாகும். சுழல் விளக்கப்படத்தில் கொடுக்கப்பட்டுள்ளதைப் போல் அனைத்துவிதமான உற்பத்திக்கும் ஆதாரம் இயற்கையே ஆகும். இயற்கை சூழலிருந்து எடுக்கப்படும் மூலப்பொருட்கள் உள்வருவதும், அவைகள் உற்பத்தி செய்யப்பட்டு நுகர்ச்சித் துறைக்கு செல்வதும், உற்பத்தி மற்றும் நுகர்ச்சித்துறையின் கழிவுகள் மறுசுழற்ச்சி செய்யப்பட்டு மீளவும் பொருட்களாக்கப்படுவதும் நடக்கின்றன. நுகர்ச்சியிலிருந்தும், உற்பத்தியிலிருந்தும் வெளியேறும் இறுதிக்கழிவுகள் இயற்கை சூழலிலேயே கலக்கவிடப்படுகின்றன. ஆனால், முழுமையான மறுசுழற்ச்சியும் முறையற்ற இறுதிக்கழிவுகள் வெளியேற்றமும் இயற்கை சூழலை பொரிதும் பாதிக்கும். மீண்டும் அங்கிருந்து உற்பத்திக்காக நாம் எடுக்கும் மூலப்பொருட்களின் தரம் குறையும், உற்பத்தி செலவு அதிகரிக்கவும் வழிவகுக்கும்.

$$M = G - R_C - R_P + R^r{}_p + R^r{}_c = R^d{}_c + R^d{}_c$$

| | | | | |
|---|---|---|---|---|
| இயற்கை உலகிலிருந்து பெறப்படும் மூலப்பொருட்களும் சக்தியும் (M) | = | பொருளாதார நடவடிக்கைகள் உற்பத்தியில் பணிகளும் (பு) – நுகர்ச்சி மற்றும் உற்பத்தியில் ஏற்படும் கழிவுகள் ($R_c$ + $R_p$) + மறு சுழற்சி செய்யப்பட்ட உற்பத்தி மற்றும் நுகர்ச்சிக் கழிவுகள் $\left(R_p^r + R_c^r\right)$ | = | இயற்கை உலகில் இறுதியாக விடப்படும் உற்பத்தி மற்றும் நுகர்ச்சிக் கழிவுகள் $\left(R_p^d + R_c^d\right)$ |

சுற்றுச்சூழல் சுழற்சி செய்யக் கூடிய, சுழற்சி செய்யமுடியாத வளங்களை வழங்கினாலும் கழிவுகளைக் கொட்டக்கூடிய இடமாகவும் உள்ளது. நுகர்வோரும் உற்பத்தியாளர்களும் ஒருவருக்கொருவர் தொடர்புடன் இருந்தாலும் வளங்களுக்காக இயற்கையைச் சார்ந்திருப்பதால் சுற்றுச்சூழலுடன் தொடர்புடையவர்களாக இருக்கின்றார்கள். நுகர்வோரும் உற்பத்தியாளர்களும் தங்கள் கழிவுகளை இயற்கையில் கொட்டுகின்றனர். இயற்கைக்கு எல்லாக் கழிவுகளையும் செரிக்கும் தன்மை இருந்தாலும் இத்தன்மை வெரையறைக்குட்பட்டது. எதற்கும் ஒரு அளவு உள்ளது. உலகத்தின் கழிவு தாங்கும் சக்தி முழு அளவிற்கு மேல் உள்ளதால் அதனால் நிறைய வகைக் கழிவுகளை சுத்திகரிக்க முடியவில்லை. உலகமும் ஒருநாள் ஒத்துழையாமையைக் கடைப்பிடிக்கும் என்பதை நினைவில் கொள்ளவும்.

### சுற்றுச்சூழல் பொருட்கள் (Environmental Goods):

சுற்றுச்சூழல் பொருட்கள் என்பவை சந்தையிடா பொருட்களான தூய்மை காற்று, பசுமையான போக்குவரத்து உள்கட்டமைப்பு, பொது பூங்காக்கள்,ஆறுகள், மலைகள், பசுமை, வழிகள், கடற்கரை போன்றவைகளாகும். தனியார் சொத்துரிமை இல்லாத, பொதுவாக அனைவராலும் பயன்படுத்தும் இப்பொருட்களை இலாபக்குறிக்கோள்காரர்களின் சுரண்டலிலிருந்து பாதுகாப்பது மனித நல்வாழ்வுக்கான அடிப்படையாகும்.

### சுற்றுச்சூழல் தரம் (Environmenal Quality):

சுற்றுச்சூழல் தரம் என்பது சுற்றுச்சூழல் பண்புகளின் தொகுப்பாகும். இன்னும் தெளிவாக கூறுவதென்றால் அப்பண்புகள் ஒவ்வொன்றின் அளவும் எவ்வளவு இருக்க வேண்டும் என்ற தொகுப்பின் குறியீட்டெண் (Index Number) ஆகும். இத்தரம் பொதுவாகவும் நிர்ணயிக்கப்படலாம் அல்லது குறிப்பிட்ட பகுதிக்கான சூழ்நிலையின் அடிப்படையிலும் நிர்ணயிக்கப்படலாம். மனிதன் மற்றும் இதர உயிரினங்களின் மீது பாதிப்பை ஏற்படுத்துவதால் சுற்றுச்சூழல் தரம் (நிர்ணயம்) என்பது மிக கவனத்துடன் கையாளப்பட வேண்டிய ஒன்றாகிறது.

முதலாளித்துவ செயல்முறைகளினால் சுற்றுச்சூழல் தரம் தொடர்ந்து சரிந்து கொண்டே வருகின்றது. சுற்றுச்சூழல் என்பது ஒரு பொதுப் பொருளாகும்.

அப்பொருளின் தன்மைகளாக நாம் பின்வருவனவற்றை குறிப்பிடலாம். இப்பொருள் அனைவராலும் நுகரப்படும். எந்த ஒரு தனிப்பட்ட நபரையும் அதைப் பயன்படுத்துவதிலிருந்து விலக்கி வைக்க முடியாது. ஒருவர் அப்பொருளை பயன்படுத்துவதால், மற்றவர்களுக்கு கிடைக்கும் அளவு குறைந்து போகாது. மேலும், அவற்றை பயன்படுத்துவதற்கான இறுதிநிலைச் செலவு கிட்டத்தட்ட பூஜ்ஜியமாகும். இத்தகைய வளங்கள் குறைந்து கொண்டே செல்கின்றன. இயற்கை வளங்களின் குறைவும் தேசிய வருமானத்தில் இயற்கை வளங்களின் பங்களிப்பும் தற்பொழுதுள்ள தேசிய வருவாய் கணக்கீட்டில் அளவிடப்படுவதில்லை.

## புற விளைவுகளும் சுற்றுச்சூழலும் (Externalities):

### அறிமுகம்:

புற விளைவு அல்லது மிகை வழிதல் விளைவு (Spill Over Effect) என்பது ஒருவருடைய நுகர்ச்சி அல்லது உற்பத்தி, சம்பந்தமில்லாத மூன்றாம் தரப்பிலான மற்றொருவருவடைய நுகர்ச்சி அல்லது உற்பத்தியினை பதகமாக பாதிப்பதாகும் பொருட்கள் மற்றும் பணிகளை உற்பத்தி அல்லது நுகர்வு செய்யும் போது சரியான இழப்பீடு வழங்கப்படாத மூன்றாம் தரப்பினருக்கு ஏற்படும் பாதிப்புகளையே புற விளைவுகள் என்கிறோம்.

### புற விளைவுகளின் பொருள்:

புற விளைவுகள் அங்காடிகளுக்கு வெளியே நடைபெறுகின்றது. உற்பத்தி அல்லது நுகர்ச்சியில் ஈடுபட்டுள்ள மக்களை நேரடியாகப் பாதிப்பதில்லை. எனவே இவைகள் சிதறிய விளைவுகள் (Spill over effercts) எனப்படுகின்றது.

### புற விளைவுகள் - இலக்கணம்:

”தனிநபர்களின் நுகர்ச்சி அல்லது உற்பத்தி ஆகிய பொருளாதார நடவடிக்கைகள் காரணமாக, அந்நடவடிக்கைகளில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பங்குபெறாத சமுதாயத்திலுள்ள மற்றவர்களுக்கு ஏற்படும் செலவு அல்லது பயன் புறவிளைவுகள் எனப்படும்”.

புறவிளைவுகள் நன்மை தருவதாகவோ அல்லது பாதிப்பை ஏற்படுத்துவதாகவோ அமையலாம்.

## நேர்மறை நுகர்ச்சிப் புறவிளைவு (Positive Consumption Externality):

ஒருவருடைய நுகர்ச்சிச் சார்பு மற்றொருவருடைய நுகர்ச்சிச் சார்பில் சாதகமான விளைவினை ஏற்படுத்துவது ஆகும். உதாரணம்: ஒரு நகரில் உள்ள சிலர் ஏற்பாடு செய்கின்ற தனியார் பாதுகாப்பு அப்பகுதியில் குடியிருக்கும் மற்றவர்களுக்கும் செலவில்லாமல் பாதுகாப்பை ஏற்படுத்துகின்றது.

## எதிர்மறை நுகர்ச்சிப் பறவிளைவு (Nagative Consumption Externality):

ஒருவருடைய நுகர்ச்சி சார்பு மற்றொருவருடைய நுகர்ச்சி சார்பில் விளைவினை ஏற்படுத்துவது எதிர்மறை நுகர்ச்சிப் புறவிளைவு என்கிறோம். ஒருவர் தனது

வீட்டில் ஒலிபெருக்கி மூலம் பாடலை அதிக சுத்தத்தில் பாடவிடுகிறார். அது அவருக்கு பயன்பாட்டினை தருகிறது. ஆனால், அருகிலுள்ள வீட்டில் உள்ள மற்றொருவருக்கு அந்த ஒலி மாசு தொந்திரவினை ஏற்படுத்துகிறது எனில், அது எதிர்மறை நுகர்ச்சி புறவிளைவு எனப்படுகிறது. அதனால் இரண்டாமவருக்கு பயன்பாட்டு இழப்பு ஏற்படுகிறது.

### நேர்மறை உற்பத்தி புறவிளைவு (Positive Production Externality):

ஒருவருடைய உற்பத்திச் சார்பு மற்றொருவருடைய உற்பத்தி சார்பில் சாதகமான விளைவினை ஏற்படுத்தினால் அது நேர்மறை உற்பத்தி புறவிளைவு என்கிறோம். உதாரணத்திற்கு, ஒருவர் தேனீ வளர்ப்புத் தொழிலை செய்து வருமான ஈட்டி வருகிறார். அருகிலுள்ள மற்றொரு விவசாயி தனது பண்ணையில் பழமரங்களை வளர்த்து வருகிறார். தேனீக்களினால் ஏற்படும் மகரந்தச் சேர்க்கையின் காரணமாக இரண்டாமவருக்கு அதிகமான பழவிளைச்சலையும், வருமானத்தையும் பெறுவது நேர்மறை உற்பத்தி புறவிளைவு என்கிறோம்.

### எதிர்மறை உற்பத்தி புறவிளைவு (Nagative Production Externality):

ஒருவருடைய உற்பத்திச் சார்பு, அடுத்தவருடைய உற்பத்திச் சார்பினில் பாதகமான விளைவினை ஏற்படுத்தினால் அத எதிர்மறை புறவிளைவு என்கிறோம். உதாரணத்திற்கு ஒரு சிமெண்ட் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் காற்றுமாசுபாட்டினால், அருகிலுள்ள விவசாயியின் நெல்விளைச்சல் பாதிக்கப்படுகிறது. இது எதிர்மறை உற்பத்தி புறவிளைவு எனப்படுகிறது.

**மாசுபடுதல்:**

தொழிற்சாலைகளின் புகை மற்றும் திடக் கழிவுகள் காற்றையும் தண்ணீரையும் மாசுபடுகின்றது. தோல் பதனிடும் தொழிற்சாலைகளால் தண்ணீர் மாசுபடுகின்றது. ஒன்றுமறியாத பொதுமக்கள் பாதிப்பு அடைகின்றனர். இத்தகைய பாதிப்புக்களுக்கு இழப்பீடுகளும் கிடையாது.

சுற்றுச்சூழல் மாசுபடுதல் பல விதங்களில் நடைபெறுகிறது. மாசுபடுதலின் பொருள், வகைகள் காரணங்கள் மற்றும் விளைவுகளை இங்கு கற்போம்.

**மாசுபடுதலின் பொருள்:**

இயற்கை சூழலில் தீங்கு விளைவிக்கக்கூடிய அசுத்தங்கள் சேருவதையே மாசுபடுதல் என்கிறோம்.

**மாசுபடுதலின் வகைகள்:**

மாசுபடுதலை நான்கு வகையாகப் பிரிக்கலாம் அவையாவன:

1. காற்றுமாசுபடுதல்
2. நீர் மாசுபடுதல்
3. ஒலி மாசுபடுதல்
4. மண் மாசுபடுதல்

**காற்று மாசுபடுதல்**
**காற்று மாசுபடுதலின் வரைவிலக்கணம்:**

”சுற்றுச்சூழல் சொத்து, தாவரங்கள், உயிரிகள் மற்றும் மனித இனம் ஆகியவற்றிற்கு ஊறு விளைக்குமளவுக்கு காற்று மண்டலத்தில் திட, திரவ அல்லது காற்று வடிவப் பொருள் கலந்திருப்பதையே காற்று மாசுபடுதல்” என காற்று மாசு தடுப்பு மற்றும் கட்டுப்படுத்தல் சட்டம் 1981 வரையறுக்கிறது.

**காற்று மாசுபடுதலின் வகைகள்:**

**உட்புற காற்று மாசு:**

மனிதர்களின் வசிப்பிடத்திற்குள் தீங்குவிளைவிக்கக்கூடிய அசுத்தங்கள் காற்றில் கலந்திருப்பதை உட்புற காற்று மாசு என்கிறோம். உதாரணமாக திட எரிபொருட்களைக் கொண்டு சமையல் செய்கின்ற போது உட்புற காற்று மாசு அடைகின்றது.

**வெளிப்புற காற்று மாசு:**

காற்றுமண்டலத்தில் திட, திரவ, அல்லது காற்று வடிவ அசுத்தங்கள் கலந்திருப்பதே வெளிப்புற காற்றுமாசு எனப்படுகிறது. தொழிற்சாலைகளாலும் மோட்டார் வாகனங்களாலும் வெளிப்புறக்காற்று மாசு அடைகின்றது.

**காற்று மாசுபடுதலின் காரணங்கள்:**

1. **வாகனங்கள் வெளியிடும் புகை**

   வாகனங்கள் கரியமில வாயு கலந்த புகையை வெளியிடுவதால் வளிமண்டலத்தில் ஆக்ஸிஜன் அளவு குறைந்து சுற்றுசூழல் அசுத்தமடைகிறது.

2. **புதை படிவ எரிபொருளில் மின்சாரத்திட்டங்கள்: (Fossil Fuel):**

   மின்சாரத் திட்டங்களில் பயன்படுத்தப்படும் பெட்ரோல், டீசல் போன்றவை சல்பர்டை ஆக்சைடை வெளியிட்டு சுற்றுச்சூழல் காற்று மண்டலத்தில் அசுத்தமான கழிவுகளை கலக்கிறது. இது அமில மழை ஏற்படக் காரணமாகிறது.

3. **தொழிற்சாலை வெளியேற்றும் புகை:**

   தொழிற்சாலைகள் பயன்படுத்தும் பெரிய இயந்திரங்கள் வெளியிடும் புகை காற்று மண்டலத்தை அசுத்தமாக்குகிறது.

4. **கட்டிடக் கட்டுமானம் மற்றும் வேளாண்மை நடவடிக்கைகள்:**

   பழைய கட்டிடங்களை இடிப்பதாலும் புதியக் கட்டுமானத்தில் சிமெண்ட் பயன்படுத்தும் பொழுதும் காற்றில் அசுத்தமான பொருட்கள் கலக்கின்றன.

விவசாயத்தில் உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் பயன்படுத்தும் பொழுது காற்று மாசுபடுகிறது.

5. **இயற்கை காரணங்கள்:**

பூமி தன்னைத்தானே மாசுபடுத்திக் கொள்கிறது. எரிமலை, காட்டுத்தீ, தூசுப்புயல் போன்றவையும் காற்றில் மாசு கலக்க வழி செய்கின்றன.

6. **வீட்டு நடவடிக்கைகள்:**

சமையலுக்கு பயன்படும் விறகு, கொசு கொல்லி, எலிக் கொல்லி, விளக்குகள் மற்றும் வாசனை திரவியங்கள் ஆகியவையும் காற்றில் நச்சு கலக்க காரணமாகிறது.

**காற்று மாசின் விளைவுகள்:**

1. **சுவாசம் மற்றும் இதயக்கோளாறு:**

சுவாசிக்கும் தரத்தில் இல்லாத காற்று மூச்சுத்திணறலையும் இதய கோளாறையும், புற்று நோயையும் உருவாக்குகிறது. குறிப்பாக குழந்தைகள் ஆஸ்துமா மற்றும் நிமோனியாவினால் பாதிக்கப்படுகின்றனர்.

2. **புவி வெப்பமடைதல் (Global Warming):**

காற்று மாசு வளிமண்டல வெப்ப அளவை உயர்த்துகிறது. இதனால் துருவப்பகுதி பனிப்பாறைகள் உருகி கடல் மட்டம் உயருகிறது. இதனால் நிலப்பகுதி கடலில் மூழ்கும் அபாயம் உள்ளது. உயிரினங்கள் இடம்மாறவும், அழியவும் செய்கின்றன.

3. **அமில மழை (Acid Rain):**
சுற்றுச் சூழலில் நைட்ரஜன் மற்றும் சல்பர் ஆக்சைடுகள் கலப்பதால் அமில மழை பெய்யும் ஆபத்து உருவாகிறது. அமில மழையால், மனிதகுலம், விலங்குகள், பறவைகள், செடி கொடிப் பயிர்கள் பெறும் பாதிப்புக்கு ஆளாகின்றன.

4. **தூர்ந்துபோதல் (Eutrophicaton):**

காற்றில் அதிக அளவில் கலந்துள்ள நைட்ரஜன் போன்ற நச்சுக்காற்று தாவரங்கள், விலங்கினங்கள் மற்றும் மீன்களை பெருமளவில் பாதிக்கிறது.

5. **வன விலங்குகள் எண்ணிக்கை குறைதல்:**

காற்றில் கலந்திருக்கும் நச்சுத்தன்மை கொண்ட வேதிப்பொருளால் வனவிலங்குகள் இடம் பெயர்கின்றன. இதனால் அவைகளின் எண்ணிக்கை குறைகின்றது.

6. **ஓசோன் மண்டலம் பலவீனமடைதல்:**

வளிமண்டல அசுத்தம் ஓசோன்படலத்தைக் குறைக்கிறது. ஓசோன்படலம் சூரியனின் புற ஊதாக்கதிர்தாக்கத்திலிருந்து மக்களை காக்கிறது. இது குறைவதால் புற ஊதா கதிர்கள் நம்மை தாக்கும் அபாயம் ஏற்படும்.

**7. மனித இன சுகாதாரம்:**

காற்று மாசுவினால் உலகளவில் நோய்களும் இறப்புகளும் ஏற்படுகின்றன.

| |
|---|
| உலக அளவில் ஒவ்வொரு நாளும் 15 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளின் 93 சதவீதம் பேர் (1.8 பில்லியன்) மாசுபட்ட காற்றை சுவாசிப்பதால் உடல் நலம் பாதிக்கப்பட்டு மோசமான இடர்ப்பாடுக்கு உள்ளாகின்றனர். |

**காற்றுமாசுபடுதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்:**

1. மக்கள் வசிக்காத இடங்களில் ஆலைகளை அமைத்தல்.
2. ஆலைகளின் புகைப்போக்கித் தொழில் நுட்பத்தை மேம்படுத்துதல்.
3. அதிகமான செடிகளையும், மரங்களையும் நடுதல்.
4. மரபுசாரா எரிபொருள் ஆற்றல்களை (Biogas, CNG, LPG) பயன்படுத்துவதை ஊக்குவித்தல்.
5. பொதுப்போக்குவரத்து சாதனங்களை பயன்படுத்துதல்.

**நீர் மாசுபடுதல்:**
**இலக்கணம்:**

உயிரினங்களுக்கு ஆபத்தான, உயிரினங்களின் உடல் நலனைக் கெடுக்கிற பொருள்களையோ, சக்திகளையோ மனிதன் நேரடியாகவோ, மறைமுகமாகவோ நீர் நிலைகளுக்குள் செலுத்துதல் நீர் மாசுபடுத்துதல் ஆகும்.

**நீர் மாசுக்களின் வகைகள்:**

**1. நில மேற்பரப்பு நீர் மாசுபடுதல்:**

பூமியின் மேற்பரப்பில் இருக்கின்ற நீர் நிலைகள் ஆறுகள், குளங்கள், கடல் போன்றவை மாசுபடுவது மேல் நிலை நீர் மாசு ஆகும் ஆபத்து விளைவிக்கும் பொருட்களை நீர்நிலைகளில் கொட்டுவதால் நீர் மாசு அடைகின்றது.

**2. நிலத்தடி நீர் மாசுபடுதல்:**

பூமிக்கு அடியில் உள்ள நீர் மாசு. நிலத்தடி வாயு, எண்ணெய்ப் பொருள்கள், வேதியல் பொருள்கள் ஆகியவை நிலத்தடி நீரைச் சென்று சேரலாம். அதுமட்டுமல்லாமல் பூமிக்கு மேலே கெட்டுப்போன திரவங்களும், சாக்கடைகளும் நிலத்தடி நீரின் தன்மையைக் கெடுக்கலாம்.

**3. நுண்ணுயிரியல் மாசுபடுதல்:**

வைரஸ் பாக்டீரியா போன்றவையும் நீரின் தன்மையைக் கெடுக்கலாம். இந்த நீரை பயன்படுத்தும் போது நீர்வாழ் உயிரினங்களையும், மனிதர்களையும் பாதிக்கின்றது.

**4. ஆக்ஸிஜன் குறைபாடு மாசுபடுதல்:**

நீரில் உள்ள ஆக்ஸிஜன் குறைவதால், அல்லது இல்லாமல் போவதால், நன்மையான நுண்ணுயிர் கிருமிகள் இறந்து ஆபத்தான நுண்ணுயிர்க்கிருமிகள் அம்மோனியா, சல்பைடு போன்ற நச்சுப் பொருட்களை வெளியிடுவதால் மனிதகுலம், விலங்குகள் மற்றும் சுற்றுச் சூழல் பாதிப்படைகின்றன.

**நீர் மாசுபடுதலுக்கான காரணங்கள்**

1. **கழிவு நீர் மற்றும் தேவையற்ற நீர் வெளியேற்றம்:**

பல இடங்களில் இருந்து வருகின்ற சாக்கடைத் தண்ணீர் கழிவு நீர் குப்பைகள், விவசாயக் கழிவுகள் மற்றும் தொழிற்சாலைக் கழிவுகள் நீர் நிலைகளில் கொட்டப்படுகின்றது. இத்தகைய கழிவுகளில் உள்ள நச்சுப்பொருட்கள் தண்ணீரை மாசுபடுத்தி நச்சுத்தன்மை உள்ளதாக மாற்றுகின்றது.

**2. திடக் கழிவுகள் குவித்தல்**

திடப்பொருள் கழிவுகளை நீர் நிலையில் கொட்டுதல், நீர் நிலையுடன் கலந்துவிடுமாறு விட்டுவிடுதல்.

**3. ஆலைக் கழிவுகளைக் கொட்டுதல்:**

மக்களுக்கும் சுற்றுச் சூழலுக்கும் தீங்கு விளைவிக்கும் மாசுப்பொருட்களான, ஆஸ்பெஸ்ட்டாஸ், காரீயம், பாதரசம், கிரிஸ் எண்ணெய் மற்றும் பெட்ரோலியக் கழிவுகள் போன்றவை ஆலைக்கழிவுகளில் அதிகம் உள்ளது.

**4. எண்ணெய் சிந்துதல்:**

கப்பல்களாலும் குறிப்பாக எண்ணெய்க் கப்பல்களாலும் எண்ணெய் கடல்நீரை மாசுபடுத்துகின்றது. கடல்நீரில் எண்ணெய் கலக்காமல் படலமாகத் தண்ணீரில் படர்கின்றது. இதனால் கடல்வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படுகின்றன.

**5. அமில மழை:**

காற்று மாசுவினால் அமில மழை ஏற்பட்டு நீர்மாசு ஏற்படுத்துகின்றது. காற்று மாசுவில் உள்ள அமிலத் துகள்கள் தண்ணீர் ஆவியுடன் கலந்து அமில மழையை ஏற்படுத்தி சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

**6. புவி வெப்பமடைதல்**

புவி வெப்பமடைதல் காரணமாக நீரின் வெப்ப நிலை அதிகரித்து நீர்வாழ் உயிரினங்களைப் பாதிக்கின்றது.

## 7. நீர் நிலைகளில் பிராண வாயு குறைதல் (Eutrophication):

நீர்நிலைகள் மாசுபடும் போது தண்ணீரில் அதிக அளவு நைட்ரஜனும் குறைந்த அளவு பிராணவாயுவும் இருக்கும். இதனால் நீர்நிலைகளில் பாசிபடர்ந்து காணப்படும். பிராண வாயுக் குறைபாட்டால் மீன்கள் மற்றும் நீர்வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படுகின்றன.

**நீர் மாசுவின் விளைவுகள்:**

மனித இனம், விலங்குகள், தாவரங்கள் என அனைத்தும் நீர் மாசுவால் பாதிக்கப்படுகின்றது. விவசாயத்தில் நீர் மாசுவால் பயிரும் நிலத்தின் வளத்தன்மையும் பாதிக்கப்படுகின்றது. கடல்வாழ் உயிரினங்கள் கடல் நீர் மாசுவினால் பாதிக்கப்படுகின்றது. இத்தகைய பாதிப்புக்களின் விளைவுகள் எத்தைகைய வேதியியல் பொருட்கள் கலக்கின்றன மற்றும் மாசுகளின் அடர்த்தி ஆகியவற்றைப் பொறுத்து அமைகின்றன. நகர்ப்புறங்களில் உள்ள நீர் நிலைகள் குப்பைகள், கழிவு நீர், உற்பத்தி நிறுவனங்கள் மருத்துவ மையங்கள் அங்காடிகள் ஆகியவற்றின் கழிவுகளைக் கொட்டுவதாலும் மாசு அடைகின்றது.

### 1. நீர்வாழ் உயிரினங்களின் இறப்பு:

நீர் மாசுவினால் நீர்நிலைகளில் உள்ள நுண்ணுயிரிகள் அழிக்கப்படுகின்றது இதன் காரணமாக கடல் வாழ் உயிரினங்களான மீன், நண்டு, கடல்பறவைகள், டால்பின் போன்றவைகள் இறந்து கடற்கரைகளில் ஒதுங்குகின்றது.

### 2. இயற்கையான உணவுப் பாதை இடைநிறுத்தப்படுகின்றது:

காரியம், காட்மியம் போன்ற மாசுக்காரணிகள் கலந்த உணவை சிறிய பறவைகள். அவற்றை உண்ட மீன்கள், அவற்றை உண்ட மனிதர்கள் என அனைவருக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

### 3. நோய்கள் பரவுதல்:

சுத்திகரிக்கப்படாத அல்லது சரியாக சுத்திகரிக்கப்படாத கழிவுகள் நீர்நிலைகளில் கலக்கும் போது வாழ்வியல் நிலைகளைப் பேரளவு பாதிக்கின்றன. திறந்த வெளியில் மலம் கழித்தல், திடக் கழிவுகளைக் கொட்டுதல், சாக்கடை நீரைக் கலத்தல் ஆகியவற்றின் மூலமாக தண்ணீர் மூலம் பரவும் நோய்களான ஹெபாடிட்டிஸ் யு. டைபாய்டு, காமாலை, டெங்கு காய்ச்சல், வைரஸ் காய்ச்சல் மற்றும் புழுத்தொற்றுக்கள், ஏற்படுகின்றன.

### 4. இயற்கை அமைப்புகளை அழித்தல்(Destruction or eco- Systems)

இயற்கை அமைப்புக்கள் அதிக அளவில் நீர் மாசுவினால் பாதிக்கப்படுகின்றது. இவ்வாறு இயற்கை அமைப்புக்கள் பாதிக்கப்படுகின்ற போது மனித வர்க்கத்திற்கு அதிக அளவு பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

**நீர் மாசுவினைக் கட்டுப்படுத்த எடுக்க வேண்டிய தீர்வுகள்:**

1. ஒருங்கிணைந்த நீர்நிர்வாக நடவடிக்கையை மேற்கொள்ளல்.
2. தேங்கு நீர்க் குளங்களும் முறையான வடிகால் வசதியும் ஏற்படுத்துதல்.
3. வடிநீர்க் கால்வாய்களை பராமரித்தல்
4. கழிவு மற்றும் சாக்கடை நீரை சுத்தப்படுத்தும் அமைப்புக்களை நிறுவுதல்
5. தொடர்ந்து நீர் ஆதாரங்கள் மற்றும் கழிவு நீரைக் கண்காணித்தல்.
6. சட்ட விரோதமாக நீர்நிலைகளில் கழிவுகளைக் கொட்டுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுத்தல்.

## ஒலி மாசு (Noise Pollution):

**வரைவிலக்கணம்:**

"மனித உடல் நலத்திற்கும் சுற்றுப்புறச் சுழலுக்கும் ஒவ்வாத அளவுக்கு அதிகமான சத்தத்தை எழுப்புவது ஒலி மாசுவாகும். இது அதிகமாக தொழிற்சாலைகளால் உருவாக்கப்படலாம். வானூர்திகள், போக்குவரத்து வாகனங்கள், புகை வண்டிகள், மற்றும் திறந்த வெளி கட்டுமானங்களிலும் காணப்படலாம்".

**ஒலி மாசுவின் வகைகள்:**

1. **வளிமண்டல ஒலி:**
   இடித்தாலும் மின்னல் வெட்டுவதும் மற்றும் இதுபோன்ற மின் பாதிப்புக்களால் வளிமண்டலத்தில் ஒலி மாசு ஏற்படலாம்.

2. **தொழிற்சாலைகளில் ஒலி:**
   தொழிற்சாலைகளில் இயந்திரங்கள் இயங்கும் போது ஒலி எற்படுகின்றது. ஒலி அதிக அளவில் இரைச்சலாக இருக்கும் போது தேவையற்றதாகின்றது. கனரகத் தொழிற்சாலைகளான கப்பல் கட்டுதல், இரும்பு மற்றும் எஃகுத் தொழிற்சாலைகள். இரைச்சல் காரணமாக கேட்கும் திறன் இழத்தல் (Noise Induced Hearning Loss) உடன் தொடர்புடையது.

3. **மனிதனால் தோற்றுவிக்கப்படுவது:**
   கப்பல் மற்றும் ஆகாய விமானங்கள் இயங்குதல், பூமிக்கடியில் ஆய்வு செய்தல், விசைப்படகுகள், ஆழ்துளைகள் ஏற்படுத்தல் போன்றவைகளால் ஒலிமாசு அதிகரிக்கின்றது.

**ஒலி மாசுவிற்கான காரணங்கள்:**

1. **மோசமான நகர்ப்புறத்திட்டமிடல்**:

முறையற்ற நகர்ப்புறத்திட்டம் நகர்ப்புற பயணிகளுக்குத் அதிக அளவு ஒலிமாசுவினை ஏற்படுத்துகின்றது.

2. **மோட்டார் வாகனங்களின் இரைச்சல்:**

நகர்ப்புறங்களில் மோட்டார் வாகனங்கள் ஏற்படுத்தும் இரைச்சல் காரணமாக மக்கள் தற்காலிக காதுகேளா நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

3. **வெடிகள்:**
சில நிகழ்ச்சிகளில் அதிகமான அளவு பட்டாசுகள். வெடிகள் வெடிக்கப்படுகின்றது. பொது மக்களுக்கு தீங்கு விளைவிக்கும் அளவிற்கு ஒலியை ஏற்படுத்துகின்றது. சில சமயங்களில் சிறுவர்களுக்கும் வயோதிகர்களுக்கும் செவிட்டுத் தன்மையை ஏற்படுத்துகின்றது.

4. **தொழிற்சாலை இயந்திரங்கள்**:

தொடர்ந்து இந்திரங்கள் இயக்கப்படும் போது ஏற்படுகின்ற இரைச்சல் கடின துளைக் கருவிகளை இயக்கும் போது ஏற்படுகின்ற இரைச்சல் போன்றவை தொழிலாளர்களுக்கு தாங்க முடியாத தொந்திரவாக அமைகின்றது.

**ஒலி மாசுவின் விளைவுகள்:**

1. **கேட்கும் திறன் இழப்பு:**
தொடர்ந்து அதிக காரணமாக கேட்கும் திறன் பாதிக்கப்படும். வயதானோருக்கு தொழில் ரீதியான இரைச்சலால் செவியின் கேட்கும் திறன் குறையும்.

2. **உளரீதியான, மனரீதியான பாதிப்புகள்:**

தேவையில்லா இரைச்சல் உள, மன நலன்களைப் பாதிக்கின்றது. இதன் காரணமாக, மிகை அழுத்தம்,கோபம், மன அழுத்தம் போன்றவை ஏற்படுகின்றது.

3. **இதய பாதிப்புகள்:**
அதிக அளவு இரைச்சலில் இருப்பது இருதய நோய்களுக்கும் அதிக ரத்த அழுத்தத்திற்கும் வழிவகுக்கும்.

4. **விலங்கினங்கு தீமை ஏற்படுத்தும்:**

அதிக அளவு இரைச்சல் விலங்குகள், கடல்வாழ் உயிரினங்கள் ஆகியவற்றிற்கு அதிக அளவு தீங்கிழைத்து மரணம் நிகழ்வும் காரணமாக அமைகின்றது.

5. **வன உயிரினங்களுக்கு தீமை ஏற்படுத்தும்:**
அதிக அளவு இரைச்சல் வன உயிரினங்களுக்கு சுரப்பிகளின் சமமின்மை, அதிக அழுத்தம், பதற்றம் போன்றவற்றை ஏற்படுத்துகின்றது.

**ஒலி மாசுவினை கட்டுப்படுத்துவதற்கான தீர்வு முறைகள்:**

1. ஒலித் தடைகளை ஏற்படுத்துதல்
2. தரைப்போக்குவரத்திற்கு புதிய சாலைகள் ஏற்படுத்துதல்.
3. போக்குவரத்து நெரிசல் கட்டுப்பாடு
4. வேலை செய்யும் இடங்களில் ஒலித் தடுப்பானை நிறுவுதல்.
5. கனரக வாகனங்கள் செல்லும் நேரத்தைக் கட்டுப்படுத்துதல்
6. ஒலி பெருக்கிகளைக் கட்டுப்படுத்துதல்

**நில மாசு:**

"கழிவுகளைக் கொட்டுவதால் நிலம் தரக்குறைவானதாக மாறும். சுற்றுச்சூழலில் கொட்டப்படும் பல திட, திரவ, வாயுப்பொருட்கள் நிலத்தின் தன்மையைக் கெடுத்துவிடுதல் நிலமாசு ஆகும்".

**நில மாசுவின் வகைகள்:**

1. **திடக்கழிவு:**

இது தாள்கள், நெகிழிப் பொருள்கள், கண்ணாடி பாட்டில்கள், உணவுப்பொருள்கள், பயன் இழந்த வாகனங்கள், பழுதடைந்த மின்னனுப் பொருள்கள், நகராட்சிக் கழிவுகள் மருத்துவமனை கழிவுகள் போன்றவை இதில் அடங்கும்.

2. **பூச்சிக் கொல்லி மருந்து மற்றும் இராசயன உரங்கள்:**
விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்காகக் கொண்டுவந்த வேதியியல் பொருட்கள் இன்று புழுப்பூச்சிகளை மட்டுமின்றி மனிதர்களையும் கொல்லும் சக்தி வாய்ந்தவை. மேலும் நிலத்தையும் மாசுபடுத்துகின்றது.

3. **காடுகளை அழித்தல்:**

பல வழிகளில் மனிதன் மரங்களைப் பயன்படுத்துகிறான். மரங்கள் கரியமில வாயுவைக் கிரகித்துக்கொண்டு உயிர்வாயுவை (Oxygen) வெளியிடுகின்றது. மரங்கள் வெட்டப்படும் போது உயிர் வாயுவின் (Oxygen) அளவு குறைகிறது. மரங்கள் வெட்டப்படுவதால் மண் அரிப்பு ஏற்படுகிறது. காடுகள் அழிக்கப்படுவதால் நிலம் மாசடைகின்றது.

**நிலமாசுவிற்கான காரணங்கள்:**

1. **காடுகளை அழித்தல்:**

காடுகளை அழித்து நிலமாக மாற்றுவது சுற்றுச்சூழல் பாதிப்புக்கு முக்கிய காரணியாக விளங்குகின்றது. அவ்வாறு மாற்றப்படும் நிலங்களை எத்தகைய நடவடிக்கைகள் மூலமகாவும் செழிப்பான நிலமாக மாற்ற முடியாது.

2. **விவசாய நடவடிக்கைகள்:**

மக்கள் தொகை அதிகரிப்பாலும் கால்நடை அதிகரிப்பாலும் உணவுப் பொருட்களின் உற்பத்தியை அதிகரித்துக்கொண்டே செல்ல வேண்டியுள்ளது. அதற்காக விவசாயிகள் அதிக நச்சுத்தன்மை கொண்ட உரம் மற்றும் பூச்சி

மருந்துகளை பயன்படுத்தப்படுகின்றனர். இந்த வேதிப்பொருட்களை அளவிற்கதிகமாக பயன்படுத்துகின்ற போது நிலம் நச்சுத் தன்மை அடைகின்றது.

**3. சுரங்கத் தொழில்கள்:**
கனிமங்களை வெட்டி எடுக்கும் போதும் சுரங்கங்கள் அமைக்கப்படும் போதும் பூமிக்கு அடியில் நில அமைப்புகள் தோன்றுகின்றது. இதன் மூலம் நிலம் மாசடைகின்றது.

4. **மண்ணில் புதைத்தல்:**

மக்களின் வாழ்க்கை முறை மாற்றத்தால் ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு ஆண்டிலும் டன் கணக்கில் குப்பையை உற்பத்தி செய்கின்றது. நெகிழி, காகிதம், பழைய துணிகள். மரக்கழிவுகள் மற்றும் மருத்துவமனைக் கழிவுகள் குவிக்கப்படுகின்றது. மறுசுழற்சி செய்ய முடியாத கழிவுகள் நிலத்தில் புதைக்கப்பட் நிலமாசு அதிகரிக்க காரணமாக உள்ளது.

5. **தொழில்மயமாதல்:**

நுகர்ச்சி அதிகரிப்பால் புதிய தொழிற்சாலைகள் ஏற்படுகின்றது. இதற்காக காடுகள் அழிக்கப்படுகின்றன. ஆராய்ச்சிகளின் விளைவாக புதிய உரங்களும் வேதிப்பொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டு உற்பத்தி செய்து அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றது. அதன் காரணமாகவும் நிலமாசு அதிகரிக்கின்றது.

**6. கட்டுமானப் பணிகள்:**
மக்கள் தொகை வளர்ச்சி, நகர்ப்புறமாதல் காரணமாக கட்டடங்களின் வளர்ச்சி அதிகமாக உள்ளது. அதனால், மணல், மரம், கம்பி, சிமெண்ட், செங்கல், நெகிழிப் பொருட்கள், ஆகியவற்றின் கழிவுகள் குப்பைகளாக புறநகர்ப் பகுதிகளில் கொட்டப்படுகின்றது. இதன் காரணமாக நிலம் மாசடைகின்றது.

**7. அணுமின் விரயங்கள்:**

அணுமின் நிலையங்களிலுள்ள கழிவுகளான கதிர்வீச்சுப் பொருட்கள், நச்சுத் தன்மை கொண்ட தீமை விளைவிக்கும் வேதிப்பொருட்கள் மனித நலத்தைப் பாதிக்கின்றது. இப்பாதிப்பைத் தவிர்க்க இவை பூமிக்கடியில் பாதுகாப்பறைகளில் வைக்கப்படுகின்றது. இதன் மூலமும் நிலம் மாசுபடக் கூடும்.

**நில மாசுவின் விளைவுகள்:**

1. **மண் மாசுபடுதல்:**
நில மாசுபாட்டில் மிகவும் மோசமானது நிலத்தின் மேல்பகுதியான மண் மாசுபடுதலாகும். ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் பயன்பாடே இதற்கு முக்கிய காரணமாகும். மண்ணின் வளமை குறைவதுடன் விவசாய நிலம் மற்றும் கால்நடை மேய்ச்சல் நிலம் பாதிக்கப்படுகிறது. பூச்சிக் கொல்லி மருந்துகள் பூச்சிகளை மட்டுமின்றி மனித இனத்தையும் அழிக்கிறது.

2. **உடல் ஆராக்கிய கேடு:**

வேதியல் உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்தி விளைவுக்கும் உணவுப் பொருட்களை உண்பதால் சுவாசக்கோளாறுகள் தோல் புற்றுநோய் போன்று உடல் நல பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

3. **காற்று மாசுபாடு:**

கழிவு பொருட்களை பூமிக்குள் புதைப்பது அல்லது எரியூட்டுவது காரணமாக காற்று மாசுபடி வாய்ப்பு ஏற்படுகிறது. அளவிற்கு அதிகமான நச்சுப் பொருட்கள் வளிமண்டலத்தில் கலப்பதால் காற்று, நச்சுக்காற்றாக மாறுகின்றது. நச்சுக்காற்றை சுவாசிப்பதன் மூலம் சுவாச நோய்கள் உண்டாகிறது.

4. **விலங்குகள் மீதான பாதிப்பு:**

கடந்த சில பத்து ஆண்டு காலத்தில் விலங்குகளின் சாம்ராஜ்யம் பெரிதளவு பாதிக்கப்பட்டுள்ளது. அவைகளின் இருப்பிடத்திற்கும் இயற்கைச் சூழலுக்கும் மனிதர்களின் தொடர் நடவடிக்கைகளால் நிலம் மாசுபட்டு வனவாழ் உயிரினங்களை மிகத்தொலைவில் நகரச் செய்துள்ளது. வாழதோதுவான நிலை இல்லாததால் பெரும்பாலான வனவாழ் உயிரினங்கள் அழிவுநிலைக்குத் தள்ளப்பட்டன. சில உயிரினங்கள் அழிந்து விட்டன.

**நில மாசுவுக்கு தீர்வுகள்**

1. மக்களுக்கு குறைத்தல், மறுசுழற்சி, மறுபயன்படுத்துதல் பற்றி உரிய அறிவனைப் புகட்டுவது.
2. இயற்கையாகவே அழிந்து, மண்ணுக்கு சேதம் விளைவிக்காத பொருள்களைப் பயன்படுத்துவது
3. பூச்சிக்கொல்லி மருந்துகளை குறைந்த அளவில் பயன்படுத்துதல்.
4. பலவகைப் பயிர்களைப் பயிரிட்டு மண் வளம் காத்தல். பயிர்ச்சுழற்சி முறை மண்ணின் வளத்தைக் கூட்டும் என்கிறார்கள்.
5. தேவையில்லாத குப்பைகளை எரித்தோ அல்லது புதைத்தோ அப்புறப்படுத்துதல்.
6. மிகக் குறைவான நெகிழிப் பொருள்களைப் பயன்படுத்துதல்

**புவி வெப்பமயமாதல்:**

நிலம் மற்றும் நீர் உள்ளடக்கிய பூமி மற்றும் வளிமண்டலத்தில் தற்போது அதிகரிக்கும் வெப்ப நிலையையே புவி வெப்பமயமாதல் என்கிறோம். உலகின் சராசரி வெப்பநிலை கடந்த 100 ஆண்டுகளில் 0.75°C (1.4°F) கூடியுள்ளதாகச் சொல்லப்படுகிறது. இதில் 3ல் 2 பங்கு 1975 க்கு பின் வந்த குறுகிய காலத்திலேயே கூடியதாகும். கரியமில வாயு, மீத்தேன், குளோரோபுளோரோ

கார்பன் (Chloro fluoro Carbon) நைட்ரஸ் ஆக்ஸைடு (Nitrous Oxide) போன்ற பசுமைக் குடில் வாயுக்களின் அளவு வளிமண்டலத்தில் அதிகரிப்பதால் புவியின் வெப்பம் அதிகரிக்கின்றது. இதை பசுமைக்குடில் விளைவு என்பர். இவைகளில் கரியமில வாயு புவி வெப்பம் அதிகரிக்க 50ூ காரணமாக உள்ளது. உயிரிப்பொருட்கள், விறகு ஆகியவற்றை எரிப்பதாலும் காடுகள், மரங்களை அழிப்பதாலும் கரியமில வாயுவின் அளவு அதிகரிக்கின்றது. கடந்த காலங்களில் புவி வெப்பமடைதல் இயற்கைக் காரணங்களால் நிகழ்ந்தது. ஆனால் தற்போது இது மனித நடவடிக்கைகளால் தோற்றுவிக்கப்படுகின்றது.
புவி வெப்பமடைதல் காரணமாக விவசாயம், தோட்டக்கலை மற்றும் சற்றுச்சூழல் அமைப்பு போன்றவை அதிக அளவில் பாதிக்கப்படுகின்றது. குறைந்த மழையளவு, அதிக வெப்பம் காரணமாக அதிக பூச்சி தாக்குதல், களைகள் வளர்தல் மூலம் விவசாயம் பாதிக்கப்படுகின்றது. அதிக வெப்பம் காரணமாக நோய் பரப்பும் கொசு போன்ற உயிரினங்கள் பெருகி மலேரியா, டெங்கு, என்செபாலிட்டிஸ் (Encephalitis) மஞ்சள் காய்ச்சல் போன்ற நோய்களை பரப்புகின்றது.

புவி வெப்பத்தின் சராசரி வெப்ப நிலையின் அதிக அளவு அதிகரிப்பு மழை பெய்யும் போக்கையும் மற்றும் தட்பவெப்ப நிலைகளையும் மாற்றி சுற்றுச்புறச் சூழலில் சமநிலையற்ற தன்மையை ஏற்படுத்தும்.

**காலநிலை மாற்றம்:**

வளிமண்டலத்தில் பசுமைக் குடில் வாயுக்களின் அளவுகள் வளர்ந்துகொண்டே செல்வதால் நீண்ட காலத்தில் ஏற்படும் பருவநிலை மாறுபாடுகளே காலநிலை மாற்றம் எனப்படும். தொழிற்புரட்சியில் தொடங்கி மனித நடவடிக்கைகளால் வழி மண்டலத்தில் உள்ள கரியமில வாயுவின் அளவு தொழில்புட்சிக்கு முன் 280 ppm என்ற அளவிலிருந்து 2016 ம் ஆண்டு 402 ppm ஆக, அதாவது 40 விழுக்காடு அளவிற்கு புவி வெப்பத்தை அதிகரித்துள்ளது.

கடற்கரை நீரின் வெப்ப அதிகரிப்பு, உயர்ந்த வெப்பநிலை, மழைபெய்யும் காலங்களில் மாற்றம், அதிக வேகத்துடன் அடிக்கடி தோன்றும் புயல் ஆகியவற்றை உலகின் பல பகுதிகளிலும் உணரத் தொடங்கியுள்ளார்கள். கடல் மட்டமும் வெப்பமும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### அமில மழை (Acid Rain):

காற்று மாசுவின் விளைவே அமில மழை ஆகும். தொழிற்சாலைகள், வாகனங்கள் கொதிப்பான்கள் போன்றவை வெளியிடும் வாயுக்கள் வளிமண்டலத்தின் உள்ள நீர்த்துகள்களோடு இணையும் போது ஏற்படுகின்றது. இந்த வாயுக்கள் நைட்ரஜன் ஆக்ஸைடு, சல்பர் டை ஆக்ஸைடு மற்றும் சல்பர் டிரை ஆக்ஸைடு, தண்ணீரோடு கலக்கின்ற போது சல்பரஸ் அமிலம், நைட்ரிக் அமிலம், சல்பியூரிக் அமிலம் போன்றவையாக மாறுகின்றது. இந்நிகழ்வுகள் எரிமலை வெடித்துச் சிதறும் போதும் எரிகுழம்புகளைக் கக்கும்போதும் இயற்கையிலேயும் ஏற்படும்ட. தாவரங்கள், நீர்வாழ் உயிரனங்கள், கட்டமைப்புக்கள் அதிக அளவில் அமில மழையால் பாதிக்கப்படுகின்றது.

## E. கழிவுகள் (E – Waste):

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் E – கழிவுகள் என்று பொதுவாக அழைக்கப்படும் மின்னணுக் கழிவுகள் ஏற்படுகின்றன. குளிர்சாதனப் பெட்டிகள், காற்றுச் சீரமைப்பிகள் (Air conditioners), கைபேசிகள், கணினிகள் போன்ற பெருமளவில் வீட்டு உபயோகத்திற்குப் பயன்படுத்தும் மின்னனுச் சாதனங்களை உள்ளடக்கியதாகும்.

தொலைசாதனம், கணினிகள், கேட்கும் கருவிகள், தொலைபேசி,VCR, DVD, தொலைநகல், நகலெடுக்கும் இயந்திரங்கள், கப்பியில்லா கருவிகள் போன்ற வீட்டு உபயோகப் பொருட்களை கழிக்கும் போதோ அல்லது மறுசுழற்சி செய்யும்போதோ E கழிவுகள் தோன்றும்.

**E –கழிவுகளின் ஆதாரங்கள்**

**வீடு**

- கணினி
- தொலைக்காட்சிப் பெட்டி
- வானொலி
- கைபேசி
- துவைக்கும் இயந்திரம்
- நுண்கலை அடுப்பு
- CO பிளேயர்
- மின்விசிறி
- எலெக்ட்ரிக் அயர்ன்

**மருத்துவமனை**

- கணினி
- மானிட்டர்கள்
- ECG கருவி
- நுண்ணொக்கி
- இங்குபேட்டர்கள்

**அரசாங்கம்**

- கணினி
- தொலை நகல் கருவி
- நகல் இயந்திரம்
- ஸ்கேனர்
- மின்விசிறி
- குழல்விளக்குகள்
- காற்றுச் சீரமைப்பின்

**(உணவுக்கூடங்கள் தொழிற்சாலைகள், தனியார் துறை)**

- கணினி
- கொதிகலன்கள்
- அரைப்பான்
- சிக்னல்
- ஜெனரேட்டர்கள்

**திடக்கழிவுகள் (Solid Waste):**

மனித நடவடிக்கைகளில் பயனில்லாத தேவையற்ற பொருட்களைக் கழிப்பதே திடக் கழிவுகள் ஆகும். அவை திடப் பொருட்களாகவோ, பகுதி திடப்பொருட்களாகவோ அல்லது திரவமாகவோ இருக்கும். வீட்டுக் கழிவுகள், மருத்துவமனைக் கழிவுகள், இறந்த பிராணிகள், கட்டுமானத்துறைக் கழிவுகள், சாம்பல், விவசாயக் கழிவுகள் மற்றும் தொழிற்சாலைக் கழிவுகள் திடக் கழிவின் வகைகளாகும். இக்குப்பைகள் தெருக்களிலிருந்தும் பொது இடங்களிலிருந்தும் சரியான நேரங்களில் அப்புறப்படுத்தாமல் இருந்தால் கடுமையான சுத்த சுகாதாரக் கேடுகளை ஏற்படுத்தும்.

**நீடித்த நிலையான மேம்பாடு: (Sustainable Develpment):**

இப்போதுள்ள சந்ததியினருக்கு மட்டுமின்றி, எதிர்காலச் சந்ததியினருடன் வாழ்வதற்குத் தேவையான வளத்தை வைத்துவிட்ட அடைகின்ற மேம்பாடே நீடித்த நிலையான மேம்பாடு எனப்படும். மேல்தட்டு மக்களின் ஆரம்பர விருப்பங்கள் மட்டுமல்லாது ஏழை மக்களின் அடிப்படைத் தேவைகளான, உணவு, சுகாதாரம். உடல்நலம், கல்வி போன்றவற்றையும் அளிக்க வேண்டும். தற்பொழுதுள்ள தலைமுறை, முன்னோர் விட்டுச்சென்ற இயற்கை வளங்களை முழுவதுமாகப் பயன்படுத்தாமல் பின்வரும் சந்ததியினருக்கு விட்டுச் செல்ல வேண்டும். முன் சந்ததிக்கு கிடைத்த அனைத்தும் அதே செலவில், அதே சிரமத்தில் அதே அளவில் பின்சந்ததிக்கும் கிடைத்தால் அது தலைமுறைகளுக்கு இடையேயான சமத்துவம் ஆகும்.

**இலக்கணங்கள்:**

”இயற்கை வளத்தின் அளவு எக்காலத்திலும் குறையாமல் இருக்க வேண்டும்” பியர்ஸ், மார்கண்டேயா, மற்றும் பார்பியர் 1989.

”வருங்காலத் தலைமுறையினர் தங்கள் தேவைகளை நிறைவேற்ற எந்த ஒரு தடையும் இல்லாத நிலையில் தற்பொழுது உள்ள மக்களின் தேவையை நிறைவேற்றுதலே நீடித்த நிலையான மேம்பாடு”. சுற்றுப்புறச் சூழல் மற்றும் மேம்பாட்டிற்கான உலக அமைப்பு 1987. (World Commission on Environment and Development 1987).

## நீடித்த நிலையான மேம்பாட்டு இலக்குகள் (Sustainable Development Goals):

பொருளாதார வளர்ச்சி, சமூகச் சேர்ப்பு மற்றும் சுற்றுப்புறப் பாதுகாப்பு ஆகிய மூன்று முக்கிய குறிக்கோள்களையும் சேர்ந்து சாதிப்பதுதான் நீடித்த நிலையான வளர்ச்சியாகும். 2030 க்குள் 17 குறிக்கோள்களைச் சாதிக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை (UNO) மூன்று இணைந்துபோகிற கொள்கைகளை நிறுவியிருக்கிறது. அவை உலகப்பொதுமை (Universality) ஒருங்கிணைப்பு (Integration) மாற்றம் (Transformation)

1. எல்லா வடிவங்களிலும் எல்லா இடத்திலும் வறுமையை ஒழித்தல்.
2. பட்டினியை முடிவுக்குக் கொண்டுவருதல், உணவுப் பாதுகாப்பை அடைதல், ஊட்டச்சத்தினை உயர்த்துதல், நீடித்த நிலையான விவசாயத்துறை வளர்ச்சியை ஊக்கப்படுத்துதல்.
3. அனைத்து வயது மனிதர்களின் நலமான வாழ்வை உறுதிப்படுத்துதல்
4. எல்லோரையும் உள்ளடக்கிய தரமான கல்வியை வழங்கி வாழ்நாள் முழுக்கக் கற்றுக்கொள்ள வசதி செய்தல்.
5. பெண்களுக்கு அதிகாரம் வழங்குதல் பாலின சமன்பாட்டை சாதித்தல்.
6. குடிநீரும் சுகாதாரமும் அனைவருக்கும் உறுதிப்படுத்துதல்.

7. சுத்தமான, நீடித்த நிலையான, எளிதில் பெறக்கூடிய சக்தியினை (எரிபொருள்: (Energy) அனைவருக்கும் உறுதிப்படுத்துதல்.

8. அனைவருக்கும் தரமான வேலை வாய்ப்பினையும் நீடித்த நிலையான பொருளாதார வளர்ச்சியினையும் வழங்குதல்.

9. தேவையான கட்டமைப்புகளை வழங்குதல், தொழில்மயமாக்கல், புத்தாக்கங்களை ஊக்குவித்தல்.

10. நாடுகளுக்குள்ளேயும் நாடுகளுக்கிடையேயும் உள்ள சமமின்மைகளை அகற்றுதல்.

11. பாதுகாப்பான, அமைதியான யாவரையும் உள்ளடக்கிய நகரங்களை உருவாக்குதல்.

12. நீடித்த நிலையான உற்பத்தி மற்றும் நுகர்வினை உறுதிப்படுத்துதல்.

13. தட்பவெப்ப மாற்றங்களையும் அவற்றின் தாக்கங்களையும் குறைத்தல்.

14. சமுத்திரங்கள், கடல்கள், கடல் வளங்கள் ஆகியவற்றைப் பாதுகாத்தல்.

15. காடுகளைப் பராமரித்தல், நிலம் அழிவதைத் தடுத்தல், நிலைத்தின் தன்மை குறைவதைக் கட்டுப்படுத்தி உயர்த்துதல், உயிர்பன்முகத் தன்மை இழப்பை (Loss of Biodiversity) தடுத்து நிறுத்துதல்.

16. அமைதியான, சமூக நீதியுள்ள, அனைவரையும் உள்ளடக்கிய சமூகங்களை உருவாக்குதல்.

17. நீடித்த நிலையான வளர்ச்சிக்காக உலக ஒத்துழைப்பை உருதிப்படுத்துதல்.

**பசுமை முயற்சிகள்:**

இன்று உலகளவில் அதிக நிறுவனங்கள், வர்த்தக அமைப்புகள் மற்றும் மக்கள் நீடித்த நிலையான மேம்பாட்டிற்காகவும் சூழல்நட்பு வாழ்க்கை முறைகளையும் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன. வாழ்க்கைக்கு ஆதாரமான பூமியைப் பாதுகாப்பதில் உறுதி கொண்டுள்ளனர். எனவே அரசியல் மூலமாகவும் குடிமக்கள் செயல்பாட்டாலும் நுகர்வோர் அழுத்தத்தாலும் நாம் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும். அமைதியான முறையில் நேரடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் பூமியைப் பாதுகாப்பதோடு பசமையான அமைதியான எதிர்காலத்திற்கும் தீர்வு காணவேண்டும். புவி வெப்பமயமாதல் உலகளாவிய பிரச்சனை என்பதால் மாசுபடுத்திய வளர்ச்சியடைந்த நாடுகள் மாசுக்கட்டுப்பாட்டு முயற்சிகளுக்கான செலவினை ஏற்க வேண்டும்.

**இயற்கை பண்ணை முறை (Organic Farming):**

இயற்கைப் பண்ணை முறை என்பது கால்நடை சாணம், இயற்கைக் கழிவுகள் ஆகியவற்றை உரமாகவும் பயிர்ப் பூச்சி மருந்துகளைப் பயன்படுத்தியும் பருப்பு

வகைகள் போன்றவற்றைப் பயிரிட்டு பயிர்ச் சுழற்சி முறையையும் பயன்படுத்தி செய்யப்படும் வேளாண்மையாகும். இதில் ரசாயன உரங்களும் பூச்சிக்கொல்லி மருந்துகளும் பயன்படுத்தப்படுவதில்லை. இயற்கை இடுபொருட்கள், நுண்ணுயிரிகளை வளர்த்து நிலத்தின் செழிப்புத் தன்மையை அதிகப்படுத்துகின்றது. விவசாய சூழல் அமைப்பில் உள்ள நிலத்தின் தன்மை, பயிர்கள், கால்நடைகள் மற்றும் மக்களைக் கருத்தில் கொண்டு உத்தம அளவு உற்பத்தி செய்யும் உள்ளடக்கிய அமைப்பு முறையே இயற்கைப் பண்ணைகளாகும். நீடித்த நிலைத்த சுற்றுச்சூழலோடு இணைந்த அமைப்புக்களை உருவாக்குவதே இயற்கை உற்பத்தியின் முக்கிய குறிக்கோளாகும். இயற்கைப் பண்ணையின் பொதுவான கொள்கைகள் பின்வருமாறு.

1. சுற்றுச்சூழலை பாதுகாத்தல், மண் அரிப்பைக் கட்டுப்படுத்துதல், மண்வளக்குறைவைத் தடுத்தல், உயிரியல் உற்பத்தியை உத்தமப்படுத்துதல் மற்றும் சிறந்த உடல்நலத்தை ஊக்குவித்தல்.

2. மண்ணுக்குள் உயிரியல் நடவடிக்கைளை மேம்படுத்தி மண்ணின் வளத்தன்மையை நீண்டகாலத்திற்கு நிலைத்திருக்கச் செய்தல்.

3. அமைப்புக்குள் உயிரியல் மாற்றங்களை நிலைத்திருக்கச் செய்தல்.

4. நிறுவனத்தின் பொருட்களையும் வளத்தையும் அதிக அளவு மறுசுழற்சிக்கு உட்படுத்துல்.

5. கால்நடைகளை நன்கு பராமரித்து அவற்றின் நலத்தை மேம்படையச் செய்தல்.

6. எல்லா உற்பத்தி நிலைகளிலும் இயற்கை நேர்மையையும் முக்கிய பண்புகளையும் கடைப்பிடித்து கையாள்வதிலும் பதப்படுத்துதலிலும் கவனமாக இருந்து இயற்கைப் பொருட்களை தயாரிக்க வேண்டும்.

7. அப்பகுதியிலுள்ள அமைப்பு சார்ந்த விவசாய முறைகளிலுள்ள மறுசுழற்சி செய்யும் வளங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**உவர் நிலம் (Alkali Soil):**

பாசன வசதி பெற்ற நிலங்கள் மற்றும் வறண்ட பகுதிகளில் உள்ள கிட்டத்தட்ட 50 சதவீத நிலங்களில் ஓரளவு உவர் பிரச்சனை உள்ளது. பயிரின் வேர்ப்பகுதிகளில் அதிக அளவு உப்பு / அமிலம் படிந்து நிலத்தின் உற்பத்தித் திறனை பகுதியாகவோ அல்லது முழு அளவாகவோ பாதிக்கின்றது. இத்தகைய நிலங்கள் பிரச்சனை (உவர், உப்பு, மற்றும் அமிலம்) நிலங்கள் எனப்படுகின்றது. இத்தகைய நிலங்கள் பாசனவசதி பெறாத வறண்ட நிலங்களில் காணப்படுகின்றது.

இத்தகைய உவர் நிலங்கள் பெரும்பாலும் பஞ்சாப், ஹரியானா, உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்கள் உள்ளடங்கிய இந்து கங்கைச் சமவெளிகளில் காணப்படுகின்றது. சத்தீஸ்கார், ராஜஸ்தான், ஆந்திரப்பிரதேசம், குஜராத், மஹாராஷ்ட்டிரா, கர்நாடகா, மத்தியப்பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் ஒருசில பகுதிகளிலும் காணப்படுகின்றது.

**மரம் வளர்த்தல்:**

மரங்கள் உயிரிக் (Oxygen) காற்றை அளித்து காற்றின் பண்பை உயர்த்துகின்றது. தண்ணீர், மண்வளம் ஆகியவற்றைப் பாதுகாத்து வனவிலங்குகளுக்கு உதவியாக உள்ளது. மரங்கள் ஒளிச் சேர்க்கையின் போது கரியமில வாயுவைக் கிரகித்து நாம் சுவாசிக்கும் உயிரிக் காற்றை வெளியிடுகின்றது. எனவே மரங்கள் பூமியின் நுரையீரல் எனப்படுகின்றது. இயற்கைக் காடுகளும் மரத்தோட்டங்களும் மழைநீர் ஓட்டத்தைக் கட்டுப்படுத்தி நிலத்தடி நீர்மட்டம் உயர் வழி செய்கின்றது.

**விதைப் பந்து (Seed Ball):**

ஒரு விதை மண்ணால் மூடிவைக்கப்படுகிறது. அந்த மண் உரம் கலந்த களிமண்ணாகும். பிறகு உலர்த்தப்படுகிறது. பின்பு எங்கு வேண்டுமோ அங்கு அதனை விதைக்கலாம். இவ்வாறு செய்யும் போது, அந்த விதை முன்பே நடப்பட்டுவிட்டது என்றே பொருள். மரங்கள் நடுவதற்கு விதைப்பந்து முறை எளிதான, நீடித்து நிலைக்கும் வழியாகும். ஏனெனில் மழை விழுந்தபின் விதைகள் விதைப்பது கடினமான முறையாகும்.

**தொகுப்புரை:**

இயற்கைச் சூழலுக்கும் மனித நடவடிக்கைகளும் இடையே உள்ள தொடர்பு இந்த அத்தியாயத்தின் தொடக்கத்தில் கூறப்பட்டுள்ளது. சுற்றுச் சூழல் பொருளாதாரம் பொருளியலின் ஒரு பகுதியாக சூழல் வளங்களைச் சிறந்த முறையில் ஒதுக்கீடு செய்வதை விளக்குகின்றது. ஆலன் நீஸ் (Alen Kneese) மற்றும் R.V. அய்யரஸ் (R.V. Ayres) இன் பொருள் சார் சமநிலை மாதிரி (Material balance Model) மூலமாக பொருளாதாரத்திற்கும் சுற்றுச் சூழ்நிலைகளுக்கும் இடையேயுள்ள தொடர்புகளை விளக்குகின்றது.

இரண்டாவது பகுதியில் காற்று, தண்ணீர், ஒலி, நிலம் போன்ற பல்வேறு வகையான காரணிகள் மாசுபடுவதற்கான காரணங்கள், விளைவுகள் மற்றும் அவற்றைக் குறைப்பதற்கான வழிமுறைகள் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. மேலும் புவி வெப்பமடைதல், தட்பவெப்பநிலை மாறுபடுதல், அமிலமழை, நு – கழிவுகள் மற்றும் திடக் கழிவுகள் போன்ற சுற்றுப்புறச் சூழலைப் பாதிக்கும் முக்கிய காரணிகள் விளக்கப்பட்டுள்ளது. இறுதியாக மக்கள் நடவடிக்கைகளான பசுமைத் துவக்கங்கள் இயற்கை விவசாயம் மரத்தோட்டங்கள் ஏற்படுத்துதல், விதைப்பந்து, களர் நில விவசாயம் போன்ற முறைகளால் நிலைத்த நீடித்த மேம்பாட்டிற்கு வழிவகை செய்யும் முயற்சிகள் விளக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலை மாசு, வளியில் ஏற்படும் கழிவுகள், மண்ணரிப்பு, நிலவளக்குறைவு, காடுகளை அழித்தல் மற்றும் இயற்கை வளங்களை அழித்தல் போன்ற காரணிகளால் சுற்றுச்சூழல் அதிக அளவில் பாதிக்கப்படுகின்றது. சுற்றுச் குழலைப் பாதிக்கும் காரணிகளைச் சரிசெய்ய அங்காடிகளும் நிறுவனங்களும் வளர்ச்சி பெறாததே இந்தியா போன்ற நாடுகளின் பிரச்சனையாகும். மேலும் மாசுபடுதல் எல்லை தாண்டிய பிரச்சனையாகும். எல்லா நாடுகளும் ஒருங்கிணைந்து முயற்சிகள் எடுத்தால்தான் புவி வெப்பமடைதலை கட்டுப்படுத்த முடியும். வளர்ந்த நாடுகள் புவி வெப்பமடைதலுக்கு முக்கிய காரணமாக விளங்குவதால், அவர்களால்

ஏற்படுத்தப்பட்ட பாதிப்புக்களைச் சரிசெய்ய அவர்களே முயற்சி செய்ய வேண்டும்.

---